முன்றுறையரையனார்

PALAMOLI NANURU

பழமொழி நானூறு

CONNEMARA PUBLIC LIBRARY
MADRAS

உரையாசிரியர்
புலவர் ஆ. பா. வீரராகவன், பி.லிட்.,
சிங்காரம் பிள்ளை உயர்பள்ளி,
வில்லிப்பாக்கம் : : சென்னை-600049

Comm By
VĪRARĀKAVAN (Ā Pā).

CONNEMARA PUBLIC LIBRARY
29 JUN 1977
MADRAS

புலவர் மன்றம்
21, சோலையம்மன் கோவில் தெரு,
புரசைப்பாக்கம் : : சென்னை 600007

பழமொழி நானூறு மூலமும் உரையும்

© ஆராசூர் பாஷ்யம் வீரராகவன்

புலவர் மன்ற வெளியீடு-4

விலை ரூபா 6-50

அச்சிட்டவர்: ரவிசங்கர் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 007.

பொருளடக்கம்

9 JUN 1977
MADRAS

		பக்கம்
	தற்சிறப்புப் பாயிரம்	1
	இறை வணக்கம்	1
	நூல்	
1.	கல்வி	2
2.	கல்லாதார்	5
3.	அவையறிதல்	8
4.	அறிவுடைமை	11
5.	ஒழுக்கம்	14
6.	இன்னா செய்யாமை	17
7.	வெகுளாமை	20
8.	பெரியாரைப் பிழையாமை	23
9.	புகழ்தலின் கூறுபாடு	25
10.	சான்றோரியல்பு	26
11.	சான்றோர் செய்கை	30
12.	கீழ்மக்களியல்பு	33
13.	கீழ்மக்கள் செய்கை	39
14.	நட்பின் இயல்பு	45
15.	நட்பில் விலக்கு	49
15.	பிறரியல்பைக் குறிப்பாலறிதல்	51
16.	முயற்சி	54
17.	கருமம் முடித்தல்	58
18.	மறை பிறரறியாமை	63
19.	தெரிந்து செய்தல்	65
20.	பொருள்	70
21.	பொருளைப் போற்றுதல்	73
22.	நன்றியில் செல்வம்	76
23.	ஊழ்	81
24.	அரசியல்பு	86
25.	அமைச்சர்	92
26.	மன்னரைச் சேர்ந்தொழுகல்	95
27.	பகைத்திறம்	102
28.	பகையறுக்கும் திறம்	108
29.	படை வீரர்	112
30.	இல்வாழ்க்கை	118
31.	உறவினர்	125
32.	அறஞ்செய்தல்	128
33.	ஈகை	133
34.	வீட்டு நெறி	139
35.	செய்யுள் முதற் குறிப்பு அகர நிரல்	144

பதிப்புரை

29 JUN 1977

புலவர் மன்றம் தொடங்கிய பத்தாண்டுக் கால வளர்ச்சியில், தமிழுலகிற்குச் செய்யவேண்டிய பணிகளில் சிலவற்றை மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றது.

தமிழக மாணவர்களின் தமிழறிவை மிகுவிப்பான் வேண்டி பள்ளித் துறையில் பல்வகைப் போட்டித் தேர்வுகளை நடத்துதல், பணியில் பட்டறிவு மிக்க பழுத்த தமிழ்ப் புலவர்களைப் பாராட்டுதல், பழமையும் புதுமையும் போற்றும் வகையில் தமிழ் நூல்களை வெளியிடுதல் போன்றவையாகும்.

இவ்யாண்டு மன்றத்தின் பத்தாண்டு நிறைவினைக் கருத்திற்கொண்டு, பழந் தமிழ் நூல்களுள் என்றென்றும் நாட்டு மக்களின் நாட்டத்திலுள்ளதும், பதினெண் கீழ்க் கணக்கில் ஒன்றுயதுமான 'பழமொழி நானூறு' என்ற நூலை வெளியிடுவதில் பங்கேற்றது.

மொழிப் புலவன் மொழிந்திட்ட முத்தான கருத்தனைத்தும், நாட்டு மக்கள் விழிப்புணர்விற்குறுதுணையாய் விளங்கும் வண்ணம், பரணிக்கு உரை வகுத்துத் தரணிக்குத் தந்திட்ட தண்தமிழ்ப் புலவர் திரு. ஆ வீ. கன்னைய நாயுடு அவர்களின் பேரர், மன்றத் துணைத் தலைவர், அருமை நண்பர் திரு. ஆ. பா. வீரராகவன் அவர்கள் உரை யெழுத முன் வந்தமை பாராட்டுக்குரியது. பழந் தமிழ் நூல்களின் சிறப்பினை ஆய்ந்தும், பட்டறிவில் மிக்க சீரிய கருத்தினை நினைவிற் கொண்டும் உரை விளக்கம் தந்துள்ளார்கள்.

"குலவிச்சை கல்லாமற் பாகம்படும்" என்ற மூதுரைக்கேற்ப நல்ல பல கருத்துக்களை நானூற்றின் தொடக்கத்தில் நவின்றுள்ளார். மன்றப் பணியை மனமுவந்தேற்றுச் சிறப்பித்தமைக்கு, மன்றம் எஞ்ஞான்றும் நன்றிக் கடப்பாடுடையது. இந் நூலைத் தக்க முறையில் அச்சிட்டுதவிய ரவிசங்கர் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. வே. மாணிக்கம் அவர்கட்கு மன்றத்தின் நன்றி என்றும் உரியது.

அணிந்துரை, வாழ்த்துரை, பாராட்டுரைகள் பரிந்தளித்துதவிய பல் சான்றோர்க்கும் இம் மன்றம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

தமிழகத்து அறிஞர் பெருமக்கள் இவ்வரிய நூலை யேற்று ஆதரிக்க வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
புலவர் அ. சு. கோவிந்தராசன்.
செயலாளர்

புலவர் மன்றம்,
சென்னை-7

பேராசிரியர் :
பைந்தமிழ்ப் பாவலர்,
அ. கி. பரந்தாமனார், M. A.

அணிந்துரை

'பழமொழி நானூறு' என்னும் நூல் பதினெண் கீழ்க் கணக்கைச் சேர்ந்த நூல் என்பதைத் தமிழறிஞர் பலரும் அறிவர். இந் நூல் சங்க காலத்தில் தோன்றியதன்று; சங்க காலத்துக்குப் பின் தோன்றிய நூலாகும்.

இந் நூல் வாழ்க்கைக்கு வேண்டிய பலப்பல அரிய கருத்துகளை அக் காலத்தில் வழங்கிய பழமொழிகளைக் கொண்டு விளக்கும் கடினமான நூலாகும்.

இத்தகைய கடினமான நூலுக்குச் சென்னை வில்லிபாக்கிலிருக்கும் சிங்காரம் பிள்ளை உயர்நிலைப் பள்ளியில் முதல் நிலைத் தமிழாசிரியராய் இருப்பவரும், கலிங்கத்துப் பரணிக்கு அரிய உரை இயற்றிய திரு. ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்களின் பேரரும், என் அன்பு மாணவரும் ஆகிய திரு ஆ. பா. வீரராகவன், பி. லிட்., அவர்கள் எல்லார்க்கும் விளங்கும் முறையில் மிகவும் முயன்று பொழிப்புரை எழுதி யிருக்கிறார்கள். இன்னும் பிற்சேர்க்கையாக 400 வெண்பாக்களுக்கும் கருத்துரை எழுதி வெளியிட்டால் மேலும் இந் நூலுக்குப் பயனளிக்கக் கூடும்.

திரு வீரராகவன் அவர்களின் கன்னி முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன். இதுபோன்ற முயற்சி, உரையில்லாத நூல்களுக்கும் உரையெழுத வழி செய்யும் என்று கருதுகிறேன். இவரது முயற்சி வெல்க! வாழி வீரராகவன் நீடு வாழி வாழியே!

அல்லி நிலையம்,
18, முத்து முதலி வீதி,
சென்னை-7.

அன்புள்ள,
அ. கி. பரந்தாமனார்.

பாராட்டுரை

இயலிசைப் புலவர் ச. முத்துக்குமாரசாமி
தலைவர், புலவர் மன்றம், சென்னை-7.

ஒரு நாட்டு மக்களின் மதிநலத்தையும், மனவளத்தையும், பண்பாட்டு மரபினையும் எடுத்துக் காட்டுவன பழமொழிகளேயாம். ஒளிமிக்க மாணிக்க மணிகளைப் போன்ற பழமொழிகள் உலகில் உள்ள பல்வேறு மொழிகளிலும் அமைந்துள்ளன. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய நமது மூத்த தமிழர் தம் மொழியிலும் நயமும், செறிவும், கூர்மையும் பொருந்திய பழமொழிகள் ஒன்பான் மணிக்குவியலாய் அமைந்துள்ள பாங்கினை எவரும் மறுக்கவியலாது.

பட்டறிவுத் தாயின் பிள்ளைகளாகிய பழமொழிகளை உரைநடையிலோ செய்யுட்களிலோ சேர்த்து எழுதித் தம் எழுத்து நடையை ஏற்றமுடையதாக்கினர் நம் தமிழ் அறிஞர்கள்.

சமண சமயப் பேரறிஞர் முன்றுறை அரையனார் பழமொழியின் கருத்தை விளக்கி, அவற்றைக் கற்போர் மனத்தில் பதியவைப்பதற்காகவே ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் பழமொழி ஒன்று அமையுமாறு நானூறு பாடல்களைப் பாடினார்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாக விளங்குவது இந்நூல். இந்நூலின் சுவையான பகுதிகளை இவண் சுட்டிக் காட்ட வேண்டுமெனில், இந்நூலில் கையாளப் பட்டுள்ள நானூறு பழமொழிகளையும் அவற்றின் அழகிய விளக்கங்களையும் மீண்டும் இங்கே எழுதுதல் வேண்டும். ஆம்! இந்நூலில் அமைந்துள்ள அத்தனையும் தித்திப்பவை—உள்ளங் கவர்பவை.

இந்நூலில் புனைந்துரைக்கப்பட்டுள்ள "பாம்பறியும் பாம்பினகால். நிறைகுடம் நீர் தளும்பல் இல், பசிபெரிதாயினும் புல்மேயாதாகும் புலி, குன்றின் மேல் இட்ட விளக்கு, திங்களை நாய் குரைத்தற்று. நுணலுந்தன் வாயால் கெடும்" போன்ற பழமொழிகள் இன்னும் நம்மால் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் எடுத்தாளப்பட்டு வருகின்றன.

"தனி வெந்நீர் இல்லம் சுடுதலாவாறு, புலத்தகத்துப் புள் அரைக்கால் விற்போம் எனல், கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு, யானைபோய் வால் போகாவாறு," போன்ற பழமொழிகள் தற்கால வழக்கில் வந்துலவாவிடினும் படிக்கும் போது அவை எண்ண அரங்கில் வண்ண மலர்களைப் போல் புதுமை குன்றுமல் தண்ணொளியும் நன்மணமும் பரப்புவதை நம்மால் உணர முடிகிறது.

புலவர் மன்றம் இந்நூலுக்கு இனிய, எளிய உரை ஒன்றை வெளியிடும் தொண்டினைச் செய்ய விரும்பியது. புலவர் ஆ. பா. வீரராகவன் அவர்கள் இத்தொண்டில் தம்மை ஈடு படுத்திக் கொண்டு அழகியதோர் உரை எழுதி புலவர் மன்றத்திற்குத் தந்துள்ளார்.

புகழ்மிக்க உரையாசிரியரும் தமிழுலகம் போற்றும் தக்கவருமாகிய திரு ஆ. வீ. கன்னைய நாயுடு அவர்களின் பெயரராகிய திரு ஆ. பா. வீரராகவன் அவர்கள் இந்நூலில் கையாளப்பட்டுள்ள "குலவிச்சைக் கல்லாமல் பாகம்படும்" என்ற பழமொழிக் கேற்பத் தம் புலமைப் பரம்பரையின் சிறப்பை இந்த உரை மூலம் உறுதிப் படுத்தியுள்ளார். வளமான, அளவான சொற்களால் தெளிவான உரையினை இந்நூலுக்குத் தந்துள்ளார். தமிழ்நாடு இந்நூலைப் போற்றி ஏற்று மன்ற முயற்சிக்கு நல்லாதரவு வழங்கிட வேண்டுகின்றனம்.

பெரும்புலவர்
இர. திருஞானசம்பந்தன்

டி-74, தாடண்டர் நகர்,
சைதை, சென்னை—15.

வாழ்த்துரை

உலகோர் போற்றும் உயர்தமி ழரசியின்
நலமிகு அணிகள் பற்பல ; அவற்றுள்
பதியினைக் காக்கும் பதினெண் கணம்போல்
மதியினை வளர்பதி னெண்கீழ்க் கணக்கில்,
மூன்றுறை அரையன் முதல்பார் மொழியில்
தொன்மை சான்ற பொன்மொழி ஆய்ந்தே
நானிலம் போற்ற நானூ றெடுத்து
நானூற் றுப்பாவால் நன்கன மியற்றிய
பழமொழி என்னும் அழகிய நூற்கே
விழுமிய தெளிவுரை விளங்கல் வேண்டிப்
புலவர் மரபின் நலமிகு மன்பர்,
புலவர் ஏறும் முதுபெரும் புலவர்
மே. வீ. வே. பிள்ளை முதல்வராய் மிளிரும்
மேன்மைக்கல் லூரிக்குக் கண்ணென எண்ணுறும்
ஆங்கிலத் துடனே அருந்தமிழ் பயின்ற
ஆ. பா. வீரராகவ நண்பர்,
எடுத்த முயற்சி இனிதாய் இலங்க
புலவர் பொலிவுறத் தோற்றிய மன்றினர்.
நலந்தரு நூலாய் நன்கனம் வெளியிட
தமிழ்த்தா யுடனே மூன்றுரை யரையர்
அமிழ்தம் போலும் அருமை நூல்களின்
அருமைப் பண்பை ஆய்ந்தாய்ந் துன்னி
பெருமை மிக்க உரைபல செய்கென
மேனின்று வாழ்த்தும் வாழ்த்தை யறிந்தே.
தேனினு மினிய தெளிவுரை யாத்த
வீர ராகவர் பாரதி புலவராய்
சீர்மிக வாழ்கென வாழ்த்துவன் யானே !

29 JUN 1977
MADRAS

முன்னுரை

பழமொழியின் இயல்பும் தொன்மையும்

பழந்தமிழர்கள், தங்கள் வாழ்வில் கண்ட உண்மைகளை—தங்கள் பட்டறிவால் பெற்ற விழுமிய கருத்துகளை நாட்டு மக்களிடையே உலவவிட்டனர். அவ்வுண்மைகளும் கருத்துகளும் மக்கள் நெஞ்சில் இனிது உலாவந்தன; பாமரர் முதல் படித்த பண்பாளர்வரை அனைவரும் அவற்றைப் போற்றினர். அவை திட்பமும் நுட்பமும் செறிந்தனவாய் அமைந்தன; சுருக்கமாயும் எளிமையாயும் இருந்தன. அவை பழைமையான மொழிகளாயும் கனிந்து முதிர்ந்த பழம் போன்ற இனிய மொழிகளாயும் இலங்கின. காலத்தால் முதுமையுடையன வாதலால் அவை முதுமொழி என்ற பெயரையும் பெற்றன. காலவெள்ளத்தால் அவை இலக்கிய ஏற்றமும் கவிவாணர் நாவில் நடமிடும் வளமும் பெற்ற நல்லுரைகளாய் விளங்கின.

புலவர் பெருமக்கள் தாங்கள் விளக்க முற்பட்ட கருத்துகளைப் பழமொழிவாயிலாய் வெளியிடுதலை மேற்கொண்டனர். அறிவின் நுட்பத்தை அறிவிக்க, ஆன்ற பொருளைச் சுருங்கிய சொல்லால் அமைத்துப் புகழ்பயக்கும் விழுமிய கருத்துகளைப் பாடலுள் பொருத்தி, யாவரும் எளிதில் உணருமாறு செய்தனர். இதனை 'முதுசொல்' என்றும் கூறினர். முதுசொல், முதுமொழி, பழமொழி என்பன ஒருபொருள் குறித்த பலசொற்களாம்.

பழமொழியின் இயல்பை,

> " நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
> மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக்
> குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
> ஏது நுதலிய முதுமொழி என்ப " —479

என்று தொல்காப்பியர் செய்யுளியலில் 170–ஆம் நூற்பாவில் கூறியுள்ளார்.

எனவே, பழமொழிகள் தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே மக்களிடையே பழகி வலிமை சான்றவையாய் விளங்கி வந்தமையை உய்த்துணரலாம்.

முன்றுறை அரையர்

பழமொழி நானூற்றை இயற்றியவர் முன்றுறை அரையனார் ஆவார். இவர் முன்றுறை என்ற ஊரினர். பாண்டிய நாட்டுக்கு உட்பட்ட குறுநிலமன்னர். எனவே, முன்றுறை அரையனார் ஆனார், இறைவணக்கப் பாடலால் இவர் சமண சமயத்தைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறார். தகுதியான விடங்களில் காழ்ப்பின்றிப் பிற சமய உண்மைகளை வெளிப்படுத்துதலால் இவர் சமயப் பொறையுள்ளவராகப் போற்றப்படுகிறார்.

கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் வச்சிரநந்தி சங்கம் நிலவிய காலத்தில் இந்நூல் தோன்றியிருக்கலாம். கீழ்க்கணக்கு நூல்களுள், இந்நூல் நாலடியாருக்கு அடுத்து மதித்துப் போற்றப் படுகின்றது. பழந்தமிழ் மக்கள் நானூறு என்ற எண்ணைப் பெரிதும் போற்றியுள்ளனர். இதனைப் புறநானூறு, அகநானூறு, நற்றிணை நானூறு, நாலடிநானூறு, பழமொழி நானூறு என்பவற்றால் அறியலாம்.

நூலமைதி

முன்றுறையரையனார், மன்பதைக்கு நலன் விளைவிக்கும் பண்டைப் பழமொழிகளுள் நானூற்றைத் தெரிந்தெடுத்து, அவற்றின் பொருள் விளங்குமாறு வெண்பாக்களில் அமைத்துப் பாடினார். முதுமொழிகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதுவே ஆசிரியரின் கருத்தாகலாம்.

இந்நூல் பால், இயல், அதிகார முறைமையுடன் அமையவில்லை; திருக்குறள், நாலடி போன்று அதிகாரத்திற்கு இத்துணைப் பாடல் என்று வகுத்தும் அமையவில்லை. இந்நூலில் இன்பத்துப் பகுதி பற்றிய செய்தி இல்லை; ஆனால் வீட்டு நெறியைப் பற்றிய செய்தி உள்ளது. முதன் முதலில் இந்நூலைத் திரு. சுப்பராயச் செட்டியார் அவர்கள் 1874-இல் "வரம்பின்றிக் கிடந்ததைப் பால் இயல் அதிகாரங்கள் ஆக வகுத்தும், கரலிகிதங்களால் தொக்கும் மிக்கும் பிறழ்ந்தும் இருத்தலைப் பல பிரதிகளைக் கொண்டு பரிசோதித்துப் பழைய வுரைக்கு இணங்கத் திருத்தியும் வெளியிட்டுள்ளார்" என்று திரு.சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தம் அணிந்துரையில் கூறிப்போந்தார். மேலும் இவரைப் "பழமொழியின் பதுமனார்" என்றும் சிறப்பித்துள்ளார் இதன் பின்னர் 1916இல் திருமணம் செல்வகேசவராய முதலியார் அவர்கள்

இந்நூலை ஐந்து பகுதியாகப் பகுத்து அதிகாரத் தலைப்புகள் வழங்கி, வேண்டிய விளங்கங்களுடன் வெளியிட்டுள்ளார். இதனை அடியொற்றியே, பலர் வெளியிட்டு வருகின்றனர்

நூல்நுவலுவன

வரலாற்றுக்கு முற்பட்ட பழந்தமிழ் முடியுடைவேந்தர் சிலரைப் பற்றியும் குறுநில மன்னர்களைப் பற்றியும் இந்நூலால் அறிகிறோம். பழந்தமிழ் மக்களின் பண்பாட்டையும் வாழ்க்கை நெறிகளையும் அறிவதற்கு இந்நூல் பெரிதும் துணைநிற்கிறது. புராண இதிகாசக் கதைகளில் அமைந்த நூற்றலைவர்களைப் பற்றிய குறிப்புகளும் காணக் கிடக்கின்றன. கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றுடன் ஒப்புமை யுடைய கருத்துகளை இந்நூல் கூறுகிறது. இந்நூலில் கூறியுள்ள பழமொழிகளில் சில வழக்கொழிந்தன; சில புதிய வடிவம் பெற்றுத் துலங்குவன.

இந்நூலில் அமைந்த ஒவ்வொரு வெண்பாவின் ஈற்றடி பழமொழியினையும், முதலிரண்டு அடிகள் பழமொழியின் விளக்கத்தினையும், மூன்றும் அடி ஆடூஉ, மகடூஉ, முன்னிலைகளுள் ஒன்றனையும் பெரும்பான்மையும் பெற்று அமைந்துள்ளது.

கரிகாலன்

"குலவிச்சை கல்லாமல் பாகம்படும்" (7) என்ற பழமொழியால் கரிகாலனின் 'முறை வழங்கும் திறத்தை' அறிகிறோம். இச் செய்தியினைப் பொருநராற்றுப் படையுள், "முதியோர் அவைபுகு பொழுதிற்றம் பகைமுரண் செலவும்" (187-188) என்ற தொடர்களாலும், மணி மேகலையில் பளிக்கறை புக்க காதையில் "இளமைநாணி முதுமை யெய்தி, உரைமுடிவு காட்டிய உரவோன்" (107-108) என்ற வரிகளாலும் அறிகிறோம்.

கரிகாலன் அரசுரிமை பெற்றதை "உறற்பால தீண்டா விடுதல் அரிது" (231) என்ற பழமொழியால் உணர்கிறோம். சுடப்பட்டு உயிர் உய்ந்த கரிகாலன், இரும்பிடர்த் தலையாரின் துணை வலியால் ஆட்சியைச் செம்மையாக நடத்தினன். இச் செய்தியினை, "உயிருடையார் எய்தாவினை இல்லை" (240) என்ற பழமொழியினுல் விளக்குதலை ஆசிரியர் மேற்கொண்டார்.

தொடித்தோட் செம்பியன்

'கூரம்பு அடியிழுப்பின் இல்லை அரண்' (156) என்ற பழமொழியினை விளக்க, ஆசிரியர், தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனின் வரலாற்றைத் துணையாகக் கொண்டுள்ளார்.

இச் செம்பியனின் வரலாற்றைப் புறநானூற்றிலும் (39) மணிமேகலையில் விழாவறை காதையிலும் சிறுபாணாற்றுப் படையிலும் (79-82) காண்கிறோம்.

பல்யானைச் செல்கெழு குட்டுவன்

பல்யானைச் செல்கெழு குட்டுவனின் புகழைப் பாடிய பாலைக் கௌதமனுக்கு அவர்தம் துணைவியுடன் வீடுபேற்றை அடைய குட்டுவன் வேள்வி இயற்றினான். இச் செய்தியினைப் பதிற்றுப் பத்தின் மூன்றாம் பத்தில் இறுதியில் அமைந்த பதிகத்தால் விளக்கமுற உணர்கிறோம். சிலப்பதிகாரத்தில் நடுகற்காதையில் 'நான்மறையாளன் செய்யுட்கொண்டு— மேனிலை யுலகம் விடுத்தோனாயினும்' என்ற (137-138) அடிகளில் இந் நிகழ்ச்சியைக் குறித்திருத்தலைக் காணலாம். முன்றுறை அரையனார், செல்கெழு குட்டுவனின் ஈகை இயல்பை வெளிப்படுத்தக் "கொடுப்பவர்தாம் அறிவர் தம் சீரளவு" (381) என்ற பழமொழியினைக் கைக் கொண்டார்.

மனுநீதிச் சோழன்

'முறைமைக்கு மூப்பிளமை இல்' (243) என்ற பழமொழியை விளக்கவந்த ஆசிரியர், மனுநீதிச் சோழனின் வரலாற்றை வெளிப்படுத்தும் வாயிலாக அதனை மேற்கொண்டார். இச் செய்தியினைச் சேரன் தம்பி இளங்கோ இசைத்த சிலம்பில் வாழ்த்துக் காதையில், அம்மானை வரியில் "குறை வில் உடம்பரிந்த கொற்றவன் முன்வந்த, கறவை முறை செய்த காவலன் காணம்மானை" (18) என்றும், கட்டுரை காதையில், "கறவை முறை செய்தோன்" என்றும் வழக்குரை காதையில், "ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட, தான்தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்" என்றும் காண்கின்றோம்.

பொற்கைப் பாண்டியன்

பொற்கைப் பாண்டியன் பிறர் காணவில்லை என்பதனால் அமைதியாய் இராமல், தன் குற்றத்திற்குத் தானே சான்றாள

ளுகித் தன் கையைக் குறைத்துக் கொண்டான். 'காணர் எனச் செய்யார் மாணவினை'' (77) என்ற பழமொழியால் பாண்டியனின் பண்பை அறிகிறோம். சிலப்பதிகாரக் கட்டுரை காதையில் இந் நிகழ்ச்சிக்குச் சான்றுள்ளமை உணரலாம்.

பாரியும் பேகனும்

பாரி மகளிரின் ஈகை இயல்பை ஒன்றுறு முன்றிலோ இல்'' (3 2) என்ற பழமொழியால் உணர்கிறோம். அறிமடத்திற்குப் பாரிவேந்தனையும் பேகனையும் எடுத்துக் காட்டாகக் காட்டுகிறார். அறிமடமும் சான்றோர்க்கணி'' (75) என்ற பழமொழியின் வாயிலாக அவர்கள் முல்லைக்குத் தேரினையும் மயிலுக்குப் போர்வையினையும் அளித்தமையை அறிகிறோம். இச் செய்தியினைப் புறப்பொருள் வெண்பா மாலையில் இயல்மொழி வாழ்த்திற்கு அமைந்த வெண்பாவில் இப் பழமொழிப் பாடலின் முதல் அடி அப்படியே அமைந்துள்ளது. இவ் வள்ளல்களின் வள்ளண்மையைச் சிறுபாணாற்றுப் படையில் 85 முதல் 91 வரிகளால் அறியலாம்.

பழமொழிகளால் இதிகாசக் கதைகளை அறிதல்

பலராமன்

நண்பர் துன்பம் அடைந்தபோது, அவர்தம் துன்பம் துடைக்க வாராமல், அவர் இறந்தபின் அவர் பொருட்டுத் தவமியற்றுவாரை, "கழிவிழாத் தோளேற்றுவார்'' (138) என்ற பழமொழியால் தெளிவாக்குகிறார். இதற்குச் சான்றாகப் பால்மேனியனான பலராமனின் செயலை எடுத்துக் காட்டுகிறார்.

பாண்டவர் மீட்சி

"உய்வதற்கு உய்யாவிடம் இல்லை (235) என்ற பழமொழியால் பாண்டவர் அரக்கு மாளிகையினின்று உய்ந்து சென்ற செய்தியைக் கூறுகிறார்.

தருமன்

"பொய்ம்மை புகலுதலால் அடைவது நரகம்'' என்பதனை நன்கு உணர்ந்திருந்தும் தருமன், தன் குடியைக் காக்கவும் பாரதப் போரில் வெற்றியைக் காணவும் பொய்யுரை புகன்றான்; நரகம் புக்கான்' என்பதனைக் "குடிகெட வந்தால்

அடிகெட மன்றிவிடல்," (289) என்ற பழமொழியால் தெரிவிக்கிறார்.

கண்ணபிரான்

மாயவனையும் யமுனைத் துறையில் நப்பின்னை தன் பேரழகினால் மயக்குறுத்தினாள், என்பதனைச் "சால்பினைச் சால்பறுக்குமாறு" (335) என்ற பழமொழியினை விளக்குதற்குரிய கருப்பொருளாக மேற்கொண்டார். இந்நிகழ்ச்சியைச் சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவையில் "வஞ்சம் செய்தான் தொழுனைப்புனலுள், நெஞ்சம் கவர்ந்தாள் நிறையென்கோயாம்' என்றும் இன்னிலையில் " ஒப்புயர்வில் வேட்டோன் ஒரு நிலைப்பட்டாழ்ந்த செயல் நப்பின்னை ஞாலம் ஒருங்கறிக ...." என்பதனாலும் அறிகிறோம்.

கௌரவர் பாண்டவரோடு கவறுடிப் (சூதாடி) பகைமை கொண்டு வேறுயினர். எனவே சான்றோர், " உறவினரோடு கவறுடார் " என்பதனை, " காதலோடாடார் கவறு " (357) என்ற பழமொழியால் பாங்குற அறிவிக்கிறார்.

மாபலி

ஆராயாது குற்றமுள்ள செயலைச் செய்வோர் தாங்களே துன்பங்களை வருவித்துக் கொள்வோராவர். " தாஅம் தர வாரா நோய் " (184) என்ற பழமொழிக்கு விளக்கம் தர, மூன்றடி மண்வழங்கித் தன்னையே இழந்த மாபலியின் கதையைக் கையாளுகிறார்.

சிவபெருமான்

தம்மை நட்பாக்கிக் கொண்டவரை நல்லோர், தாம் வேறு அவர் வேறு என்று வேறுபாடு கருதாமல் தம்முடல் முழுவதுமாகக் கொள்வர். சிவபெருமானை அன்புடன் அடைந்த உமையன்னையை அவர், தம் உடலில் ஒரு கூறுகவே கொண்டார். இதனை. "முழுமெய்யும் கொள்பவே நட்டாரை ஒட்டியுழி " (125) என்ற பழமொழியால் உணர்த்துகிறார்.

திருக்குறள் கருத்துகள்

இந்நூலாசிரியர் குறட்கருத்துகளைப் பலவிடங்களில் மேற்கொண்டுள்ளார். நிறைகுடம் நீர்தளும்பல் இல் (10) என்ற பழமொழிக் கருத்தைப் 'பணியுமாம் பெருமை' (978) என்ற குறள்கருத்தில் காண்கிறோம். 'அறிவில்லான்

மெய்தலைப்பாடு' (12) என்ற பழமொழிக் கருத்து, 'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் (249) என்ற குறளில் அமைந்த பொருளாகும். 'ஒழுக்கத்தின் மிக்க உயர்வு' (16) என்ற பழமொழிக்குரிய கருப்பொருளை "ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை" (147) என்ற வான் தமிழ் வள்ளுவத்தில் காண்கிறோம். 'சொல்லின் தொகை யறிந்த தூய்மையவர், அவையறிந்து ஆய்ந்து சொல்லுதல் வேண்டும்' (721) என்ற திருவள்ளுவரின் உள்ளக் கிடக் கையைத் 'தோற்பன கொண்டு புகாஅர் அவை' (18) என்ற பழமொழியால் உணர்கிறோம்.

திருவள்ளுவர், 'யாப்பினுள் அட்டிய நீர்' (113) என்று உவமையாகக் கொண்டதனை முன்றுறை யரையனார் (312) பழமொழியாகக் கையாண்டுள்ளார்.

"பறைக்கண் கடிப்பிடுமாறு" (179) என்ற பழமொழிச் செய்தியை அறைபறையன்னர் கயவர் (1076) என்ற குறளோவியத்தில் காண்கிறோம்.

'அஞ்சுவார்க்கில்லை யரண்' (286) என்ற பழமொழிக்கு 'அச்சமுடையார்க்கு அரண் இல்லை' (534) என்ற திருக் குறளில், பொருள் ஒற்றுமை இருத்தல் கண்டு உவக் கிறோம். இளைதாக முள்மரம் கொல்க களையுநர கைகொல் லும் காழ்த்த விடத்து' (879) என்ற குறள் நெறியை, தனி மரம் காடாதல் இல்' (287) என்ற பழமொழிப் பாடலின் முதலிரண்டு அடிகளில் வற்புறுத்தக் காண்கிறோம். இவை போன்று மேலும் பல ஒப்புமைப் பகுதிகளை இந் நூலுள் கண்டு சுவைக்கலாம்.

நாலடியார் கருத்துகள்

'கற்கிள்ளிக் கையுய்ந்தாரில்' (49) என்ற பழமொழியை நாலடி நானூறில் 'கற்கிள்ளிக் கையிழந்தற்று' (336) என்று இருத்தலைக் காணப்பெறுகிறோம். 'கூர்த்துநாய் கௌவிக் கொளக் கண்டும் தம் வாயால் பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை (70) என்று நாலடியார் நயந்து போற்றியதைப் பழமொழியில், 'நாய் கவ்வின் பேர்த்துநாய் கவ்வினார் இல் (50) என்று பாங்குற இருத்தலை உணர்கிறோம்.

'நரையான் புறத்திட்ட சூடு மாயா' (80) என்ற பழ மொழியை, "பெரியார்கண் தீமை கருநரைமேல் சூடே போல் தோன்றும்" (186) என்று உவமையாகக் கையாண் டுள்ளமையைக் காண்கிறோம்.

நாலடியாருள் உவமையாகக் கொண்டவற்றைப் பழமொழி நானூறில் பழமொழிகளாக எடுத்தோதப் பெற்றுள்ளன. பழமொழி நானூறில் "கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு" (96) என்பது நாலடியில் கைக்குமாம் தேவரே தின்னினும் வேம்பு' (112) என்றும் ஒருவர் பொறை யிருவர் நட்பு (133) என்ற பழமொழியினை நாலடியாரிலும் (223) "மகனறிவு தந்தையறிவு" 146, என்ற பழமொழிதனை நாலடியிலும் (367) அம்மொழிகளைப் பொன்னே போல் போற்றியிருத்தலைக் காண்கிறோம். "உறற்பால தீண்டா விடுதல் அரிது (231) பழமொழியாகவும், நாலடியில் (107) உவமையாகவும் போற்றினமை அறிகிறோம்.

"தளிர்மேலே நிற்பினும் தட்டாமற் செல்லா உளி" என்று நாலடி நவின்ற உவமையைப் பழமொழியாக (170) முன்றுறை அரையனுர் குறித்துள்ளார். மேலும் 'திரையவித் தாடார் கடல்' 319 என்ற பழமொழிச் செய்தியினை, நாலடியில் "பெருங்கடலாடிய சென்றார் ஒருங்குடன் ஓசை அவிந்த பின் ஆடுதும்" (331) என்று குறித்திருத்தலைக் கண்டு சுவைக்கலாம்.

நான்மணிக் கடிகை கருத்துகள்

"அளறுடிக் கண்ணும் மணிமணியாகி விடும்" (73) என்பது பழமொழி. இப் பழமொழிச் செய்தியினை; மாசு படினும் மணிதன்சீர் குன்றாதாகும் (99) என்று நான்மணிக்கடிகையில் காணலாம். "அயிலாலே போழ்ப அயில் (9) என்ற முன்றுறையரையனுர் கூற்றை விளம்பிநாகனுர், 'இரும்பின் இரும்பிடை போழ்ப" (35) என்று ஏற்று மொழிந்திருத்தலை உணர்கிறோம்.

சிறுபஞ்சமூலம் :

'பூத்தாலும் காயா மரமுள' (94) என்று தொடங்கும் பழமொழிப் பாடலின் முதல் அடியைச் சிறுபஞ்ச மூலத்தில் 23-ஆம் பாடலில் அப்படியே பயின்றிருத்தலைக் கண்டு மகிழ்கிறோம். "காக்கையைக் காப்பிட்டசோறு" (209) என்ற பழமொழியைக் காரியாசான் தம் சிறுபஞ்ச மூலத்தில் " காக்கைக்குக் காப்படுத்த சோறு " (40) என்று வரைந்துள்ளார்.

திரிகடுகம் :

'உமிக்குற்றுக்கை வருந்துமாறு.' (349) என்ற பழமொழியினை நல்லாதனார் தம் திரிகடுகத்தில், 'வெகுண்டுரைக்கும் நோன்பிலியும் இல்லது காமுற்றிருப்பானும் கல்வி செவிக் குற்றம் பார்த்திருப்பானும்'' ஆகிய மூவர், ''உமிக்குத்திக் கைவருந்து வார்'' (28) என்று கூறியுள்ளார்.

சில அரிய செய்திகள் :

ஆடு திருடும் கள்ளர். காவலாக இருக்கும் நாய்க்கு. அது விரும்பி உண்ணும் எலும்பினை இட்டுத் தம் பணியினை முடித்துக் கொள்வராம். இன்றும் பலர் தம்பணியினை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் வேண்டிய ஒன்றனைக் கொடுத்து முடித்துக் கொள்ளுவதனைக் காணுகிறோம். இச் செய்தியினை 'இடைநாயிற் கென்பிடுமாறு'' (306) என்ற பழமொழியினால் அறிந்து உவகை கொள்கிறோம்.

பகைமுடிக்க வேண்டுவதாயின் அவர்கள் மீண்டும் தலையெடுத்துத் தளிர்க்காதவாறு சாய்க்க வேண்டும். அவ்வாறல்லாமல், கிளையை முரித்தும், முரிக்காமலும் ஒடியெறிந்தால் பகை தீராது. இதனை ''ஒடியெறியத் தீராப் பகை'' (311) என்று கூறுகிறார். இதனைப் பெரிய திருமொழியில் 6-ஆம் பாசுரத்தில், ''இடையன் எறிந்த மரமே யொத்திராமே'' என்று கூறியிருத்தல் கற்று இன்புறத்தக்கதாம்

உடும்பின் ஊன், சுவையுடைத்தாதல் வேண்டும்; அன்றி, கிடைத்தற்கரிய உயரிய ஊனாதல் வேண்டும். எனவே 'நாய் கொண்டால் பார்ப்பாரும் தின்பர் உடும்பு' (36) என்கிறார் முன்றுறையரையனார். மேலும். காக்கையின் சொல்லை இகழ வேண்டாவென்கிறார். காக்கை கரைதல் நன்னிமித்த மாதலை ஐங்குறு நூற்றில் 391-ஆம் பாடலில், ''காளையொடஞ்சில் வோதியை வரக்கரைந்திவே'' என்று உடன்போகிய தலைமகள் மீளுதற் பொருட்டு நற்றாய் கூற்றாகக் கூறியிருத்தலால் தெற்றென உணர்கிறோம்.

ஆட்டின் பின்னே நாய் தொடருமானால், ஆடு தொடர்ந்து முன்னே செல்லாததாகும். எத்துணை வலிமையுடன் ஆட்டின் முகம் முன்னே இருக்குமாறு இழுத்தாலும் ஆடுதொடர்தல் இல்லையாம். ஆட்டின் அரிய பண்பை, 'போகாதே நாய் பின்னதாகத் தகர்'' (305) என்ற பழமொழியால் தெளிவாக்குகிறார்.

எல்லாரையும் இழித்தும் பழித்தும் பேசிச் செருக்குற்று வாழ்வார், தம்மின் வலிய பகைவரை வெகுளச் செய்தால், அவரால் உயிரிழப்பர். எனவே, அவ்வியல்புடையார் வீணே போர்க்களத்துள் உயிரிழந்து, நடுகல்லின் புறத்தே வைத்த உணவினை உண்பவராவர். ஆம். இதனைப் பலிப்புறத்துண்பார் உணு'' (296) என்ற பழமொழியால் உணர்கிறோம். போரில் இறந்தவர்க்கு நடுகல் அமைப்பதுவும் அவர்கள் உண்ண உணவு முதலியன வைப்பதுவும் பழந்தமிழர் வாழ்க்கை நெறி. ''விழுத்தொடை மறவர் வில்விடத் தொலைந்தோர், எழுத்துடை நடுகல்'' என்ற ஐங்குறு நூற்றுப் பாடல் வரிகள் அதற்குச் சான்றாக அமைகின்றன.

'முயல் விட்டுக் காக்கை தினல்' (372) என்ற பழமொழிக் கருத்தினை, அப்பர் தேவாரத்தில் 'முயல் விட்டுக் காக்கையின் பின் போனவாறே' என்று இருத்தலைக் கண்டு மகிழ்கிறோம்.

தம்மோடு கலந்து பழகி, தோழமை பாராட்டிய நட்பினரைப் பிரிந்து வாழ்தல் துன்பந் தருவதாகும். இதனைப் '' பேயோடாயினும் பிரிவு இன்னாதே '' (127) என்று ஓரிடத்தில் கூறுகிறார். பிறிதோரிடத்தில் ஒருதாய் வயிற்றிற் பிறந்தோரும் இணைந்து நெடுங்காலம் வாழ்தல் துன்பந் தருவதாகும் என்கிறார். இதனைத் ''திருவொடும் இன்னாது துச்சு'' (357) என்று கூறுகிறார். இஃது ஒன்றற் கொன்று மாறுபட்ட கருத்துகளாம். எனவே, முன்றுறையரையர் தாம் விளக்கவேண்டிய பழமொழிகளுக்கு ஏற்பத் தம் கருத்தைக் கூறியுள்ளார் என்று கோடலே அமையும்.

கோணும், மரிசாதி, புகர்வு கூதறைகள் போன்ற சொற்கள் பாண்டிய நாட்டில் வழங்கிய வட்டார வழக்காதல் வேண்டும். கடினை, சனங்கள், அப்பம், பலிபீடம், லோபிக்கும் முதலிய சொல்மரபுகளைக் காண்கிறோம்.

நன்றியுரை

என்னை இவ்வரிய பணியில் ஈடுபடுத்திய புலவர் மன்றச் செயலாளர்களுக்கும் ஒப்புதல் வழங்கிய செயற் குழுவினருக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நூல் அச்சாகுங்கால் உடனிருந்து உதவிய தேர்வுக் குழுத் தலைவர், புலவர் இர. திருஞான சம்பந்தம் அவர்களுக்கும் மன்றத் துணைத்தலைவர் புலவர் எஸ். சங்கரன் அவர்களுக்கும் மன்றப் பொருளாளர் புலவர் சீனி. விசயராகவன் அவர்களுக்கும் கடப்பாடுடையேன்.

அணிந்துரை வழங்கிய என் இனிய நல்லாசிரியர் பைந்தமிழ்ப் பாவலர், அ.கி. பரந்தாமனார் எம்.ஏ. அவர்களுக்கும் பாராட்டுரை வழங்கிய புலவர் மன்றத்தலைவர் இயலிசைப் புலவர் ச. முத்துக்குமரசாமி அவர்களுக்கும் வாழ்த்துரை நல்கிய பெரும்புலவர் இர. திருஞான சம்பந்தன் அவர்களுக்கும் பதிப்புரை எழுதிய என் உழுவலன்பர், மன்றச் செயலாளர், புலவர் அ.சு கோவிந்தராசன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

யான் தெளிவுரை எழுதி வெளியிட அனுமதி வழங்கி ஊக்குவித்த எம்பள்ளித் தாளாளர் திரு. என்.எஸ்.பினாகபாணி அவர்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நூல் தங்கள் கரங்களில் கவினுறத் தவழ அச்சிட்ட என் அன்பர் திரு. வே. மாணிக்கம் அவர்களுக்கும் மேலட்டை வண்ண முகப்பு அமைத்த ஓவிய நண்பர் நல்லசிவம் அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக.

தமிழ் கூறு நல்லுலகு என் முயற்சியினை வரவேற்று வளப்படுத்துவதாக.

அன்பன்,

ஆ. பா. வீரராகவன்

"பரணி இல்லம்"
60/அ, ஸ்டாரஹன்ஸ்சாலை,
சென்னை-12

முதற்பதிப்பு—பிப்ரவரி, 1977.

தீங்குரைக்கும் நாவிற்கு நல்குரவு இல்

சங. ஆவிற்(கு) அரும்பணி தாங்கிய மாலையும்
கோவிற்குக் கோவலன் என்றுலகம் கூறுமால்
தேவர்க்கு மக்கட்(கு) எனல்வேண்டா; தீங்குரைக்கும்
நாவிற்கு நல்குர(வு) இல்.

ஆநிரைகளுக்கு வந்த அரிய துன்பத்தைப் போக்கிய திருமாலையும் ஆநிரைகளுக்கே தகுதியான இடையன் என்று உலகத்தவர் கூறுவர். எனவே, தேவர்க்கு உரைக்கும் சொல் 'இது' மக்களுக்கு உரைக்கும் சொல் 'இது' என்று வேறுபடுத்தவேண்டுவதில்லை. தீங்குரைக்குமிடத்து நாவிற்குச் சொல் தட்டுப்பாடு இல்லை.

6. இன்னா செய்யாமை

நோவச் செய் நோயின்மை இல்

சச. பூவுட்கும் கண்ணாய் ! பொறுப்பர் எனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா.
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை இல்.

தாமரை மலரும், தாம் ஒப்பாவதற்கில்லையே என்று மனம் வருந்தும் கண்ணையுடையவளே! தேவர்க்கும் கைகூடாத நெருங்கிய அன்பினையுடையவர்க்காயினும், துன்பப்படுத்துதலால் துன்பம் அடையாதிருப்பது இல்லை. எனவே இவர் தாம் செய்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்வார் என்று எண்ணி, எவ்வளவு எளியராயினும் துன்பம் செய்தல் வேண்டா.

தனக்கின்னா இன்னா பிறர்க்கு

சரு. வினைப்பயன் ஒன்றின்றி வேற்றுமை கொண்டு
நினைத்துப் பிறர்பனிப்ப செய்யாமை வேண்டும்
புனப்பொன் அவிர்சுணங்கிற் பூங்கொம்பர் அன்னாய் !
தனக்கின்னா இன்னா பிறர்க்கு.

நிலத்தில் தோன்றும் பொன்போல விளங்கும் தேமலையுடைய பூங்கொம்பைப் போன்றவளே! தனக்குத் துன்பம்

தருவன மற்றவர்க்கும் துன்பம் தருவனவாம். ஆதலால், தான் செய்யும் செயலில் பயன் ஒருசிறிதும் காணுமல், வீணே பகைமை கொண்டு மற்றவர்க்குத் துன்பம் தருவனவற்றை ஆராய்ந்து, செய்யாமை வேண்டும்.

நாயும் உடையானைக் கவ்வி விடும்

சசா. ஆற்ருர் இவரென் றடைந்த தமரையும்
தோற்றத்தாம் எள்ளி நலியற்க—போற்ருன்
கடையடைத்து வைத்துப் புடைத்தக்கால் நாயும்
உடையானைக் கவ்வி விடும்.

பாதுகாக்காமல், வாயிலை அடைத்துவைத்து அடித்தால், நாயும் வளர்த்தவனையே கவ்வித் துன்பப் படுத்தும். ஆதலால் தம்மை அடைக்கலம் அடைந்த உறவினர்களையும் "இவர் நம்மை எதிர்க்கும் வலிமையற்றவர்" எனக் கருதி, மற்றவர்க்குத் தெரியுமாறு தாம் இகழ்ந்து பேசித் துன்பப் படுத்த வேண்டா.

முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு பின்பகல் கண்டு விடும்

சஎ. நெடியது காண்கிலாய் நீயெளியை ; நெஞ்சே !
கொடியது கூறிஞய்; மன்ற—அடியுளே
முன்பகல் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பின்பகல் கண்டு விடும்.

மனமே! பின்பு நீண்ட காலத்திற்கு மிக்குவரும் துன்பத்தை அறிய முடியாமல், பிறர்க்குத் துன்பம் செய்வோம் என்று நமக்குக் கொடிய மொழிகளைக் கூறிஞய். நீ ஒன்றும் அறியாய. மற்றவனுக்கு முன்பொழுதில் துன்பம் செய்தவன், அந்நிலையிலேயே தனக்கு வரும் துன்பத்தினைப் பின்பொழுதில் உறுதியாக அடைவான்.

ஆற்ருது அவர் அழுத கண்ணீர் அவை அவர்க்குக் கூற்றமாய் வீழ்ந்து விடும்

சஅ. தோற்றத்தால் பொல்லார் துணையில்லார் நல்கூர்ந்தார்
மாற்றத்தால் செற்ருர் எனவலியார் ஆட்டியக்கால்,
ஆற்ரு(து) அவர்அழுத கண்ணீர் அவை, அவர்க்குக்
கூற்றமாய் வீழ்ந்து விடும்.

பிறந்த குடிப்பிறப்பால் பொலிவில்லாதவரும், ஒரு துணையில்லாதவரும், வறியவரும் தாம் சொல்லும் சொற்களால் நமக்குப் பகைவரும் ஆவர் எனக்கருதி, அவரைக் காட்டிலும் குடிப்பிறப்பு, துணை, செல்வம் முதலியவற்றால் வலிமை சான்றவர், அவை இல்லாதவரைத் துன்பப்படுத்தினல். அவர்கள் அவைகளைப் பொறுக்க முடியாமல் சிந்திய கண்ணீரே, அவர்க்கு எமனாய் அமைந்துவிடும்.

கல்கிள்ளிக் கைஉய்ந்தார் இல்

௪௯. மிக்குடையர் ஆகி மிகமதிக்கப் பட்டாரை
ஒற்கப் படமுயறும் என்றல் இழுக்காம்
நற்(கு)எளி(து) ஆகி விடினும் நளிர்வரைமேல்
கற்கிள்ளிக் கையுய்ந்தார் இல்.

பெரிய மலைமேலுள்ள கல்லைத் தோண்டிக் கைவருந்துவதிலிருந்து தப்பினர் இலர். ஆதலால் செல்வம் மிகுதியுடையவராகிப் பிறரால் மிகவும் மதிக்கப்பட்டாரை, அவர்கள் வறியவர் ஆகுமாறு முயலுவோம், என்று நினைத்தல், மிகவும்எளிமையானாலும் தமக்குக் குற்றமாகும்.

"நாய் கவ்வின் பேர்த்து நாய் கவ்வினர் இல்"

௫௦. நீர்த்தகவு இல்லார் நிரம்பாமைத் தந்நலியின்,
கூர்த்தவரைத் தாநலிதல் கோளன்றால் சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினர் இல்.

நாய் கோபித்துக் கவ்வினல் அதனைப் பார்த்து ஓடிச் சென்று மீண்டும் அந்நாயைக் கடித்தவர் இலர். அவ்வாறே நற்பண்பாகிய தகுதியில்லாதவர். அறிவு நிரம்பாமையால் தம்மைத் துன்பப்படுத்துவாராயினும், மனவெழுச்சி கொண்டு தாமும் அவரைத் துன்புறுத்துதல் சால்புடைய பெரியவர்களின் கொள்கை அன்று.

குறுநரிக்கு நல்ல நாராயம் கொளல்

௫௧. காழார மார்ப ! கசடறக் கைகாவாக்
கீழாயோர் செய்த பிழைப்பினை மேலாயோர்
உள்ளத்துக் கொண்டுநேர்(து) ஊக்கல், குறுநரிக்கு
நல்லநா ராயங் கொளல்.

திண்ணிய முத்துமாலையை அணிந்த மார்பை உடைய வனே! குற்றம் நீங்க நல்லொழுக்கத்தைக் காவாத கீழ் மக்கள் செய்த தவறுகளை, மேன்மக்கள் தம் மனத்துள் கொண்டு, அக் கீழ்மக்களை எதிர்த்துத் தீங்கு செய்யமுயலுதல், சிறிய நரியைக் கொல்லுவதற்குத் தூய ஆற்றலுள்ள ' நாராயணம்' என்னும் அம்பினை எய்யக்கைக் கொள்ளுவதனோடு ஒக்கும்

7. வெகுளாமை

நனிவெந்நீர் இல்லம் சுடுகலாவாறு

௫௨. இறப்பச் சிறியவர் இன்னா செயினும்,
பிறப்பினால் மாண்டார் வெகுளார்.—திறத்துள்ளி
நல்ல விறகின் அடினும் நனிவெந்நீர்
இல்லம் சுடுகலா வாறு.

கீழ் மக்கள் மிகவும் துன்பம் செய்தாலும் மாண்புடைய குடிப்பிறப்பினர் அவரைச் சினவார். ஆராய்ந்து நல்ல விற கிட்டுக் காய்ச்சினாலும், மிகவும் வெம்மையடைந்தநீர் வீட் டினை எரிக்கமுடியாத தன்மையதாகும்.

தெளியானைத் தேறல் அரிது

௫௩. ஆறாச் சினத்தன் அறிவிலன், மற்றவனை
மாறி ஒழுகல் தலையென்ப—ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப !
தெளியானைத் தேறல் அரிது.

காற்றால் அலைகள் கரைமேல் ஏறி உலவும் வளைந்த கடல் நீரினையுடைய நெய்தல் நிலத்தவனே! மாறாத கோபத்தையுடையவன் அறிவில்லாதவன் ஆவான். அவனை நீங்கி ஒழுகுதல் சிறந்ததென்று நல்லோர் நவில்வர். மனத் தெளிவில்லாதவனை நம்புதலும் இயலாதாம்.

நெடும்பகை தற்செய்யத் தானே கெடும்

௫௪. உற்றதற் கெல்லாம் உரஞ்செய்ய வேண்டுமோ ?
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையும்.
நெற்செய்யப் புல்தேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்.

நெற்பயிர் செய்பவே வயலில் இருந்த புல்தானே அழிந்தாற் போன்று, ஒருவன் தன்னை வலிமையுள்ளவனுகச் செய்வதனுல் அவனது நீண்ட நாளைய பகைமை தானே அழியும். அதுபோல, கற்று அறிந்தவர்கள். ஏற்பட்ட இடையூறுகளுக்கெல்லாம் தம்மைத் தனித்தனியே வலிமை செய்து கொள்ள வேண்டுமோ? தங்களிடம் சினம் என்னும் மனவெழுச்சி எழாமல் காத்துக் கொள்ளுதலே போதும்.

விளக்கெலி கொண்டு தனக்குநோய் செய்து விடல்

ருரு. எய்தா நகைச்சொல் எடுத்துரைக்கப் பட்டவர்
வைதாராக் கொண்டு விடுவர்மன். அஃதால்
புனற்பொய்கை ஊர! விளக்கெலி கொண்டு
தனக்குநோய் செய்து விடல்.

நீர் நிறைந்த குளங்கள் சூழ்ந்த மருத நிலத்தவனே! தமக்குப் பொருந்தாத இகழ்ச்சி மொழிகளை மற்றவர்களால் எடுத்துரைக்கப்பட்டவர், தம்மை இகழ்ந்தவராக, அறிவின்மையால் மனத்தில் கொண்டு சினப்பர். அச் செய்கையானது, விளக்கினை எலி இழுத்துச் சென்று தனக்குத் துன்பத்தினைத் தானே செய்து கொள்ளுவதனேடு அமையும்.

அம்பலம் தாழ்க் கூட்டுவார்

ருசா. தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க,—பரிவில்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவாரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார்.

அறிவில்லாதவர் தம்மை இகழ்ந்து சொல்லும் மொழிகளைக் கேட்கப்பெற்றல், துன்பம் அடையாதவர் போன்று பொறுத்திருக்க. மற்றவர் மேல் அன்பில்லாத அயலார் வாயை அடக்கப் புகுவார், பொது இடத்தைத் தாழிடுவாரோடு ஒப்பர்.

செய்யாத எய்தா

ருஎ. கையார உண்டமையால் காய்வார் பொருட்டாகப்
பொய்யாகத் தம்மைப் பொருளல்லார் கூறுபவேல்,
மையார உண்டகண் மாணிழாய்! என்பரிவ?
செய்யாத எய்தா வெனின்.

மிகுந்த மையிட்ட! கண்களையும் மாட்சிமைப்பட்ட அணிகளையும் உடையவளே தம்பணிகவர் கொடுத்த பொருளைக் கைநிறையக் கொண்டு உண்டமையால், அவர்கள் கூறியதைச் செய்யாத போது, சினம் கொள்வார் என்பது காரணமாகக் கீழ் மக்கள், தம் மேல் உண்மைகலவாத பழிச் சொற்களைக் கூறினால், 'ஒருவர் செய்யாத குற்றங்கள் அவரை அடையா' என்பது மெய்மையானால், அதற்காக வருந்துவது யாது காரணம் பற்றியோ ?

பசுக்குத்தின் குத்துவார் இல்

௫அ. ஆய்ந்த அறிவினர் அல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார் ?—தீந்தேன்
முசுக்குத்தி நக்கு மலைநாட ! தம்மைப்
பசுக்குத்தின் குத்துவார் இல்.

இனிய தேன் கூட்டை ஆண் குரங்குகள் மோதிச் சிந்துகின்ற தேனை நக்குகின்ற குறிஞ்சி நிலத்தவனே! தம்மைப் பசு இடித்தால், சினந்து தாமும் அதனை இடிப்பவர் இலர். ஆதலால், ஆராய்ந்தறியும் அறிவில்லாத கீழ் மக்கள், தம்மைச் சொல்லிய பொருளற்ற பேச்சுக்கு, நூல்களை முறையாகக் கற்றுணர்ந்த மேன் மக்கள் சினந்து, மறுமொழி கூறுவாரோ? கூறார்.

தீ இல்லை ஊட்டும் திறம்

௫கூ. நோவ உரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவின் ஒருவரை வைதால் வயவுரை,
பூவின் பொலிந்தகன்ற கண்ணாய் ! அதுவன்றோ
தீயில்லை ஊட்டும் திறம்.

மலர் போன்று விளங்குகின்ற அகன்ற கண்களை உடையவளே! மனம் வருந்துமாறு பழிச்சொல் சொல்லியவரைப் பொறுக்கமாட்டாதார், தம் நாவினால் தம்மைத் திட்டியவரைத் தாம் இழித்துக் கூறுதல், வீட்டை நெருப்பினால் கொளுத்தும் திறம் போல்வதாகும்.

தான் நோன்றிடவரும் சால்பு

௬0. கறுத்(து)ஆற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்
பொறுத்(து)ஆற்றிச் சேறல் புகழால் — ஒறுத்(து)ஆற்
வான்ஓங்கு மால்வரை வெற்ப ! பயன்இன்றே [றின்
தான்நோன் றிடவரும் சால்பு.

வானளாவிய உயர்ந்த மூங்கில்களை உடைய குறிஞ்சி நிலத்தலைவனே! மிகவும் சினந்து தமக்குக் கொடுமைகளைச் செய்தவரையும், தாம் சினவாது பொறுத்துக் கொண்டு, மாருக நன்மை செய்து பழகுதல் புகழ் தருவதாகும். தாமும் கோபித்துக் கொடுமை செய்தால், ஒரு நன்மை இல்லை. தான் பொறுத்துக் கொள்வதனுல் சான்ருண்மையாகிய பண்பு தோன்றும்.

8. பெரியாரைப் பிழையாமை

குழுவத்தார் மேயிருந்த என்றூட றுபபினும் மன்று

௬க. அறிவன்(று) அழகன்(று) அறிவதூஉம் அன்று
சிறியர் எனப்பாடும் செய்யும் — எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப ! குழுவத்தார் மேயிருந்த
என்றூ(டு) அறுப்பினும் மன்று.

எறியும் அலைகள் உலாவும் நெய்தல் நிலத்தலைவனே! கதிரவனை ஊடறுத்துச் சென்றவராயினும், அறிஞர்கள் கூடியுள்ள கூட்டத்தை ஊடறுத்துச் செல்லுதல், கூடாது. அவ்வாறு செல்லுதல், தமக்கு அறிவுடைமையும் அன்று, அழகுடைமையும் அன்று; அறநெறியுமன்று; கீழ் மக்கள் என்று சொல்லப்படுதலையும் அது செய்யும்.

போமாறறியா புலன்மயங்கி ஊர்புக்குச் சாமா கண்காணுதவாறு

௬உ. ஆமாலோ என்று பெரியாரை முன்னின்று
தாமாச் சிறியார் தறுகண்மை செய்தொழுகல்
போமா(று) அறியா புலன்மயங்கி ஊர்புக்குச்
சாமாகண் காணுத வாறு.

நமக்கு இவரோடு மாறுபடல் ஆகுமோ என்றுநினைத்துத் தாமாக வலிய எதிரே சென்று, சிறியோர் பெரியாரை,

அஞ்சாமை சொல்லி மாறுபட்டு நடத்தல், சாவதற்குரிய விலங்குகள் தாம் செல்லுவதற்கு உரிய வழியை அறியாமல், அறிவு கலங்கி ஊருள்புகுந்து கண்களை இழந்து வருந்தியதை ஒக்கும்.

எருக்கு மறைந்து யானை பாய்ச்சி விடல்

௬௩. எல்லாத் திறத்தும் இறப்பப் பெரியாரைக்
கல்லாத் துணையார்தாம் கைப்பித்தல் சொல்லின்,
நிறைந்தார் வளையினாய் ! அஃதால் எருக்கு
மறைந்துயானை பாய்ச்சி விடல்.

தகுதி நிறைந்து பொருந்தியிருக்கின்ற வளையையுடைய வளே ! கூறுமிடத்து, எல்லா வகையிலும் மிகவும் பெரியவரைக், கல்லாமையைத் துணையாக உடைய அறிவிலிகள் வெறுக்கச் செய்தலானது எருக்கம் புதரில் மறைந்து ஒருவன் யானையின்மேல் அம்பு தொடுத்தலுக்கு ஒப்பாகும்.

ஈனுமோ வாழை இருகால்குலை

௬௪. முன்னும் ஒருகால் பிழைப்பானை ஆற்றவும்
பின்னும் பிழைப்பப் பொறுப்பவோ ?—இன்னிசை
யாழின்வண்(டு) ஆர்க்கும் புனலூர! ஈனுமோ
வாழை இருகால் குலை?

இனிய இசையையுடைய யாழ்போன்று வண்டுகள் ஒலிக்கும் நீர் நிறைந்த மருத நிலத்தவனே ! வாழைமரம் இரு முறை குலை தள்ளுமோ ? அதுபோல முன்னொரு முறை குற்றம் செய்தவனைச் சான்றோர் பொறுப்பர். மீண்டும் குற்றம் செய்தால் பொறுப்பார்களா ? பொறுத்துக் கொள்ள மாட்டார்.

கெடுமே கொடும்பாடு உடையான் குடி

௬௫. நெடுங்காலம் வந்தார் நெறியின்மை கண்டு
நடுங்கிப் பெரிதும் நலிவார் பெரியர்.
அடும்(பு)ஆர் அணிகானற் சேர்ப்ப ! கெடுமே
கொடும்பாடு உடையான் குடி.

அடும்பைப் பூவால் அழகுறும் சோலைகள் சூழ்ந்த கடல் நாடனே ! நீண்ட காலமாகத் தீயநெறியில் பழகிவந்தவரைக் கண்டு, சான்றோர் மனம் மிகவும் நடுங்கிப் பெரிதும்

வருந்துவர். அவர்கள் அவ்வாறு வருந்திய அளவில் கொடிய இயல்பினை உடையவரது குடிகெடும்.

9. புகழ்தலின் கூறுபாடு

புலத்தகத்துப் புள் அரைக்கால விற்பேம் எனல்

சாசா. செய்த கருமம் சிறிதானும் கைகூடா
மெய்யா உணரவுந் தாம்படார்—எய்த,
நலத்தகத் தம்மைப் புகழ்தல் புலத்தகத்துப்
புள்அரைக்கால் விற்பேம் எனல்.

செய்யத் தொடங்கிய செயலின் பயன்சிறிதாயினும் கைகூடுதல் இல்லை. அவை கைகூட வில்லையாயினும் அவற்றைச் "செய்து முடிக்க வல்லவர்" என்று மற்றவரால் மெய்யாக மதிக்கவும் பெறுதவர், மிகவும் நன்மையிலே பொருந்தத் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளுதல், வயலில் இருக்கும் பறவையினை அரைக்கால் பொன்னுக்கு விற்போம் என்று கூறுவது போன்றதாகும்.

அணியாரே தமமைத் தமவேனும் கொள்ளாக் கலம்

சாஎ. தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை அகற்றலே வேண்டும்.
அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்
தமவேனும் கொள்ளாக் கலம்.

மூங்கில் நிறைந்த குறிஞ்சி, நிலத்தவனே! தமக்குப் பொருந்தாத அணிகலன்கள் தமக்கு உரிமையுடையவை யாயினும், அவைகளினல் நல்லார் தம்மை அழகுபடுத்திக் கொள்ளார், அதுபோல, தம்மால் உதவி பெற்ற உறவினர் ஆயினும் தம்மைப் புகழ்ந்து பேசும்போது, தமக்குப் பொருந் தாத புகழ் மொழிகளை அவர்கள் கூருதவாறு நீக்கலே வேண்டும்.

அடுபபின் கடைமுடங்கும் நாயைப் புலியாம் எனல்

சாஅ. தாயானும் தந்தையா லானும் மிகவின்றி
வாயின்மீக் கூறும் அவர்களை ஏத்துதல்,
நோயின்(று) எனினும் அடுப்பின் கடைமுடங்கும்
நாயைப் புலியாம் எனல்.

தம்மைப்பெற்ற தாயாலும் தந்தையாலும் யாதொரு சிறப்புமில்லாமல், தம் வாயால் தம்மை உயர்த்திப் பேசுவோரை மற்றவர் புகழ்த்திக் கூறுதலாவது, நோய் இல்லையாயினும் அடுப்பின் அருகில் முடங்கிக் கிடக்கும் நாயைப் புலி என்று சொல்லுதலுக்கு ஒப்பாகும்.

கிரையுள்ளே இன்னு வரைவு

௬௯. பல்கிளையுள் பார்த்துறன் ஆகி ஒருவனை
நல்குரவான் வேருக நன்குணரான் —சொல்லின்
உரையுள் வளவியசொல் சொல்லா ததுபோல்
கிரையுள்ளே இன்னு வரைவு.

சுற்றத்தார் பலர் நடுவே ஆராயாதவனுகி, நன்குணராத ஒருவன், மற்றவனைப்பற்றி ஒரு சிறப்புடையவனுகச் சொன்னுல், வறுமையால் சொற்களுள் சிறப்புடைய நற்சொல்லைச் சொல்லாதது போன்றே, பக்தர்கள் கூட்டத்துள் ஒருவனைத் தனியாக அழைத்துச்சிறப்புச் செய்தலும் துன்பம் தருவதாகும்

10 சான்றேரியல்பு

தலைமகன் தன்னெளி நூறாயிரவர்க்கு நேர்

௭0. நீ(று)ஆர்ந்தும் ஒட்டா கிகரில் மணியேபோல்,
வேறகத் தோன்றும் விளக்கம் உடைத்தாகித்
தாருப் படினும் தலைமகன் தன்னெளி.
நூரு யிரவர்க்கு நேர்.

சிறப்புப்படத் தோன்றும் ஒளியை உடையதாய், நீறிலே (சாம்பலில்) படிந்தும் அந் நீறோடு ஒட்டாது இணையில்லாது விளங்கும் மாணிக்கத்தைப் போல், தலைமகனுடைய புகழ் ஒளியானது, புடைத்தாற்றிக் கழித்தபிறகும் அவர் பெருமை நூறுயிரவர் பெருமைக்கு இணையாகும்.

பசி பெரிதாயினும் புல் மேயாதாகும் புலி

௭க. ஒற்கந்தாம் உற்ற இடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்,—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புல்மேயா தாகும் புலி.

பஞ்சத்தால் தன்னை வருத்தும் பசி மிகுந்திருந்தாலும் புலி புல்லைத் தின்னாத இயல்பினது ஆகும். அதுபோல, சான்றோர் தாம் வறுமை அடைந்தாலும் தாம் முன்னர் மேற்கொண்டிருந்த ஒழுக்க நெறியில் வழுவாது நிற்பர்.

ஈடில்லதற்கில்லை பாடு

எஉ. மாடம் அழிந்தக்கால் மற்றும் எடுப்பதோர்
கூடம் மரத்திற்குத் துப்பாகும் — அஃதேபோல்
பீடில்லாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்
ஈடில் லதற்கில்லை பாடு.

வீடு நிலை கெட்டு அழிந்தபோதும், அதிலுள்ள மரங்கள், மீண்டும் கட்டுவதான ஒரு வீட்டிற்கு உதவும். அதுபோலவே, சான்றோர் செல்வச் சிறப்பு இழந்தபோதும் தமது பெருந்தன்மையிலிருந்து வழுவார். ஆகையால், வலியில்லாததற்குப் பெருமை இல்லை.

அளறுடிக் கண்ணும் மணிமணியாகி விடும்

எ௩. இணரோங்கி வந்தாரை என்னுற்றக் கண்ணும்
உணர்பவர் அஃதே உணர்ப — உணர்வார்க்(கு)
அணிமலை நாட ! அளறுடிக் கண்ணும்
மணிமணி யாகி விடும்.

மலைகள் அடுக்கடுக்காக உள்ள குறிஞ்சி நிலத்தவனே! சேற்றிலே கிடந்தபோதும் மாணிக்கத்தின் இயல்பை உணர்ந்தவர்க்கு நல்ல மாணிக்கம், மாணிக்கமாகவே தோன்றும். அதுபோல தொடர்ச்சியுறாது மாண்புடனே உயர்ந்து வாழ்ந்தவரை எத்தகைய துன்பம்பற்றிய போதும், அறிவுடையார், அவர்களை அத்தகைய மாண்புடையவர்களாகவே உணர்ந்து மதிப்பர்.

கொற்சேரித் துன்னூசி விற்பவர் இல்

எ௪. கற்றதொன் றின்றி விடினும் குடிப்பிறந்தார்
மற்றென் றறிவாரின் மாண்மிக நல்லரால்;
பொற்ப உரைப்பான் புகவேண்டா. கொற்சேரித்
துன்னூசி விற்பவர் இல்.

கொல்லர் தெருவில் தையல் ஊசியை விற்கப்புகுவார் ஒருவரும் இலர். அது போல, நற்குடிப்பிறப்பாளர் கற்றது ஒன்றில்லையாலும், நற்குடியில் பிறவாமல், கல்வி ஒன்றை மட்டும் அறிந்தாரைக் காட்டிலும் மாண்புடைய நல்லவராவர் ஆதலால் கற்றவர், நற்குடிப் பிறப்பாளரிடம் நற்பண்புகளை அழகுறவிரித் துரைக்க வேண்டுவதில்லை.

அறிமடமும் சான்றோர்க்கு அணி

எ௫. முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப !
அறிமடமும் சான்றோர்க்(கு) அணி.

நெருங்கிய மடல்களையுடைய அழகிய தாழைகள் உயர்ந்த கடல் நாடனே! காற்றில் அலைப்புண்ட முல்லைக் கொடிக்குத் தேரையும், (பாரி) வாடையால் வருந்திய மயிலுக்குப் போர்வையையும் (பேகன்) முன்னுளில் அளித்த வரைப் பிறர் சொல்லக் கேட்டிருந்தோம் ஆதலால், ஆராய்ந்து கூறுமிடத்து, அறிந்தும் அறியாதவர் போன்று செய்யும் செயல்களும் சான்றோர்களுக்கு அழகினைத் தருவதாகும்.

உரைத்தால் உரைபெறுதல் உண்டு

எ௬. பல்லார் அவைநடுவண் பாற்பட்ட சான்றவர்
சொல்லார் ஒருவரையும் உள்ளூன்றப்—பல்லா
நிரைப்புறங் காத்த நெடியோனே யாயினும்
உரைத்தால் உரைபெறுதல் உண்டு.

பல பசுக் கூட்டங்களைக் காத்த உயர்ந்த வடிவெடுத்த திருமாலேயானாலும், அவையில் மற்றொருவனை, ஒரு வடுச் சொல் சொன்னால் தாமும் அதனால் வடுச் சொல் பெறுதல் உண்டு. ஆகையால், நன்னெறியில் ஒழுகும் சான்றோர் நல்லோர் பலரும் கூடியிருக்கும் அவையின் நடுவில் எவரையும் புன்மொழி மனத்துள் தங்குமாறு கூறார்.

காணார் எனச் செய்யார் மாணவினை

எஎ. எனக்குத் தகவன்றால் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் காணார்
எனச்செய்யார் மாணா வினை.

பொற்கைப் பாண்டியனும் இஃது எனக்குத் தகுதியன்று என்பதனை ஆராய்ந்தறிந்து, தான்செய்த குற்றத்திற்குச் சான்றாளன் தானேயாகி, குற்றத்தை உணர்ந்து அதற்குத் தண்டனையாகத் தன்கையைத் தானே வெட்டிக் கொண்டான் ஆதலால் சான்றோர், பிறர் காணவில்லையே என்று தீய செயல்களைச் செய்யார்.

வில்லோடு காக்கையே போன்று

எஅ. தீப்பால் வினையினைத் தீரவும் அஞ்சாராய்க்
காப்பாரே போன்றுரைத்த பொய்குறளை—ஏய்ப்பார்முன்
சொல்லோ(டு) ஒருப்படார் சோர்வின்றி மாறுபவே
வில்லோடு காக்கையே போன்று.

தீய இயல்பினையுடைய செயல்களுக்கு மிகவும் அஞ்சாதவராய், தம்மைக் காப்பவரைப் போன்றுரைத்த சில பொய் மொழிகளையும், கோட் சொல்லையும் பொருந்தச் சொல்லி ஏமாற்றுவார் முன்பு சொல்லும் சில இனிய சொற்களையும் கேட்டு இணங்காமல், வில்லைவிட்டு நீங்கும் காக்கை போன்று, அறிவுடையார் தளர்ச்சியின்றி விட்டு நீங்குவர்.

கடலொடு காட்டு ஒட்டல் இல்

எகூ. மடங்கிப் பசிப்பினும் மாண்புடை யாளர்
தொடங்கிப் பிறருடைமை மேவார்—குடம்பை
மடலொடு புட்கலாம் மால்கடற் சேர்ப்ப !
கடலொடு காட்(டு)ஒட்டல் இல்.

தாம் வாழும் கூடு பொருந்திய பனை மடல்களோடு பறவைகள் கலந்துள்ள பெரிய கடல் சேர்ப்பனே! கடலோடு துரும்பு பொருந்துதல் இல்லை. அதுபோல் தமது உடல் ஒடுங்குமாறு பசித்தவர் ஆயினும் மாண்புடையவர்கள் பிறர் உரிமைப் பொருள்களைத் தாம் கைக் கொள்ள விழையார்.

நரையான் புறத்திட்ட சூடு

அ௦. நிரைதொடி தாங்கிய நீடோள்மாற் கேயும்
உரையொழியா வாகும். உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன்(று) ஊட்டும் மலைநாட ! மாயா
நரையான் புறத்திட்ட சூடு.

பெண்மான் தன் கன்றிற்குப் பாலை ஊட்டும் காட்சிமிக்க மலைநாடனே! நிரல்பட கடகத்தை அணிந்த நீண்ட தோளை யுடைய திருமாலுக்கே யாயினும் குற்றம் புரிந்தான் என்ற சொல் ஒரு நாளும் நீங்காததாகும் ஆதலால் வெண்மை யான மாட்டின் மேல் இட்ட சூடு போல், உயர்ந்தோரிடம் அமைந்த குற்றம் ஒரு நாளும் மறையா.

குன்றின் மேல் இட்ட விளக்கு

அக. கன்றி முதிர்ந்த கழியப்பன் ளுள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றுனும்—தோன்றுதாம்.
ஒன்றுய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு.

சினந்து அளவு கடந்த தீய செயல்களை மிகப் பல நாள் செய்தவராயினும் அவற்றுள் ஒரு குற்றமும் சிறியவரிடம் எப்பொழுதாயினும் தோன்றுதல் இல்லை. உயர்ந்தவர் களிடம் தோன்றும் குற்றம் ஒன்றேயானுலும் அது குன்றின் மேல் இட்ட விளக்கைப்போல் யாவரும் அறியுமாறு விளங்கும்.

11. சான்றோர் செய்கை

புல்லின்றி மேயினும் ஏற்றுக்கன்று ஏருய் விடும்

அஉ. ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்பர(வு)
ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன்—ஆற்றவும்
போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்
ஏற்றுக்கன்(று) ஏருய் விடும்.

நல்ல எருதிற்குப் பிறந்த கன்று, மிகவும் காக்கப் பெருமல் தின்னும் புல்லும் இல்லாமல் ஏதேனும் ஒன்றை மேய்ந்தாலும் பின்னுளில் எருதாகும். அதுபோல, நற் குடியில் பிறந்த சான்ரேன், தான் சேர்த்த செல்வம் இல்லை

யென்றாலும் உலக நடையை அறிந்து மற்றவர்க்கு உதவி செய்வான்.

கடங்கொண்டும் செய்வார் கடன்

அரு. அடர்ந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னாய் ! சான்றோர்
கடங்கொண்டும் செய்வார் கடன்.

மடமாகிய பண்புகொண்ட அழகிய மயில்போன்றவளே! சான்றோர், தொடர்ந்து வறுமையால் துன்பப்பட்டபோதும், ஒருவர்க்கு ஒன்றையும் கொடுக்க முடியாதபோதும், தமக்குச் செய்யக்கூடிய காலம் வரும்போது உதவி செய்வோம் என்று எண்ணிப் பிறருக்கு உதவாதிரார். வேறொருவரிடம் கடன் வாங்கியாயினும் தாம் செய்யத்தக்க கடமையைச் செய்வர்.

சானறவர் கையுண்டும் கூறுவர் மெய்

அச. மொய்கொண்டெழுந்த அமரகத்து மாற்றார்வாய்ப்
பொய்கொண் டறைபோய்த் திரிபவர்க் கென்கொலோ?
மையுண் டமர்ந்தகண் மாணிழாய் ! சான்றவர்
கையுண்டும் கூறுவர் மெய்.

மையெழுதப் பெற்ற அழகிய கண்ணையும் நன்கு இழைக்கப்பெற்ற அணிகலன்களையும் உடையவளே! தம்முள், பகைமை பாராட்டி, வீரத்துடன் போர் செய்யும் போர்க் களத்தில் பகைவர் கூறும் பொய்மொழிகளைக் கேட்டுக் கீழறுக்கப்பட்டுத் திரியும் கீழ் மக்கட்கு, மெய்ம் மொழிகளால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை. சான்றோர் பிறருடைய கைப்பொருளை உண்டாராயினும் அவர்களுக்காக ஒருபொய்யும் கூறார். நடுவு நிலை போற்றி மெய்ம்மொழி கூறுவர்.

பூண்ட பறையறையார் ஆயினார் இல்

அரு. ஆண்டீண் டெனவொன்றோ, வேண்டா அடைந்தாரை
மாண்டிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ ?
பூண்டாங் கிளமுலைப் பொற்றொடி ! பூண்ட
பறையறையார் ஆயினார் இல்.

அணிகளைத் தாங்கும் இளமையான கொங்கைகளையும் பொன் வளையல்களையும் உடையவளே! தாம் பூண்ட பறையை அடிக்காது தவிர்த்தவர் ஒருவரும் இலர். ஆதலின், தம்மிடம் அடைந்தவர்களை, 'அங்கு ஒரு குற்றம் இங்கு ஒரு குற்றம் புரிந்தார்' என்று சொல்ல வேண்டா. அவர் மாண்புடைய பண்பினர் அல்லர் என்று நட்பை நீக்கிக் கொள்ளுதற்கு அமைந்த அறம் உண்டோ? தண்டித்து, நட்புக் கொண்டு வேண்டுவன செய்தல் வேண்டும்.

கடனன்றோ ஊரறிய நட்டார்க்கு உணா

அசு. பரியப் படுபவர் பண்பிலா ரேனும்
திரியப் பொறுபவோ சான்றோர்—விரிதிரைப்
பாரெறியும் முந்நீர்த் துறைவ! கடனன்றோ
ஊர்அறிய நட்டார்க்(கு) உணா?

அகன்ற அலைகளை உலகில் வீசும் கடல் துறைவனே! தம்மால் விரும்பப்பட்டவர் நல்ல குணம் இல்லாதவரேனும் சான்றோர்தம் இயல்பினின்று மாறுபடார், ஊரார் அனைவரும் அறியுமாறு தம்மோடு நட்புக் கொண்டவர்க்கு உணவளித்தல் கடமையல்லவா?

சான்றோர் அவைப்படின் சாவாது பாம்பு

அஎ. தெற்றப் பகைவர் இடர்ப்பாடு கண்டக்கால்
மற்றுங்கண் ணோடுவர் மேன்மக்கள்—தெற்ற
நவைக்கப் படுந்தன்மைத் தாயினும் சான்றோர்
அவைப்படின் சாவாது பாம்பு,

தெளிவாகத் துன்பம் தரும் இயல்பினதாயினும் பாம்பானது சான்றோர் அவையில் புகுந்தால் சாவாது. அது போல உயர்குடிப் பிறப்பாளர் தெளிவாகப் பகைவர் துன்பம் அடைதலைக் காணப்பெற்றால், தமக்குப் பல பிழையும் செய்தவராயினும் மீண்டும் அப்பகைவரிடம் கருணை செய்வர்.

தால அடைக்கலமே போன்று

அஅ. இறப்ப எமக்கீ(து) இழிவரவென் றெண்ணார்,
பிறப்பிற் சிறியாரைச் சென்று—பிறப்பினால்
சாலவு மிக்கவர் சார்ந்தடைந்து வாழ்பவே;
தால வடைக்கலமே போன்று.

குடிப் பிறப்பினால் மிகவும் பெரியவர், குடிப் பிறப்பால் சிறியாரைச் சார்பாகச் சென்றடைந்து, வாழ்தல் "இச்செயல் எமக்கு மிகவும் இழிவினைத் தருவது" என்று கருதாமல், ஒருவரிடம் வைக்கப்பெற்ற நில அடைமானப் பொருளே போன்று பெருமை குறைந்து வாழ்வர். அதனால் குற்றம் இல்லையாம்.

பூவொடு நார் இயைக்கு மாறு

அகூ. பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியார் இனமாய் ஒழுகுதல்,—எறியிலை
வேலொடு நேரொக்கும் கண்ணாய் ! அஃதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு.

ஒளி வீசும் இலைவடிவான வேலை நிகர்த்த கண்களை யுடையவளே ! உயர்குடிப் பிறப்பாளரும், கீழ்மக்களைத் தமக்கு இனமாய்ச் சேர்த்து ஒழுகுஞ் செய்கை. பூவோடு நாரைச் சேர்த்துக் கட்டும் முறையல்லவா ?

மோரின் முதுநெய் தீது ஆகலோ இல்

கூ௦. சிறியவர் எய்திய செல்வத்தின் மாணப்
பெரியவர் நல்குரவு நன்றே—தெரியின்
மதுமயங்கு பூங்கோதை மாணிழாய் ! மோரின்
முதுநெய்தீ(து) ஆகலோ இல்.

தேன் நிறைந்த மலர் மாலையையும், மாண்புடைய இழைத்த அணிகலன்களையும் உடையவளே ! ஆராய்ந்தால், பழைய மோரைக் காட்டிலும் பழைய நெய் தீமை தருவது இல்லை. நன்மையைத் தரும். கீழ் மக்கள் பெற்ற செல்வத்தைக் காட்டிலும் பெரியவர் பெற்ற வறுமையே நல்லதாகும்.

12. கீழ் மக்கள் இயல்பு

என்றும் மனநலம் ஆகாவாம் கீழ்

கூக. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
உப்பொழிதல் செல்லா ஒலிகடல்போல்—மிக்க
இனநலம் நன்குடைய வாயினும் என்றும்
மனநலம் ஆகாவாம் கீழ்.

ஆறுகளின் மிகுந்தநீர் பெருகி வந்து பாய்ந்தாலும் ஒலிக்கின்ற கடல்நீர் உவர்ப்புச் சுவை நீங்காத தன்மை யதாகும். அதுபோல, மிக்க நல்லினத்தவரோடு சேர்ந்து வாழும் நன்மையைப் பெற்றிருந்தாலும், கீழ் மக்கள் எக் காலத்தும் மனத்தால் தூய்மையராதல் இலர்.

தினலாமோ அக்காரம் சேர்ந்த மணல்

கூஉ. தக்கரோ டொன்றித் தமராய் ஒழுகினர்
மிக்காரால் என்று சிறியாரைத் தாம்தேறர் ;
கொக்கார் வளவய லூர ! தினலாமோ
அக்காரம் சேர்ந்த மணல்.

மாஞ்சோலைகள் நிறைந்த வளமையான வயல்களை யுடைய மருத நிலத்தலைவனே! சர்க்கரை கலந்த மணலைச் சர்க்கரை என்று உண்ணலாமோ? அதுபோல இழிகுண முடையார் தகுதியானவரோடு பொருந்தி அவர்தம் உறவினரைப் போன்று ஒழுகினாலும், அவர் நல்ல பண்பினர் என்று எண்ணித் தெளிந்து நட்புக் கொள்ளார்.

ஆகுமோ நந்து உழுத எல்லாம் கணக்கு

கூரு. தந்தொழில் ஆற்றும் தகைமையார் செய்வன
வெந்தொழில ராய வெகுளிகட்குக் கூடுமோ ?
மைந்திறை கொண்ட மலைமார்ப ! ஆகுமோ
நந்துழுத வெல்லாம் கணக்கு.

வலிமை தாங்கிய மலைபோன்ற மார்பனே! நத்தை உழுதது போன்று கீறப்பட்டன வெல்லாம் அறிந்தார்க்கு எழுத்தாகுமோ? ஆகா? அதுபோல, தங்கள் தொழிலைச் செய்து முடிக்கவல்ல ஆற்றலுடையார் செய்பவைகளைக் கொடுந் தொழிலைச் செய்பவராகிய சினம் உடையவர்களால் செய்ய முடியுமோ? முடியாது.

பேதைக்கு உரைத்தாலும் தோன்றுதுணர்வு

கூச. பூத்தாலும் காயா மரமுள ; மூத்தாலும்
நன்கறியார் தாமு நனியுளர் பாத்தி
விதைத்தாலும் நாறு தவித்துள ; பேதைக்(கு)
உரைத்தாலும் தோன்று துணர்வு.

பூக்கப்பெற்றும் காய்க்கப் பெறுத பாதிரி முதலான மரங்கள் உள்ளன. அவைபோல, வயதால் முதிர்ந்த விடத்தும் தொழில் செய்யும் நன்மையை உணராத மக்களும் பலர் உளர். நன்கு நிலத்தைப் பதப்படுத்தி விதைத்தபோதும் முளைக்கப்பெறுத விதைகள் பல உள. அவைபோல, அறிவில்லாதவனுக்கு அறிவுரைகளைப் பலவாறு விளக்கிச் சொன்ஞலும் மெய்யுணர்வு தோன்றுவதில்லை.

ஆகாதே உண்டது நீலம் பிறிது

கூடு. ஓர்த்த கருத்தும் உணர்வும் உணராத
மூர்க்கற்கு யாதும் மொழியற்க—மூர்க்கன்முன்
கொண்டதே கொண்டு விடாஞகும். ஆகாதே
உண்டது நீலம் பிறிது.

தான் ஆராய்ந்தறிந்த கருத்தும், உண்மையை உணரும் அறிவும் அறியாத மூர்க்கர்களுக்கு ஒரு பொருளையும் சொல்ல வேண்டா நீல நிறத்தை உண்ட பொருள் வேறொரு நிறத்தை வெளிப்படுத்த இயலாது. அதுபோல, மூர்க்கன் தான் மேற்கொண்ட கருத்தையே மனத்துள் கொண்டு கைவிடான்.

கைக்குமே தேவரே தின்னினும் வேம்பு

கூசு. தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க—மற்றவர்
யாவரே யாயினும் நன்கொழுகார். கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு.

தேவரே தின்ருலும் வேம்பு கசக்கும். அதுபோல, தெளிவாக நட்புக்கொண்ட ஒருவரை, ஒருவர் தீய மொழி மொழிவதைக் கேட்டால், அத்தீயவர் தம்மையும் இவ்வாறே கூறுவர் என்று எண்ணி அவரை நட்புக் கொள்ளவேண்டா. அவர்கள் எத்தகைய சிறப்புடையவர்களாயினும், நன்கு ஒழுகார்.

குறும்பூழ்க்குச் செய்யுளதாகும்மனம்

கஎ. காடுறை வாழ்க்கைக் கருவினை மாக்களை
நாடுறைய நல்கினும் நன்கொழுகார்—நாடோறும்
கையுள தாகி விடினும் குறும்பூழ்க்குச்
செய்யுள தாகு மனம்.

ஒவ்வொரு நாளும் கையுள் பொருந்தி வளர்ந்தாலும் காடைக்கு மனம், வயலில் வளர்வதிலேயே விருப்பம் இருக்கும். அதுபோல, காட்டில் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டு கொலைத் தொழிலைச் செய்யும் விலங்கொப் பாரை நாட்டில் தங்கி வாழ வைத்தாலும் கொலைத் தொழில் நீக்கி நன்னெறியில் ஒழுகார்.

அஞ்சாதே தின்பது அழுவதன் கண

௯அ. கருந்தொழில ராய கடையாயார் தம்மேல்
பெரும்பழி யேறுவ பேணார்—இரும்புன்னை
புன்புலால் தீர்க்கும் துறைவ ! மற் றஞ்சாதே
தின்ப தழுவதன் கண்.

பெரிய புன்னை மலர்களால் புல்லிய புலால் நாற்றத்தைப் போக்கும் துறையவனே ! பெரிய விலங்குகள் தாம் உண்ணப் போகும் சிறிய விலங்குகளின் துன்ப அழுகையைக் கண்டு அஞ்சி அவற்றைத் தின்னாது இருத்தல் இல்லை. அவை போன்று கொலைத் தொழிலைச் செய்யும் கீழ்மக்கள் தம்மேல் அமைவதான பெரும் பழிகளை வாராமல் காவார் என்பதாம்.

அகலுள் நீராலே துடும்பல் எறிந்து விடல்

௯௯. மிக்க பழிபெரிதும் செய்தக்கால் மீட்டதற்குத்
தக்க தறியார் தலைசிறத்தல்,—எக்கர்
அடும்பலரும் சேர்ப்ப ! அகலுள்நீ ராலே
துடும்பல் எறிந்து விடல்.

மணல் நிலத்தில் அடும்பு மலர்கள் மலரும் கடல் நாடனே ! மிகுதியான பழிச் செயல்களைப் பெரிதும் செய்தால், அப்பழி தீர்க்கத்தக்க முறைதனை அறியாமல் மீண்டும் அப்பழி வருவதற்கான செயல்களில் ஒழுகுதல், ஊர் வாரி (கழிவு) நீரிலே உடல்தூய்மை அடையக் குளித்துத் திளைத்தலோடு ஒக்கும்.

கள்ளினைக் காணக் களிக்கும் களி

௧௦௦. மாணாப் பகைவரை மாறொறுக் கல்லாதார்
பேணா துரைக்கும் உரைகேட் டுவந்ததுபோல்,
ஊணார்ந் துதவுவதொன் றில்லெனினும் கள்ளினைக்
காணாக் களிக்கும் களி.

மாண்பில்லாத பகைவரை எதிர்த்து நின்று தண்டிக்க இயலாதவர். அப்பகைவரைப் பொருட்படுத்தாமல் மற்றவர் இழித்துப் பேசும் சொற்களைக் கேட்டுச் சிலர் மகிழ்ந்தது போன்று, தனக்கு உணவாக நிரம்பி ஊட்டத்து இயல்பு மிகச் சிறிதும் இல்லை என்றாலும் கள்ளைக் குடிப்பவன் தன் எதிரில் கள்ளினைக் கண்டால், உண்டவனைப் போன்று களிப்பான்.

முழங்குறைப்பச் சாண்நீளுமாறு

கoக. உழந்ததூஉம் பேணு தொறுத்தமை கண்டும்
விழைந்தார்போல் தீயவை பின்னரும் செய்தல்,
தழங்கண் முழவிரங்கும் தண்கடற் சேர்ப்ப !
முழங்குறைப்பச் சாணீளு மாறு.

விளங்கும் கண்ணையுடைய முழவு போன்று ஆரவாரிக்கும் குளிர்ந்த கடல் நாடனே ! துன்பக் காலத்தும் தம்மோடு வருந்திப் போந்த நட்பினையும் எண்ணாமல் தம்மைத் தண்டித்ததை அறிந்தும், அவரிடம் விருப்பம் உடையவர் போன்று தீய செயல்களைத் தொடர்ந்து செய்தல், ஒன்றனைச் சாண் நீளம் குறைக்க அது முழ நீளம் நீளுவதைப் போன்றதாகும்.

நரியிற்கு ஊண் நல்யாண்டும் தீயாண்டும் இல்

கoஉ. அல்லவை செய்ப அலப்பின் ; அலவாக்கால்
செல்வ தறிகலர் ஆகிச் சிதைத்தெழுப ;
கல்லாக் கயவர் இயல்போல் நரியிற்கூண்
நல்யாண்டும் தீயாண்டும் இல்.

கல்லாத கீழ்மக்கள் ஏழைமையுற்றால் தீயவை பல செய்து வாழ்வர். ஏழைமை இல்லாமல் செல்வம் பெற்றால், மறுமை இன்பம் அடைவதற்குரிய வழியை அறியாதவராகி, அறத்தைக் கெடுத்து வாழ்வர் இஃதே அவர்தம் இயல்புபோலும். நரிக்கு உணவு கிடைக்கின்ற நல்ல காலமும் உணவு கிடைக்காத கெட்ட காலமும் இல்லை.

ஊர் அறியா மூரியோ இல்

கoங. கூரறிவி னார்வாய்க் குணமுடைச்சொல் கொள்ளாது
காரறிவுக் கந்தாக் கடியன செய்வாரைப்
பேரறியார் ஆயின பேதைகள் யாருளரோ ?
ஊரறியா மூரியோ இல்.

ஊரினரால் அறியப்படாத பொலி காளை இல்லை. அதுபோல, கூர்மையான அறிவுடையவர் சொல்லும் (பழி பாவங்களுக்கு அஞ்சும்) பண்புடைய சொல்லை மனத்துள் கொள்ளாது, அறியாமையைப் பற்றுக் கோடாகக் கொண்டு மற்றவர் விலக்கும் தீய செயல்களைச் செய்து வாழ்வார், தம் பெயரை அறியாதவர்களாகிய அறிவிலிகள் உலகில் யாவர் உளர் ? (யாவரும் இலர்)

குரங்கினுள் நன்முகத்த இல்

௧0௪. நிரந்து வழிவந்த கீசருள் எல்லாம்
பரந்தொருவர் நாடுங்கால் பண்புடையார் தோன்றார்
மரம்பயில் சோலை மலைநாட ! என்றும்
குரங்கினுள் நன்முகத்த இல்.

மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த மலை நாடனே ! எக்காலத்தும் குரங்கினத்துள் அழகிய முகம் உடையன இல்லை. அதுபோல, தொடர்ந்து வழி வழியாக வந்த கீழ் மக்கள் எல்லாருள்ளும் விரிவாக ஆராய்ந்தால் நல்ல பண் புடைய ஒருவர் காணப் பெறார்.

தேனார்பலாக்குறைத்துக் காஞ்சிரை நட்டுவிடல்

௧0௫. ஊழாயி னாரைக் களைந்திட் டுதவாத
கீழாயி னாரைப் பெருக்குதல்—யாழ்போலும்
தீஞ்சொல் மழலையாய் ! தேனார் பலாக்குறைத்துக்
காஞ்சிரை நட்டு விடல்.

யாழிசை போலும் இனியமழலை மொழியை உடைய வளே ! முறைப்படவே நமக்கு நன்மை செய்வாரை விலக்கி விட்டு, நமக்குத் துன்பம் வந்தபோது உதவாத கீழ்மக்களை மிகுத்தல், தேன்நிறைந்த பலாமரத்தை வெட்டி அங்கு எட்டி மரத்தை வைத்து வளர்த்தலைப் போன்றதாகும்.

நாய்மேல் தவிசிடுமாறு

௧0௬. பெரியார்க்குச் செய்யும் சிறப்பினைப் பேணிச்
சிறியார்க்குச் செய்து விடுதல்—பொறிவண்டு
பூமேல் இசைமுரலும் ஊர ! அதுவன்றோ
நாய்மேல் தவிசிடு மாறு.

மலர்களின் மேல் புள்ளிகளையுடைய வண்டுகள் இசை பாடும் மருத நிலத்தலைவனே! சால்புடைய பெரியவர் களுக்குச் செய்யவேண்டிய பெருமைகளை விரும்பிச் சிறுமைக் குணம் உடையவர்களுக்குச் செய்தலானது, குதிரை மேல் இடவேண்டிய கல்லணையை (சேணம்) நாயின் முதுகின் மேல் இடுவதற்கு ஒப்பாகும்.

கூதறைகள் ஆகார் குடி

கருஎ. பேதுறவு தீரப் பெருக்கத் தலையளித்
தாசறு செய்யாராய் ஆற்றப் பெருகினும்
மாசற மாண்ட மனமுடைய ராகாத
கூதறைக ளாகார் குடி.

துன்பம் நீங்குமாறு மிகவும் கருணை கொண்டு குற்றம் நீங்கியவற்றைச் செய்யாதவராய்ச் செல்வத்தால் வளர்ந் தாலும், குற்றம் நீங்கிய மாண்புடைய மனம் உடையவரா காத கீழ்மக்கள் நற்குடிப் பிறப்பாளராகார்.

13. கீழ் மக்கள் செய்கை

திங்களை நாய்குரைத் தற்று

கரஅ. நெறியால் உணராது நீர்மையும் இன்றிச்,
சிறியார் எளியரால் என்று —பெரியாரைத்
தங்கணேர் வைத்துத் தகவல்ல கூறுதல்,
திங்களை நாய்குரைத் தற்று.

சிறியவர்கள்; பெரியவர்களைப்பற்றி நெறியால் உணரப் பெறுமல் தகுதியும் இல்லாமல், எளியவர் என்று கருதித் தமக்குச் சமமாக வைத்துத் தகுதியில்லாத சொற்களைச் சொல்லுதல், சந்திரனைப் பார்த்து நாய் குரைத்தாற் போன்றதாகும்.

கண்சொரீஇ இட்டிகை தீற்றுபவர்

கரகூ. மறுமையொன் றுண்டோ மனப்பட்ட எல்லாம்
பெறுமாறு செய்ம்மினென் பாரே —நறுநெய்யுள்
கட்டி யடையைக் கனவித்துக் கண்சொரீஇ
இட்டிகை தீற்று பவர்.

"மறுபிறப்பு என்பது இருக்கிறதா! மனம் விரும்பியதை எல்லாம் அடையும் முறைகளை மேற்கொள்ளுங்கள்" என்று மற்றவர்க்கு அறிவுரை கூறுவோர், மணமுள்ள நெய்யுள் தோய்த்த சுவைகலந்த அடையை உண்பிக்காமல் விலக்கி, ஒருவன் கண்களை மூடிச் செங்கல்லை உண்பிப்பவரோடு ஒப்பர்.

புலிமுகத்து உண்ணி பறித்து விடல்

கக0. கண்ணில் கயவர் கருத்துணர்ந்து கைமிக
நண்ணி யவர்க்கு நலனுடைய செய்பவேல்,
எண்ணி இடர்வரும் என்னார், புலிமுகத்(து)
உண்ணி பறித்து விடல்.

கண்ணோட்டம் இல்லாத கீழ்மக்களது விருப்பத்தை உணர்ந்து செயல்மிக அவரைப்பொருந்தி இச்செயல் செய்தால் துன்பம் வரும் என்பதனைக் கருதாமல், அவர்க்கு நன்மை தருவனவற்றை ஆராய்ந்து செய்வாராயின், அச்செயல்புலியின் முகத்தில் உள்ள உண்ணியைக் கருணையால் எடுத்துவிடுதலோடு ஒக்கும்.

பொருந்தா மண் ஆகா சுவர்

ககக. திருந்தாய்நீ ஆர்வத்தைத் தீமை யுடையார்
வருந்தினார் என்றே வயப்படுவ துண்டோ ?
அரிந்தரிகால் பெய்தமையக் கூட்டியக் கண்ணும்
பொருந்தாமண் ஆகா சுவர்.

மனமே ! நீ அவர் மேல் வைத்துள்ள அன்பை விட்டுத் திருந்துக சுவர் எடுக்கும்போது பொருத்தமாக அமையாதமண், அரிதாளை அரிந்து கலந்து பொருந்துமாறு கட்டியபோதும் பின்னர் பொருந்திச் சுவராவதில்லை. அதுபோல, தீய மனம் உடையவர், 'இவர் தமக்காக வருந்தினார்'' என்று நம்மேல் இரக்கம் கொண்டு நம்மிடம் பொருந்துவது உண்டோ ? பொருந்துவதில்லை.

வெண்மாத் தலைகீழாக் காதி விடல்

ககஉ. குலத்துச் சிறியார் கலாந் தணிப்பான் புக்கு
விலக்குவார் மேலும் எழுதல்—நிலத்து
நிலையழுங்க வேண்டிப் புடைத்தக்கால் வெண்மாத்
தலைகீழாக் காதி விடல்.

குடிப்பிறப்பால் சிறியவர், பகைமையைத் தணிப்பதற்காக இடையே புகுந்து விலக்குகின்றவர்மேலும் சினந்து எழுதலானது, நிலத்தின் மேல் ஓடாமல் நிற்கின்ற நிலையைத் தவிர்ப்பதற்காகக் குதிரை மேல் இருப்பவன் அடித்தபோது, குதிரை ஏற்றம் கற்றுக் கொள்ளாமல், வெண்மையான குதிரையின் மேல் ஏறியிருப்பவன் தலைகீழாக விழுந்ததைப் போன்றதாகும்.

உள்ளிருந்து அச்சாணி தாங்கழிக்கு மாறு

கககூ. சொல்லெதிர்ந்து தம்மை வழிபட் டொழுகலராய்க்
கல்லெறிந்தாற் போலக் கலாந்தலைக் கொள்வாரை
இல்லிருந் தாற்ற முனிவித்தல், உள்ளிருந்(து)
அச்சாணி தாங்கழிக்கு மாறு.

நம்முடைய சொல்லை ஏற்றுக்கொண்டு நம்மை வழிபாடு செய்யாமல் கல்லை எறிந்ததைப் போன்று தீய சொற்களைச் சொல்லி பகைமை கொள்வாரை, அவர்களுடைய வீட்டிலிருந்தே நாம் அவரை மிகவும் கோபம் கொள்ளுமாறு செய்தலானது, வண்டியின் உள்ளேயிருந்து அச்சாணி (கடையாணி)யை நாமே நீக்குவதோடு பொருந்தும்.

புழுப்பெய்து புண்பொதியு மாறு

கக௪. நாணார் பரியார் நயனில செய்தொழுகும்
பேணா அறிவிலா மாக்களைப் பேணி
ஒழுக்கி அவரோ டுடனுறை செய்தல்,
புழுப்பெய்து புண்பொதியு மாறு.

பழிக்கு நாணாமல், மற்றவர்களிடம் அன்பு கொள்ளாமல், யாருக்கும் நன்மை தாராத செயல்களைச் செய்து பழகும் பிறரால் விரும்பாத அறிவிலிகளுடன் விரும்பி நடந்து, அவர்களுடன் சேர்ந்து வாழ்வது, புழுவை உள்ளே வைத்துத் தம் புண்ணை மூடிவைத்ததனோடு ஒக்கும்.

நுணலும் தன்வாயால் கெடும்

ககரு. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்!
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயால் கெடும்.

நல்லவளே! மணலுள் நுழைந்து மறைந்து இருக்கும் தவளையும் தன்குரலை வெளிப்படுத்தித் தன்வாயால் தன் பகைவர்க்கு அகப்பட்டு அழியும், அதுபோல, பிறரைப் பற்றிப் பொல்லாதனவற்றைச் சொல்லி மறைந்து வாழும் அறிவிலி, தான் பேசும் பேச்சினாலேயே தன்னைத் துன்பப் படுத்திக் கொள்வான்.

மூக்கற்றதற்கில் பழி

ககசு. தாக்குற்ற போழ்தில் தமரேபோல் நன்குரைத்துப்
போக்குற்ற போழ்தில் புறனழீஇ மேன்மைக்கண்
நோக்கற் றவரைப் பழித்தல்என் ? என்னும்
மூக்கற்ற தற்கில் பழி.

மூக்கு அற்றதற்குப் பழிப்பு இல்லை. அது போன்று, ஒருவரை எதிர்ப்பட்ட போது அவர்க்கு நண்பரைப் போன்று நன்றாகப் புகழ்ந்து பேசி, அவர் நீங்கிய பொழுது புறங் கூறுபவராய் மேலான பண்புகளில் கருத்தில்லாதவரை இழித்துப் பேசுதலால் என்ன பயன்?

வளிதோடகு இடுவாரோ இல

ககஎ. கோவாத சொல்லும் குணனிலா மாக்களை
நாவாய் அடக்கல் அரிதாகும்—நாவாய்
களிகள்போல் தூங்கும் கடற்சேர்ப்ப ! வாங்கி
வளிதோட் கிடுவாரோ இல்.

கள்ளுண்டு ஆடும் குடியர்கள் போல் ஆடுகின்ற கப்பல்களையுடைய நெய்தல் நிலத்தலைவனே! காற்றை ஒரு கொள் கலத்துள் வாங்கித் தோளின் மேல் இடவல்லவர் இலர். அதுபோல, பொருந்தாத சொற்களைப் பேசும் நற்பண்பில்லாத மாக்களை நாவடங்கி இருக்கச்செய்தல் மற்றவரால் முடியாததாகும்.

பிறரைக் கள்ளராச் செய்குறுவார்

ககஅ. தெரியாதார் சொல்லும் திறனின்மை தீதாப்
பரியார் பயனின்மை செய்து—பெரியார் சொல்
கொள்ளாது, தாந்தம்மைக் காவா தவர்,பிறரைக்
கள்ளராச் செய்குறு வார்.

நன்மை தீமைகளை உணராதவர் சொல்லும் திறமற்ற செயல்களைத் தீங்கானவை என்று விலக்காமல், அவர் கூறிய நன்மையற்ற செயல்களைச் செய்து, சான்றோர்களின் நல்லுரைகளை ஏற்றுக் கொள்ளாமல், தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள இயலாதவர், தங்கள் குற்றங்களைச் சுட்டிக் காட்டுகின்ற மற்றவரைக் குற்றவாளியாக்குவர்.

மன்றஞ்சுவாற்குப் பரிகாரம் யாதொன்றும் இல்

கககூ. செய்த கொடுமை யுடையான் அதன்பயம்
எய்த உரையான் இடரினல்—எய்தி
மரிசாதி யாயிருந்த மன்றஞ்சு வாற்குப்
பரிகாரம் யாதொன்றும் இல்.

அறவழியில் பொருந்தியவர் குழுமியிருக்கும் அவையைக் கண்டுஅஞ்சி உண்மை உரைப்பவர்க்குப் பரிகாரம் யாதும் இல்லை. ஆதலால், மற்றவர்க்குத் தீமை செய்த ஒருவன், பிறர் வருத்திக் கேட்ட போது, அத் தீமையைச் செய்த படியே உண்மை பேசினல் துன்பம் வருமென்று உண்மை பேசார்.

மன்றத்து மையல்சேர்ந் தற்று

கஉ௦. முதுமக்கள் அன்றி முனிதக்கார் ஆய
பொதுமக்கள் பொல்லா ஒழுக்கம்—அதுமன்னும்
குன்றத்து வீழும் கொடியருவி நன்னுட !
மன்றத்து மையல்சேர்ந் தற்று.

நிலைபெற்ற குன்றிலிருந்து வீழும் கொடிபோன்ற அருவிகளையுடைய குறிஞ்சி நிலத்தலைவனே! அறிவால் நிரம்பிய மக்களே அல்லாமல், யாவராலும் வெறுக்கத்தக்க மக்களுடைய தீய ஒழுக்கமானது, மன்றத்திலே பித்தேறியவன் நின்றதைப் போன்றதாகும்.

செருப்பிடைப் பட்ட பரல்

கஉக. தருக்கி யொழுகித் தகவல்ல செய்தும்,
பெருக்க மதித்தபின் பேணுத செய்தும்,
கரப்புடை யுள்ளங் கனற்று பவரே,
செருப்பிடைப் பட்ட பரல்.

தகுதியில்லாத செயல்களைத் தன்னைத் தானே மதித்து ஒழுகுதலைச் செய்தும், தன்னைப் பிறர் மிகுதியாக மதித்த போது பிறர் போற்றுதனவற்றைச் செய்தும், மறைவான கருத்துகளால் பிறரைத் துன்பப்படுத்துகிறவர் செருப்பிற்கும் பாதத்திற்கும் இடையில் அகப்பட்ட பருக்கைக்கற்களைப் போன்றவராவர்.

குறுமக்கள் காவு நடல்

கஉஉ. உறுமக்க ளாக ஒருவரை நாட்டிப்
பெறுமாற்றம் இன்றிப் பெயர்த்தே யொழிதல்,
சிறுமைக்(கு) அமைந்ததோர் செய்கை. அதுவே
குறுமக்கள் காவு நடல்.

தனக்கு நன்மைபுரிபவராக ஒருவரை ஒரு செயலிலே அமைத்து, அவர் செய்த குற்றம் ஒன்று உண்டு என்ற சொல் இல்லாமலேயே, அவரை அச் செயலில் இருந்து விலக்குதல், கீழான பண்புக்கு அமைந்ததோர் செய்கையாகும். அச் செய்கை குழந்தைகள் சோலைவைப்பது போல் பயன்படாத தாகும்.

சுரைஆழ அம்மி மிதப்பு

கஉங. உரைசான்ற சான்றோர் ஒடுங்கி உறைய,
நிறையுளர் அல்லார் நிமிர்ந்து பெருகல்,
வரைதாழ் இலங்கருவி வெற்ப ! அதுவே
சுரையாழ அம்மி மிதப்பு.

மலையிலிருந்து தாழ்ந்து விளங்கும் அருவியையுடைய குறிஞ்சி நிலத்தலைவனே! புகழ் விளங்கும் சான்றோர் ஒடுங்கி வாழ, நல்ல குடிப்பிறப்பின் வரிசையில் பொருந்தாத கீழ் மக்கள் உயர்ந்து ஓங்கி வாழ்தலானது, தண்ணீரில் சுரை ஆழ அம்மி மிதப்பதைப் போன்றதாகும்.

நரகர்கட்கு இல்லையோ நஞ்சு

கஉச. தேர்ந்துகண் ணோடாது தீவினையும் அஞ்சலராய்ச்
சேர்ந்தாரை யெல்லாம் சிறிதுரைத்துத்—தீர்ந்த
விரகர்கட் கெல்லாம் வெறுப்பனவே செய்யும்
நரகர்கட் கில்லையோ நஞ்சு.

ஆராய்ந்து ஒருவரிடத்தும் கண்ணோட்டம் இல்லாமல், (கருணை இல்லாமல்) தீய செயல்கள் புரிவதற்கு அச்சம் கொள்ளாமல், தம்மோடு தொடர்புடையவர்களையெல்லாம் இழிவுபடுத்திப் பேசி, நெருங்கிய உறவினர்கள் எல்லாரும் வெறுக்கும் செயல் செய்யும் கொடியவர்களுக்கு, அவர் தம் உயிரை உண்ணும் நஞ்சு, உலகில் இல்லையோ?

14. நட்பின் இயல்பு

உமையாள் ஒருபாலாக் கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே.

கஉரு. **ஒட்டிய காதல் உமையாள் ஒருபாலாக்**
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே
விட்டாங்(கு) அகலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி யுழி.

தண்டினையும் வெல்லுகின்ற கொடியையுடைய சிவபெருமானும், பொருந்திய காதலையுடைய உமையவளைத் தன் உடலின் ஒரு பகுதியாகவே ஏற்றுக் கொண்டான், தம்முடன் நட்புக் கொண்டவர் தம்மை வந்தடையும் போது அங்கே விட்டு விலகாத தம் உடல் முழுதும் கலந்து கொள்ள வல்லவராம்.

ஒன்றேற்றி வெண்படைக் கோள் ஒன்று

கஉசா. **புரையின்றி நட்டார்க்கு நட்டார் உரைத்த**
உரையும் பொருள்முடிவும் ஒன்றால்—உரைபிறிது
கொண்டெடுத்துக் கூறல் கொடுங்கழித் தண்சேர்ப்ப !
ஒன்றேற்றி வெண்படைக்கோள் ஒன்று.

வளைந்த உப்பங்கழிகளையுடைய குளிர்ந்த நெய்தல் நிலத் தலைவனே! நண்பர்களுக்கு, நட்பாயினார் குற்றம் இல்லாமல் சொன்ன சொல்லும் அதன் பொருளும் வேறுபடாமல் ஒன்றேயாம். தம் சொல்லும் செயலும் வேறுபட வஞ்சனையால் விளக்கிக் கூறுதல், ஒருவன் இயற்றிய பாவினை எடுத்துக் கொண்டு மற்றொருவனது வெண்பாவாகப் புனைதலோடு ஒக்கும்.

இன்றாதே பேயோடாயினும் பிரிவு

கஉஎ. விலங்கேயும் தம்மோ டுடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியும் மலைநாட ! இன்றாதே
பேஎயோ டானும் பிரிவு.

விளங்கும் அருவிகள் பாய்ந்து இழியும் மலைநாடனே! விலங்குகள்கூடத் தம்மோடு சேர்ந்து வாழ்ந்து பழகிய நட்பினரை நீக்கி வாழமாட்டா. ஆதலால், பேயோடாயினும் நட்புக் கொண்ட பின்னர்ப் பிரிந்து வாழ்தல் துன்பம் தருவதாகும்.

பனியால் குளம் நிறைதல் இல்

கஉஅ. இனியாரை யுற்ற இடர்தீர் உபாயம்
முனியார் செயினும் மொழியால் முடியா,
துனியால் திரையுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப !
பனியால் குளநிறைத லில்.

அலைகள்சினந்து உலவும் அலைகின்ற கடல் நாடனே! மழை பொழியாமல், பனிபெய்தலால் குளம் நிறைதல் இல்லை அதுபோல, இனிய நண்பர் அடைந்த துன்பம் நீக்குதற்குரிய வழிகளை வெறுப்பின்றி இனிய மொழியாலே செய்தாலும், பொருளுதவி இன்றி அவர் அடைந்த துன்பம் நீங்குவதில்லை.

தீற்றாதோ நாய் நட்டால் நல்ல முயல்?

கஉகூ. தாம்நட் டொழுகுதற்குத் தக்கார் எனல்வேண்டா
யார்நட்பே யாயினும் நட்புக்கொளல் வேண்டும்
கானட்டு நாறுங் கதுப்பினாய் ! தீற்றாதோ
நாய்நட்டால் நல்ல முயல்.

எல்லா மலர்களையும் உடைய காட்டின் மணத்தை வென்று மணக்கின்ற கூந்தலையுடையவளே! நாயுடன் நட்புக்கொண்டால் நல்லமுயலை உணவாகத் தாராதோ? அதுபோல, தாம் நட்புக் கொண்டு பழகுவதற்குத் தக்கவரா என்று ஆராய வேண்டுவதில்லை. எத்தகையவர் நட்பே ஆயினும் அத் தகையவர் நட்பைப் பெறல் வேண்டும்.

முழநட்பிற் சாண்உட்கு நன்று

கரு௦. தீர்ந்தேம் எனக்கருதித் தேற்ரு தொழுகித்தாம்
ஊர்ந்த பரிவும் இலராகிச் — சேர்ந்தார்
பழமைகந் தாகப் பரியார் புதுமை
முழநட்பிற் சாணுட்கு நன்று.

இவரிடம் வேற்றுமையற்ற நட்பினைப் பெற்றுள்ளோம், என்று எண்ணித் தெளிவு இல்லாத செயல்களைச் செய்து, தம் மனத்தில் அமைந்த அன்பும் இல்லாதவராகிச் சேர்ந்தவரின் பழைமையைப் பற்றுக்கோடாகக் கொண்டு புதிய நட்பை நீக்கார். தீமைதரும் முழம்நீள நட்பை விட அஞ்சத்தக்க சாண்நீள நட்பே சிறந்தது.

உரையார் இழித்தக்க காணின் கனு

கருக. கொழித்துக் கொளப்பட்ட நண்பி னவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார் — என்கொல் ?
விழித்தலரும் நெய்தற் றுறைவா ! உரையார்
இழித்தக்க காணிற் கனு.

விழி மலர்தலைப் போன்று மலரும் நெய்தல் மலர்கள் நிறைந்த கடல் துறைவனே! அறிவுடையார், ஆராய்ந்து ஏற்றுக்கொண்ட நண்பரை, பலர் முன்னால் இழித்துப் பேசார். ஏனெனில். இழிவான கனவு கண்டால் பிறரிடம் கூறினால் தமக்கு இழிவு வரும் என்று, பிறரிடம் கூறார்.

யாருளரோ தங்கன்று சாக்கறப்பார்

கருஉ. நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் — காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்.

பண்ணின் தன்மை கொண்ட இனிய மொழிகளையும் மூங்கில் போன்ற தோள்களையும் உடையவளே! நட்புக் கொண்டு தம்மால் நிலைநிறுத்தப் பெற்றவர்களை, கண் கூடாகக்கண்ட குற்றம் அவரிடத்து அமைந்துள்ளதென்றாலும் சினங்கொள்ளார். தம் கன்றிற்குப் பால் விடாமல் அது சாமாறுபசுவினைக் கறப்பவர் எவர் உளர் ?

ஒருவர் பொறை இருவர் நட்பு

கசஈ. தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம்—அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப !
ஒருவர் பொறையிருவர் நட்பு.

அழகிய குளிர்ந்த கரையில் அலைகள் வந்து மோதி உலவிப் பெருகுகின்ற நீர்நாடனே ! ஒருவரின் பொறுமைப் பண்பு, இருவரது நட்புக்குக் காரணமாகும். ஆதலால் நட்புக் கொண்டவர்களுக்குத் தம்மால் செய்த ஒரு தீமையும் இல்லாதவர், நண்பர்கள் தமக்குச் செய்த தீங்கையும் தம் மால் வந்த தீங்கெனவே கருதிப் பொறுத்துக்கொள்வர்.

மறையார் மருத்துவர்க்கு நோய்

கஈச. தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்பர் எனப்பட்டார்க்(கு)
உற்ற குறையை உரைப்பதாம்—தெற்ற
அறையார் அணிவளையாய் ! தீர்தல் உறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்.

தெளிவாக ஒலித்தல் நிறைந்த அழகிய வளையல்களை அணிந்தவளே! தாம் உற்ற நோய் நீங்க விரும்புகின்றவர், மருத்துவரிடத்தில் தமக்குள்ள நோயை மறைக்க மாட்டார். அதுபோல, மிகவும் மனமிரங்கித் தம் துன்பத்தைக் கேட் டால், தம் துயரைத் துடைப்பர் என்று கருதப்பட்டவரிடத் தில் தாம் அடைந்த துன்பத்தை மறைக்காமல் கூறுவர்.

கெட்டார்க்கு நட்டாரோ இல்

கஈரு. முட்டின்(று) ஒருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப ! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்.

தொடுத்துக் கட்டப்பட்ட மலர்மாலை அணிந்த மார்பனே ! ஒருவர் குறைவில்லாத செல்வமுடைய காலத்தில், அவருடைய சமையல் அறையில் உரிமையுடன் தின்பவர் மிகப் பலராவர். வறுமை அடைந்து நொந்தவர்க்கு நண்பராயினர் ஒருவரும் இலராவர்.

15. நட்பில் விலக்கு

உண்ணுங் துணைக் காக்கும் கூற்று

கரு௬. கண்ணுள் மணியேபோல் காதலால் நட்டாரும்
எண்ணுந் துணையிற் பிறராகி நிற்பரால்
எண்ணி உயிர்கொள்வான் வேண்டித் திரியினும்
உண்ணுந் துணைக்காக்கும் கூற்று.

இயமன் கருதி, ஒருவர் உயிரைக் கொள்ளுதற்கு உலவி னாலும், தான் அவ்வுயிரைக் கொள்ளவேண்டிய காலம் வரும் வரை காத்து நிற்பான். அதுபோல, ஒருவனைத் தம் கண்ணுள் கருமணியைப் போல் ஒரு செயலின்மேல் உள்ள அன்பினால் நட்புக் கொண்டவர்களும் தம் செயல் நிறைவுறக் கருதிய காலம் வந்தபோது நட்பை விட்டு விலகி மற்றவராய் நிற்பர்.

மச்சேற்றி ஏணி களைவு

கரு௭. எய்ப்புழி வைப்பாம் எனப்போற்றப் பட்டவர்
உற்றுழி ஒன்றுக் குதவலார், பைந்தொடீஇ!
அச்சிடை யிட்டுத் திரியின், அதுவன்றே
மச்சேற்றி ஏணி களைவு.

பசுமையான வளையல்களை அணிந்தவளே! நமக்குப் பொருள் தளர்ச்சி வந்தபோது, சேர்த்து வைத்த பொருளைப் போல் உதவுவார் எனக் கருதி, நம்மால் நட்புக் கொள்ளப் பட்டவர், நமக்குத் துன்பம் வந்தபோது சிறிதும் உதவாமல், அச்சத்தின் காரணமாய் மாறுபட்டு நடக்கும் செயல், ஒருவனை மச்சு ஏறச் செய்து ஏணியை எடுத்துவிடும் செயலைப் போன்றதாகும்.

கழி விழாத் தோளேற்று வார்

கரு௮. பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி அமருள் தலைப்பெய்யார்—போக்கி
வழியராய் நட்டார்க்கு மாதவம்செய் வாரே,
கழிவிழாத் தோளேற்று வார்.

பாம்புக் கொடியையுடைய துரியோதனனுக்குப் போரில் துணை நிற்கவேண்டியவனாகிய பால் போன்ற மேனியுடைய

பலராமனைப்போன்று, துன்புறுத்தும் போரில் தலைகாட்டாமல், வழி வழியாய்த் தம்மோடு நட்புக் கொண்டவரின் உயிரைப் போகச்செய்து, பின்னர், நண்பரின் உயிர் அமைதி யடைய பெருந்தவம் செய்வார், விழா முடிந்த ஊரில் தம் குழந்தைகளுக்கு விழாவினைக் காண்பிக்கத் தோள்மேல் சுமப்பவரோடு ஒப்பர்.

பின்னின்னா பேதையார் நட்பு

கூகூ. இடையீ டுடையார் இவரவரோ டென்று
தலையாயார் ஆராய்ந்தும் காணார்—கடையாயார்
முன்னின்று கூறும் குறளை தெரிதலால்
பின்இன்னா பேதையார் நட்பு.

தலைமைப் பண்புடையார் தம் நண்பர்கள் மேல் சிலர் கோள் சொன்னால், இவர் அவரோடு பகைமையுடையவர் என்று கருதி அச் சொல்லை ஆராய்ந்தும் குற்றம் காணார்; கீழ்மையான பண்புடையார், தம் நண்பர் மேல் பிறர் வந்து கூறும் கோள்களை மெய்யாகக் கொள்வர். ஆதலால், அறிவில்லாதவரோடு கொள்ளும் நட்பு, பின்னர் துன்பமாக அமையும்.

கானகத்து உக்க நிலா

கசo. தாமகத்தால் நட்டுத் தமரென் றொழுகியக்கால்
நாணகத்துத் தாமின்றி நன்றொழுகா ராயினென் ?
மான்மானும் கண்ணாய் ! மறந்தும் பரியலரால்
கானகத்து உக்க நிலா.

மான் போன்ற மருண்ட பார்வையை யுடையவளே ! சிலர் தாம் உள்ளத்தால் நட்புக் கொண்டு தம் உறவினர் என்று பழகியபோதும் அவர் தம் மனத்துள் நாணம் இல்லாமல் நட்புக்குரிய நல்ல செயல்களைச் செய்து பழக வில்லையானால், அத்தகைய நட்பால் என்ன பயன்? அத்தகைய நட்பினர் மறந்தும் இரக்கம் கொள்ளார். அவர்தம் நட்பு, காட்டில் காய்ந்த நிலவு போன்றதாகும்.

விண்டற்கு விண்டல் மருந்து

கசக. கண்டறிவார் போலார் கெழீஇயின்மை செய்வாரைப்
பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல், அதுவன்றே
விண்டற்கு விண்டல் மருந்து.

தம்மை முன்னரே கண்டறிந்திருந்தும், கண்டறிந் தவர் போல் நட்பின்மை செய்வாரை, தாமும் அவரை முன் அறிந்தவரைப் போன்று இல்லாமல், அவரைப் போலவே நட்பின்மை செய்து பிரிந்து விலகி நட்பினை மாற்றிவிடுக. அச்செயல் ஒருவன் தன்னிடத்துக் கொண்ட அன்பில்விலகிய வனுக்குத் தானும் அன்பிலிருந்து விலகுதல், மருந்தாகும் அல்லவா ?

இருதலைக் கொள்ளி

கசஉ பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ(டு) ஒன்றி ஒருப்படா தாரே,
இருதலைக் கொள்ளியென் பார்.

தம்மிடத்துப் பெரிதும் நட்புக் கொண்டவர்க்கும் அவர்தம் பகைவர்க்கும் ஒரு மாறுபாடும் இல்லாமல் நட்பாயினர் போன்று சென்று, அவர்களது பகைமையை மிகுதிப்படுத்தும் மொழிகளை மொழிந்து, அவர்கள் ஒருவரோடும் மனம் ஒன்றுபட்டு நன்மை தரும் செயல்களைச் செய் யாதவரே இரண்டு முனைகளிலும் சுடுகின்ற கொள்ளிக் கட்டையோடு ஒப்பர்.

16. பிறரியல்பைக் குறிப்பாலறிதல்

கண்டது காரணம் ஆமாறு

கசங. பேருலையுள் பெய்த அரிசியை வெந்தமை
ஓர்முறை யாலே உணர்ந்தாங் – கியார்கண்ணும்
கண்டதனல் காண்டலே வேண்டுமாம் யார் கண்ணும்
கண்டது காரணமாம் ஆறு.

எத்தகையவரிடத்தும் காணப்பட்ட குணமே, காணப் படாத பிற குணங்களையும் அறிவதற்கு உரிய முறையாகும். ஆதலால், கொதிக்கின்ற பெரிய உலையுள் இட்ட அரிசி வெந்த முறையை ஓர் அகப்பைச் சோற்றால் அறிந்து கொள்ளுதலைப் போன்று, யாவரிடத்தும் அறிந்த ஒரு பண்பினைக் கொண்டே அவரிடம் அமைந்துள்ள மற்றப் பண்புகளையும் அறிதல் வேண்டும்.

கணையிலும் கூறியவாம் கண்

கசச. யாந்தீய செய்த மலைமறைத்த தென்றெண்ணித்
தாந்தீயார் தந்தீமை தேற்றுரால்—ஆம்பல்
மணவில் கமழும் மலிதிரைச் சேர்ப்ப !
கணையிலுங் கூறியவாம் கண்.

ஆம்பல்மலர்கள் திருமண வீடு போன்று மணக்கும் மிக்க அலைகளை உடைய நெய்தல் நிலத்தவனே ! யாம் செய்த தீய வினைகளைப் பிறர்க்குத் தெரியாமல் மலை மறைத்தது என்று கருதித் தீயவர், தாம் செய்த தீய செயல்களிலிருந்து தெளியார். மறைத்த செயல்களைக் கண்கள், அம்பினும் கூர்மையாய் உள்புகுந்து காணவல்லனவாம்.

உள்ளம் படர்ந்ததே கூறும் முகம்

கசரு. வெள்ளம் வருங்காலை ஈரம்பட்(டு) அஃதேபோல்
கள்ளம் உடையாரைக் கண்டே அறியலாம்
ஒள்ளமர் கண்ணாய்! ஒளிப்பினும் உள்ளம்
படர்ந்ததே கூறும் முகம்.

ஒளி பொருந்திய கண்களையுடையவளே ! வெள்ளம் வரும்போது ஆற்று மணலில் ஈரம் தோன்றுதலால்,வெள்ளம் வருவதை முன் உணர்வதுபோல, வஞ்சனையான எண்ணம் உடையவர்களை அவர்தம் முகத்தைக் கண்டே அறியலாம். ஒருவர் தம்கருத்தை வெளிப்படுத்தாமல்மறைத்தாலும் அவர் மனம் நினைத்ததை அவருடைய முகம் வெளிப்படுத்தும்.

மகனறிவு தந்தை யறிவு

கசசு. நோக்கி அறிகல்லாத் தம்முறுப்புக் கண்ணாடி
நோக்கி அறிப. அதுவேபோல்—நோக்கி
முகனறிவார் முன்னம் அறிப. அதுவே
மகனறிவு தந்தை யறிவு.

நம் கண்ணால் பார்த்து அறியமுடியாத நம் முகத்தைக் கண்ணாடியில் பார்த்து அறிந்துகொள்ளுகிறோம் ; அது போன்றே நோக்கி ஒருவன் முகத்தை அறிபவர், அவன் கருத்தை அறிவர் ; உள்ளக் கருத்தை முகம் நோக்கி அறிதலானது, மகனறிவால் தந்தையின் அறிவை அறிந்து கொள்ளுதலைப் போன்றதாகும்,

புலப்புல வண்ணத்த புள்

கசஎ. ஒரும் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேரும் திறமரிதால் தேமொழி ! —யாரும்
குலக்குல வண்ணத்த ராகுப ; ஆங்கே
புலப்புல வண்ணத்த புள்.

தேன் போன்ற இனிய மொழிகளை உடையவளே ! ஒருவருடைய மனத்தின் இயல்பை ஆராய விரும்பும் ஒருவரால், ஆராயும் ஆற்றல் இல்லை. தாம் வாழும் நிலத்திற்கேற்ற இயல்புடையனவாக இருக்கும் பறவைகளைப் போல மக்கள் யாவரும் தாம்பிறந்த குலத்துக்குத் தக்க இயல்புடையவராய் விளங்குவர்.

தம்சாதி மிக்கு விடும்

கசஅ. காப்பான் மடமகள் காப்பான்கைப் பட்டிருந்தும்
மேய்ப்பாட்ட தென்றுண்ணுள் ஆயினுள்—தீப்புகை
மஞ்சாடு வெற்ப ! மறைப்பினும் ஆகாதே போல்
தஞ்சாதி மிக்கு விடும்.

நெருப்பின் புகையைப் போன்று மேகம் சூழ்ந்து உலவும் மலைநாடனே ! ஆட்டு மந்தையைக் காக்கும் ஆயரின் இளமகள், மண்ணைக் காக்கும் மன்னனின் மனைவியாய் இருந்தும் (ஒருநாள் பால்பருகும்போது) இது மேய்ச்சல் சூல்கொண்ட ஆட்டின் பாலாதலால் சுவை இல்லை என்று அப் பாலைப் பருகவில்லை. ஒருவர் தம் குலத்துக்குரிய இயல்பை மறைத்தாலும் மறைக்க முடியாமல் அது முற்பட்டுத் தோன்றி அறிவித்து விடும்.

அயலறியா அட்டூண் இல்

கசகூ. முயலவோ வேண்டா முனிவரை யானும் ;
இயல்பினர் என்ப(து) இனத்தால் அறிக
கயல்இயலும் கண்ணுய் ! கரியரோ · வேண்டா
அயலறியா அட்டூணே இல்.

கயல்மீன் போன்று பிறழும் கண்ணையுடையவளே ! அடுத்த வீட்டவர் அறியாமல் சமைக்கப்படும் உணவோ இல்லை அதுபோல, ஒருவர் இத் தகைய இயல்புடையவர்

என்று அறிவதற்கு மற்றென்றால் முயன்றறிய வேண்டுவது ஒன்றில்லை. முனிவரானாலும் அவர் சேர்ந்த இனத்தாலே அவரை அறிந்துகொள்க. அதற்கு வேறு சான்றுகள் வேண்டுவதில்லை.

17. முயற்சி

தமக்கு மருத்துவர் தாம்

கரு௧. எமக்குத் துணையாவார் வேண்டுமென் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா
பிறர்க்குப் பிறர்செய்வ(து) உண்டோ! மற்(று) இல்லை
தமக்கு மருத்துவர் தாம்.

தம் நோய்க்கு மருத்துவர் தாங்களேயாவர். ஆதலால், எமக்குத் துன்பம் வந்தால் துணையாக அமைகின்றவர் வேண்டும் என்று எண்ணித் தமக்குத் துணையாக அமைகின்றவரை ஆராய்ந்து தேடவேண்டா. பிறர் ஒருவர்க்குப் பிறரால் செய்ய வேண்டுவது யாதேனும் ஒன்று உண்டோ? துணையாவாரைக் கண்டாலும் ஒரு நன்மையும் விளையாது.

இளையானே யாயினும் மூத்தானே ஆடுமகன்

கரு௧. கற்றதொன் றின்றி விடினும் கருமத்தை
அற்ற முடிப்பான் அறிவுடையான்—உற்றியம்பும்
நீத்தநீர்ச் சேர்ப்ப ! இளையானே யாயினும்
மூத்தானே யாடு மகன்.

ஊழிக்கால வெள்ளம் போல் பரவிய நீரையுடைய சேர்ப்பனே ! கற்று அறிந்தது ஒருசிறிதும் இல்லாவிடினும், தொடங்கிய செயலைத் தளர்ச்சி இல்லாமல் நிறைவேற்றுபவன் அறிவுடையவனாவான். செயலின் தன்மையைக் குறிப்பால் உணர்ந்து சொல்லிச் செயலை முடிப்பவன், வயதால் இளையவனாயினும் அறிவால் மூத்தவனாவான்.

வருந்தாதார் வாழ்க்கை திருந்துத லின்று

கரு௨. வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யாலும் வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோள் இலராய் வருந்தாதார்
வாழ்க்கை திருந்துதல் இன்று.

மற்றவருக்கு உதவி செய்து, வரும் விருந்தினரைப் போற்றிக் கொடுமையான போரில் வாள் போர் செய்யும் ஆண்மையிலும் வலிமையுடையவராகி, முயற்சியைக் குறைவிக்கும் சோம்பல் கொள்ளாதவராகி, முயன்று வருந்திச் செயல்படாதவர்களின் இல்லறவாழ்வு திருத்தம் அடைதல் இல்லை.

நின்றது சென்றது பேராதவா

கரு௩. ஒன்றால் சிறிதால் உதவுவதொன் றில்லையால்
என்றுங்(கு) இருப்பின் இழுக்கம் பெரிதாகும்
அன்றைப் பகலேயும் வாழ்கலார், நின்றது
சென்றது பேரா தவர்.

நம்மிடம் உள்ளபொருள் ஒன்று என்றும், சிறிது என்றும், நாம் மேற்கொண்ட செயலை முடிக்கப் போதுமான உதவி இல்லையென்றும் கருதி முயலாதிருப்பின் பெரியகுற்றமாகும், தம்மிடமிருந்த பொருளைப் பிறர்க்குக் கொடுத்தும் கொடுத்த பொருளைத் தாம் மீட்டுக்கொண்டும் எவ் வழியிலும் முயலாதவர் ஒருநாளும் வாழார்.

முனிவில்லார் முன்னியது எய்தாமை இல்

கரு௪. இனியாரும் இல்லாதார் எம்மில் பிறர்யார்
தனியேம்யாம் என்றொருவர் தாமடியல் வேண்டா :
முனிவிலர் ஆகி முயல்க. முனிவில்லார்
முன்னிய(து) எய்தாமை இல்.

இப்பொழுது துணையாக ஒருவரையும் இல்லாதவர் எம்மைப்போல் வேறு எவருளர்? யாம் தனிமை யுடையவரானோம், என்று கருதி ஒருவர் சோம்பி இருக்கவேண்டா. மேற்கொண்ட செயலில் வெறுப்பில்லாமல் தொடர்ந்து முயலுக. செயலாற்றுவதில் வெறுப்பில்லாதவர், தாம் கருதியதை அடையாமல் இருத்தல் இலர்.

யாதானும் செய்தக்கால் யாதானும் ஆகிவிடும்

கருரு. தற்றூக்கித் தந்துணையுந் தூக்கிப் பயன்தூக்கி
மற்றவை கொள்வ மதிவல்லார்—அற்றன்றி
யாதானும் ஒன்றுகொண்டு யாதானும் செய்தக்கால்
யாதானும் ஆகி விடும்.

அறிவாற்றல் உள்ளவர்கள், ஒரு செயலைச் செய்வதற்கு முன் தன் ஆற்றலை ஆராய்ந்து. தனக்குத் துணையாவாரையும் ஆராய்ந்து, அதன் விளைவையும் ஆராய்ந்து அவற்றை மேற் கொள்வர் அவ்வாறு ஆராயாமல் தமக்குத் தகுதியில்லாத செயலை மேற்கொண்டு அச் செயலைச் செய்யும் முறையையும் அறியாமல், ஏதேனும் ஒன்றைச் செய்தால், நாம் நினைத் ததற்கு மாறாக அமைந்து துன்பத்தைக் கொடுத்துவிடும்.

கூர் அம்பு அடியிழுப்பின் இல்லை அரண்

கருசு. வீங்குதோட் செம்பியன் சீற்றம் விறல்விசும்பில்
தூங்கும் எயிலும் தொலைத்தலால், — ஆங்கு
முடியும் திறத்தால் முயல்கதாம் கூரம்
படியிழுப்பின் இல்லை யரண்.

திரண்ட தோளையுடைய சோழனது கோபம், உயர்ந்த விண்ணில் இயங்கிக் கொண்டிருந்த அசுரர்களின் கோட்டை களைத் தேவர்களுக்காக அழித்தது, ஆதலால், மேற்கொண்ட செயலை முடிக்கும் ஆற்றலால் முயல்க. கூர்மையான அம்பை அடியமைய இழுத்துத் தொடுத்தால் அதனைத் தடுப்பதற் குரிய கவசம் இல்லை

பெரியவாம் ஆற்றவும் முன்கைநெடியார்க்குத் தோள்

கருஎ. எங்கண்ணொன் றில்லை எமரில்லை என்றொருவர்
தங்க ணழிவுதாம் செய்யற்க — எங்கானும்,
நன்கு திரண்டு பெரியவாம், ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள்.

எம்மிடத்தில் ஒரு பொருளும் இல்லை. எமக்கு உறவினரும் இலர் என்று ஒருவர் தம் மனம் தளர்ந்து, தமக்கு வரும் புகழைஅழிக்கத் தக்கனவற்றைச் செய்யவேண்டா. எவ் விடத்துப் பிறந்தவராயினும் மிகவும் முன்கை நீண்ட வர்க்குத் தோள்கள் மிகவும் பருத்துப் பெரியனவாய் இருக்கும்-

உலக்கை மேல் காக்கை என்பார்

கருஅ. நிலத்தின் மிகையாம் பெருஞ்செல்வம் வேண்டி
நலத்தகு வேந்தருள் நல்லாரைச் சார்ந்து,
நிலத்து நிலைகொள்ளாக் காலரே காணின்,
உலக்கைமேல் காக்கையென் பார்.

உலகில் வாழ்வதற்குப் பெருஞ்செல்வத்தை விரும்பி. நன்மைக்குத் தகுந்த மன்னருள் நல்லவர் ஒருவருடன் சேர்ந்து அவரிடம் வாழாமல், ஓரிடத்தும் நிலை கொள்ளாத கால்களை உடையவர்களை ஆராய்ந்தால், அவர்களை, உலக்கை மேல் காக்கை போன்று நின்றுழலும் தன்மையர் என்பர்.

பெரிது உக்கு ஓடிக் காட்டிவிடும்

கடுகூ. தலைக்கொண்ட தங்கருமம் தாமடி கொண்டு,
கடைப்பிடி யில்லாதார் பால்வைத்துக்—கடைப்பிடி
மிக்கோடி விட்டுத் திரியின், அதுபெரி(து)
உக்கோடிக் காட்டி விடும்.

ஒருவர் தாம் மேற்கொண்ட தமது செயலைச் சோம்பல் காரணமாக, முடிக்கும் துணிபு இல்லாதவரிடம் ஒப்படைத்துச் செயலைச் செய்து முடிக்கும்துணிவைக் கைவிட்டுச் செருக்கித் திரிந்தால், தாம் மேற் கொண்ட செயல் மிகவும் சிதைந்து அழியும்.

பாய்பவோ வெந்நீரும் ஆடாதார் தீ

கசுo. தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கல்லார்
பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்,
சென்னீர் அருவி மலைநாட ! பாய்பவோ
வெந்நீரு மாடாதார் தீ.

பரந்து செல்லும் அருவி நீருடைய குறிஞ்சி நிலத்தவனே! தம்மால் செய்து முடிக்கக் கூடிய ஒரு செயலைத் தாமாகவே செய்து முடிக்காமல், பின்னர் மற்றொருவரால் செய்வித்துக் கொள்ளலாம் என்று சோம்பி இருத்தலானது, வெந்நீரிலும் குளிக்காதவர் நெருப்பில் பாய வல்லவர் ஆவரோ? பாய வல்லவர் ஆகார்.

இழுகினல் நாகாப்ப தில்லையே முன்னம் எழுதினன் ஓலை பழுது

கசுக. முழுதுடன் முன்னே வகுத்தவன் என்று
தொழுதிருந்தக் கண்ணே ஒழியுமோ அல்லல் ?
இழுகின ளுகாப்ப தில்லையே, முன்னம்
எழுதினன் ஓலை பழுது.

முழுதுலகத்தையும் முன்னே படைத்தவன், நம் துன்பத்தையும் படைத்தான் என்றெண்ணி, அவனை வணங்கி ஒரு செயலையும் செய்யமுயலாமல் இருந்தால், நம்முடைய துன்பம் நீங்குமோ? முன்னர் ஓலை பழுது படுமாறு தவருக எழுதினவன், தாம் தவறிழைத்தவஞக அறிந்தபின்னர் செய்த குற்றத்தைக் காப்பதில்லை.

இல்லதற்கு இல்லை பெயர்

கசுஉ. முடிந்ததற் கில்லை முயற்சி முடியா
தொடிந்ததற் கில்லை பெருக்கம் — வடிந்தற
வல்லதற் கில்லை வருத்தம் உலகினுள்
இல்லதற் கில்லை பெயர்.

நிறைவுற்ற செயலுக்கு மேலும் முயற்சி தேவையில்லை. செயல் நிறைவு பெறுமல் இடையே சிதைந்ததற்கு ஆக்கமும் இல்லை. தெளிவுற்றுக் குற்றம் இல்லாமல் ஒன்றைச் செய்ய ஆற்றல் உள்ளதற்கு அதனைச் செய்து முடிக்கும்போது துன்பம் இல்லை. உலகில் இல்லாத பொருளுக்குப் பெயர் இல்லை.

18. கருமம் முடித்தல்

வெந்நீரில் தண்ணீர் தெளிதது

கசுங. செந்நீரார் போன்று சிதைய மதிப்பார்க்கும்,
பொய்ந்நீரார் போன்று பொருளை முடிப்பார்க்கும்,
அந்நீ ரவரவர்க்குத் தக்காங் கொழுகுபவே
வெந்நீரில் தண்ணீர் தெளித்து.

தம் காரியம் அழியுமாறு செய்கின்றவர்கள் மற்றவர்களிடம் செம்மையான இயல்பினரைப் போன்றும், தாம் நினைத்த செயலை முடிக்கின்றவர் பிறரிடம் பொய்மையான இயல்புடையவரைப் போன்றும், வெம்மையான நீரில் குளிர்ந்த நீரைக் கலந்து ஆற்றிஞர் போல அத்தன்மையுடைய அவரவர்க்குத் தகுந்த இயல்பின்படி ஒழுகுபவராவர்.

உண் ஓட்டு அகல் உடைபபார்

கசுச. தாமாற்ற கில்லாதார் தாஞ்சாரப் பட்டாரைத்
தீமாற்றத் தாலே பகைப்படுத்திட்(டு) — ஏமாப்ப
முன்னேட்டுக் கொண்டு முரணஞ்சிப் போவாரே,
உண்ஓட்(டு) அகலுடைப் பார்.

தம்மைச் செம்மையாக வைத்துக் கொள்ளமுடியாதவர் தமக்குத் துணையாய் அமைந்தவரைக் கொடுஞ் சொற்களால் பகைவராக்கிவிட்டு, அவரோடு பகைமை கொள்ளவும் அஞ்சி, தமக்குப் பாதுகாப்புக்காக முற்பட ஓடுவதை மேற்கொண்டு செல்பவர், தாம் உண்ணுகின்ற ஓடாகிய உண்கலத்தை உடைக்கின்றவரோடு ஒப்பர்.

விரையிற் கருமம் சிதையும்

கசரு. புரையக் கலந்தவர் கண்ணும் கருமம்
உரையின் வழுவா துவப்பவே கொள்க.
வரையக நாட ! விரையிற் கருமம்
சிதையும் ; இடராய் விடும்.

மலைமேல் உண்டாகிய நாடனே! மனம் கலந்து நட்புக் கொண்டவரிடத்தும் பேசும் பேச்சில் தவறில்லாமல், அவர்கள் மனம் மகிழுமாறு செயலை நிறைவேற்றிக் கொள்க. அச் செயலை நிறைவேற்றுக் கொள்ள விரைவாராயின் காரியம் கெடும் ; அவ்வாறு காரியம் கெடுதலால் தமக்குத் துன்பமாய் அமைந்துவிடும்.

தொளை எண்ணார் அப்பம் தின்பார்

கசசு. நிலைஇய பண்பிலார் நேரல்லர் என்றொன்(று)
உளைய உரையா(து) உறுதியே கொள்க.
வளையொலி ஐம்பாலாய் ! வாங்கி யிருந்து
தொளையெண்ணார் அப்பந்தின் பார்.

சுருண்டு தழைத்த ஐந்து பகுதிகளாக அமைந்த கூந்தலையுடையவளே! அப்பம் தின்பவர் அதனைக் கையில் வாங்கி வைத்துக் கொண்டு அதிலுள்ள தொளையை எண்ணிக் கொண்டிராமல் தின்பர். 'நிலைத்த பண்பில்லாதவர், நடுவு நிலைமை இல்லாதவர்' என்று அவர் மனம் வருந்துமாறு ஒரு சொல்லும் சொல்லாமல், அவரிடம் தாம் பெற நினைத்த பயனைக் கொள்க.

அம்பு விட்டு ஆக் கறக்குமாறு

கசஎ. அன்பின் நெகிழ வழிபட்டுக் கொள்ளாது
நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வது,
கன்றுவிட் டாக்கறக்கும் போழ்தில் கறவாது
அம்புவிட் டாக்கறக்கு மாறு.

அன்பினால் ஒருவன் மனம் நெகிழுமாறு தான் அவனை வழிபட்டுப் பயனைப் பெற்றுக் கொள்ளாமல், தான் கருதிய போதே நிறைவேற்றிக் கொள்வோம் என்று கருதி முயலுதலானது, பசுவை வழக்கமாகப் பால் கறக்கின்ற வேளையில் கன்றைவிட்டுக் கறவாமல், பசுவைத் தான் நினைத்தபோது அம்பினைச் செலுத்திக் கறக்கும் முறையினை ஒக்கும்.

மூரி உழுது விடல்

கசுஅ. மடியை வியங்கொள்ளின் மற்றைக் கருமம்
முடியாத வாறே முயலும்—கொடியன்னாய்!
பாரித் தவனை நலிந்து தொழில்கோடல்
மூரி உழுது விடல்.

கொடி போன்ற இடையை உடையவளே! சோம்பலுடையவனை ஒரு செயல் செய்யுமாறு ஏவினால், அவன் அச்செயல் நிறைவேறாதவாறு முயல்வான். சோம்பலால் பெருத்தவனைத் துன்பப்படுத்தி வேலை வாங்குதல் கிழ எருதினைக் கொண்டு நிலத்தை உழுதவனோடு ஒக்கும்.

தஞ்சாகாடேனும் உயவாமல் சேறலோ இல்

கசுகூ. ஆணியாக் கொண்ட கருமம் பதிற்றாண்டும்
பாணித்தே செய்ப வியங்கொள்ளின்—காணி
பயவாமல் செய்வாரார்? தஞ்சாகா டேனும்
உயவாமல் சேறலோ இல்.

தம்முடைய வண்டியே ஆனாலும் உயவு நெய் (வண்டிமை) இடாமல் செல்லுதல் இல்லை. அதுபோல, காணியளவு பொருளாயினும் பயனைக் கொள்ளாமல் செயலாற்றுபவர் யார்? எவரும் இலர். ஆணியைப் போன்று உறுதியாகக் கொண்ட செயலைப் பொருள் கொடாமல் செய்ய ஏவினால், பத்தாண்டுக் காலமும் காலம் கடந்தே விரைவின்றியே செய்வர்.

தட்டாமல் செல்லாது உளி

கஎ௦. விட்டுக் கருமம் செயவைத்த பின்னரும்
முட்டா தவரை வியங்கொளல் வேண்டுமால்.
தொட்டக்கால் மாழ்கும் தளிர்மேலே நிற்பினும்
தட்டாமல் செல்லா துளி.

தொட்டவுடன் துவளும் தளிரின் மேலே உளி நின்றாலும் அவ்வுளியை ஒருவன் தட்டாமல் அத்தளிரை அறுத்துச் செல்லுதல் இல்லை. ஆதலால் ஒருவரிடம் ஒரு காரியத்தைச் செய்யுமாறு பொறுப்பைக் கொடுத்தபின்னரும் அவரை இடைவிடாமல் (தொடர்ந்து) ஏவி ஆராய்தல் வேண்டும்.

பூசையைக் காப்பிடுதல் புன்மீன் தலை

கஎக. காட்டிக் கருமம் கயவர்மேல் வைத்தவர்
ஆக்குவர் ஆற்ற எமக்கென்றே அமர்ந்திருத்தல்
மாப்புரை நோக்கின் மயிலன்னாய் ! பூசையைக்
காப்பிடுதல் புன்மீன் தலை.

மாவடுவினைப் போன்ற கண்களையும் மயில்போன்ற சாயலையும் உடையவளே! செயலினைச் சுட்டிக்காட்டிக் கீழ் மக்களிடம் அச்செயலினை முடித்துக் கொடுக்கும் பொறுப்பை ஒப்படைத்தவர், அக்கீழ்மக்கள் எமக்குச் செயலை நன்கு முடித்துக் கொடுப்பர் என்று அமைதியாக இருத்தலானது, புன்மையான மீனை உலர்த்துமிடத்தில் பூனையைக் காவல்வைப்பதனோடு ஒக்கும்.

மற்றதன் பாற்றேம்பல் நன்று

கஎஉ. தெற்ற அறிவுடையார்க் கல்லால் திறனிலா
முற்றலை நாடிக் கருமஞ் செயவையார்
கற்றொன் றறிந்து கசடற்ற காலையும்
மற்றதன் பாற்றேம்பல் நன்று.

தெளிவான அறிவுடையவர்களிடம் அல்லாமல் திறமையில்லாத வயதால் முதிர்ந்தவர்களிடம் ஆராய்ந்து தம் செயலைச் செய்யும் பொறுப்பை ஒப்படைக்க மாட்டார். ஒன்றைக் கற்றறிந்து, அக்கல்வியில் குற்றம் இல்லாமல் விளங்கியபோதும் நல்லகுணம் இல்லாதவரிடம் கொண்ட நட்புக் குறைதலே நன்றாம்.

இழவன்று எருதுண்ட உப்பு

கஎங. உற்றான் உறாஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க—கற்றான்
கிழவ னுரைகேட்கும் கேளா னெனினும்
இழவன்(று) எருதுண்ட உப்பு.

இவன் தமக்கு உறவினன்; பகைவன் என்று ஆராய வேண்டா: ஒளி பொருந்திய செல்வத்தைக் கற்று அறிந்தவனை ஆராய்ந்து கொடுக்க. நூல்களை முறையாகக் கற்றவன், தன்னை ஆளாக்கிய தலைவனது சொற்களைக் கேட்டு நடப்பான். அவ்வாறு சொற்களைக் கேட்டு நடக்கவில்லை யாயினும் எருது உண்ட உப்பு இழப்பாகாமை போன்று அவன் நன்மை நல்கா தொழியான்.

தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை இல்லையே அட்டாரை ஒட்டாக் கலம்

களச. கட்டுடைத் தாகக் கருமஞ் செயவைப்பின்
பட்டுண்டாங் கோடும் பரியாரை வையற்க
தொட்டாரை ஒட்டாப் பொருளில்லை ; இல்லையே
அட்டாரை ஒட்டாக் கலம்.

கையால் தொட்டவரை ஒட்டிக்கொள்ளாத பொருள் இல்லை; சமைத்தவரைப் பொருந்திப் பயன்தாராத உணவுள்ள கலமும் இல்லை. ஆதலால், காவலாக அமைய வேண்டிய ஒரு செயலை ஒருவனைக் கொண்டு செய்யவைத்தால், அச் செயலில் உள்ள ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டு நம்மை நீங்கும் அன்பில்லாதவரை அக்கருமத்தில் பொறுப்புக் கொடுக்க வேண்டா.

இறக்குமை யாட்டை உடம்படுத்து வெளவுண்டார் இல்.

களரு. நாட்டிக் கொளப்பட்டார் நன்மை இலராயின்
காட்டிக் களைதுமென வேண்டா—ஓட்டி
இடம்பட்ட கண்ணாய் ! இறக்குமை யாட்டை
உடம்படுத்து வெளவுண்டா ரில்.

குழைகளை அசைத்து விளங்கி அகன்ற கண்களை உடையவளே! சாகக்கிடக்கும் வெள்ளாட்டை உடன்படச் செய்து, அதன் இரத்தத்தை உட்கொண்டவர் எவரும் இலர்; அவர்போன்று தம்மாலே நட்பு ஆக்கிக் கொள்ளப் பட்டவர், நமக்கு நன்மை செய்யவில்லையானால், அவரிடம் அவ்வாறு செய்யாமையைத் தெரிவித்துப் பின்னர், அச் செயலைச் செய்வதில் இருந்து நீக்குவோம் என்று கருத வேண்டா.

நீள்கயத்துள் யாமை நனைந்துவா என்று விடல்

களசு. அகந்தூய்மை யில்லாரை ஆற்றப் பெருக்கி
இகந்துழி விட்டிருப்பின் அஃதால்—இகந்து
நினைந்து தெரியானாய் நீள்கயத்துள் யாமை
நனைந்துவா என்று விடல்

மனத்தூய்மை இல்லாதவரை மிகவும் வளரச் செய்து, தொலைவிடத்தில் தனக்குரிய செயலைச் செய்யுமாறு ஏவியிருந்தால், அச்செயலை ஆராய்ந்து அறியாதவனாய் ஆமையைப் பிடித்த ஒருவன் அந்த ஆமையைப் பெரிய குளத்திற்குச் சென்று நீரால் நனைந்து நீராடி மீண்டும் வா என்று சொல்லி அனுப்புதல் போன்றதாகும்.

வட்டுக் கரையிருந்தார்க்கு எளிய போர்

களஎ. உழையிருந்து நுண்ணிய கூறிக் கருமம்
புரையிருந்த வாறறியான் புக்கான் விளிதல்,
நிரையிருந்து மாண்ட அரங்கினுள் வட்டுக்
கரையிருந் தார்க்கெளிய போர்.

வரிசையாக இருந்து மாண்புடைய அரங்கத்தில் வட்டுப் போர் ஆடாமல் பக்கத்தில் இருந்துபார்த்து, இவ்வாறு ஆட வேண்டும் என்று சொல்லுவார்க்கு எளியசெயல். அதுபோல, அருகில் இருந்துகொண்டு நுட்பமான செயல்களை ஆராய்ந்து சொன்னாலும், செய்யும் காரியத்தில் குற்றம் அமைந்திருந்த முறையை அறியாதவன் அக்காரியத்தைச் செய்யப் புகுந்தால் கெடுவான்.

19. மறை பிறர் அறியாமை

சீர்ந்தது செய்யாதார் இல்

களஅ. சுற்றத்தார் நட்டார் எனச்சென் றொருவரை
அற்றத்தால் தேறார் அறிவுடையார்—கொற்றப்புள்
ஊர்ந்துலகம் தாவின அண்ணலே யாயினும்
சீர்ந்து செய்யாதார் இல்.

வெற்றியையுடைய கருடனின் மேல் ஊர்ந்தும், ஈரடியால் மூன்று உலகங்களைக் கடப்பதும் செய்த திருமாலாகிய முதல்வனேயானாலும் தனக்கு நன்மை தருவனவற்றைச்

செய்யாது நீக்குவார் இலர். ஆகையால், அறிவுடையவர்கள் மற்றவர் அறியாமல் மறைத்துச் செய்யும் செயலில் ஒருவரை உறவினர் நண்பர் எனக் கொண்டு, அவருள் ஒருவரையும் தெளிதல் இலர்.

பறைக்கண் கடிப்பிடுமாறு

கஎகூ. வெள்ளமாண் பெல்லாம் உடைய தமர்இருப்ப,
உள்ளமண் பில்லா ஒருவரைத்—தெள்ளி
மறைக்கண் பிரித்தவரை மாற்ரு தொழிதல்,
பறைக்கண் கடிப்பிடு மாறு.

வெள்ளம் போன்று அளக்க முடியாத மாண்புடைய உறவினர் இருந்தாலும், மனத்தில் மாட்சிமை இல்லாத ஒருவரை ஆராய்ந்து சூழ்ச்சியில் நீக்கி அவரை விலக்காது விடுதல், பறையினிடத்தில் சிறிய தடியை இட்டு எறிதலோடு பொருந்தும்.

உயக்கொண்டு புல்வாய் வழிபடுவார் இல்

கஅ௦. அன்பறிந்த பின்னல்லால் யார்யார்க்கும் தம்மறையே
முன்பிறர்க் கோடி மொழியற்க—தின்குறுவான்
கொல்வாங்குக் கொன்றபி னல்ல துயக்கொண்டு
புல்வாய் வழிபடுவார் இல்.

தின்பதற்காகக் கொல்ல வேண்டிய முறையில் கொன்ற பின் அல்லாமல், தப்பிச் சென்ற பின்னர் மானின் ஊனைச் சமைப்பதற்கு வேண்டிய முறையாகிய காயம் (மசாலா) முதலியவற்றை அரைப்பார் இலர். எத்தகையவராயினும் மற்றவர்க்குத் தம்மேலுள்ள அன்பை அறிந்த பின்னரே அல்லாமல், தமது சூழ்ச்சியை ஓடிச் சென்று முற்படச் சொல்ல வேண்டா.

கயவர்க்கு உரையார் மறை

கஅக நயவர நட்டொழுகு வாரும்தரம் கேட்ட
துயவா தொழிவார் ஒருவரும் இல்லை.
புயலமை கூந்தல் பொலந்தொடீ சான்ரேர்
கயவர்க் குரையார் மறை.

மேகத்தைப் போன்றமைந்த கூந்தலையும் பொன்னாலான வளையல்களையும் அணிந்தவளே! அன்புடன் தம்மோடு நட்புப் பூண்டு பழகுவாரும், தாம் கேட்ட மறையை-இரகசியத்தைப் பிறரொடு சொல்லி ஆராயாதவர் எவரும் இலர். அதனால், சால்புடைய பெரியோர் கீழ் மக்களுக்குத் தம் இரகசியத்தைச் சொல்லார்.

பனையின்மேல் பஞ்சவைத்து எஃகிவிட்டற்று

கஅஉ. பெருமலை நாட ! பிறரறிய லாகா
அருமறையை ஆன்றோரே காப்பர்—அருமறையை
நெஞ்சிற் சிறியார்க் குரைத்தல் பனையின்மேல்
பஞ்சிவைத் தெஃகிவிட் டற்று.

பெரியமலைநாட்டவனே! பிறர் அறியத்தகாத அரிய இரகசியத்தை அமைந்த அறிவுடையோரே வெளியிடாமல் காக்கவல்லவர் ஆவர். மனத்தால் சிறிய குணம் உடையவர்களுக்கு அரிய மறையைத் தெரிவித்தல், பனையின் மேல் பஞ்சியை வைத்துக் கொட்டினாற் போன்றதாகும்.
(எஃகுதல்—பஞ்சி கொட்டுதல்)

ஆராயானாகித் தெளிந்தான் விளிந்து விடும்

கஅ௩. விளிந்தாரே போலப் பிறராகி நிற்கும்
முளிந்தாரைத் தஞ்சம் மொழியலோ வேண்டா.
அளிந்தார்கண் ஆயினும் ஆராயானாகித்
தெளிந்தான் விளிந்து விடும்.

தமக்கு அன்புடையவரிடத்தும் ஆராயாமல் நம்பியவன் கெடுவான். எப்பொழுதும் சினந்தவரைப் போன்று அன்பின்மையால் பிறராக நிற்கும் ஈரமற்றவரை நம்ப வேண்டாவென்று எளிதாக மொழிந்து கற்பிக்க வேண்டுவது இல்லை.

20. தெரிந்து தெளிதல்

இல்லையே தாஅம் தரவாரா நோய்

கஅ௪. ஆஅம் எனக்கெளி தென்றுலகம் ஆண்டவன்
மேஎந் துணையறியான் மிக்குநீர் பெய்திழந்தான்.
தோஒ முடைய தொடங்குவார்க்(கு) இல்லையே
தாஅம் தரவாரா நோய்.

உலகத்தை ஆண்ட மாவலியும், தனக்குத் துணையான அமைச்சன் சொல்லைக் கேட்கும் அளவு அறியாதவனாகித் தனக்கு மூன்றடிமண் கொடுத்தல் எளிய செயல் என்று கூறி, செருக்குற்று நீர்வார்த்துக் கொடுத்தமையால், உலகெலாம் இழந்தான். ஆதலால், குற்றமுள்ள செயல்களைச் செய்யத் தொடங்குவார்க்குத் தமக்குத் தாமே தர வாராத நோய்கள் இலவாம்.

யாரானும் சொற்சோராதாரோ இலர்

கஅரு. நற்பால கற்றாரும் நாடாது சொல்லுவர்
இற்பாலர் அல்லார் இயல்பின்மை நோவதென் ?
கற்பால் இலங்கருவி நாட !மற் றியாரானும்
சொற்சோரா தாரோ இலர்.

மலைகளிடம் விளங்கும் அருவிகளையுடைய மலைநாடனே ! நல்ல குடியிற் பிறந்து கற்றவரும் ஆராயாது பிழைபடச்சில சொற்களைக் கூறுவர். ஆதலால், நல்ல குடியில் பிறவாதவரிடம், நல்ல இயல்புகள் இல்லா திருத்தலை நினைந்து வருந்துவதால் என்னபயன் ? எத்தகையவராயினும் சொல்லில் குற்றம் இல்லாதார், இலராவர்.

கண்ணிற் கண்டதூஉம் எண்ணிச் சொலல்

கஅசு. பூந்தண் புனற்புகார்ப் பூமிகுறி காண்டற்கு
வேந்தன் வினையினன் மாந்தரைச்—சான்றவன்
கொண்டதனை நாணி மறைத்தலால் தன்கண்ணிற்
கண்டதூஉம் எண்ணிச் சொலல்.

அழகிய குளிர்ந்த நீர்வளமுடைய புகார் நகரில், நிலத்தின் அளவை அறிவதற்குச் சோழமன்னன் தம் குடிமக்களை வினவினன். ஒருவன் களவினல் பெற்று, அனுபவித்து வரும் நிலத்தைக் காட்டிக் கொடுக்க நாணிய சால்புடைய பெரியவர், அந்நிலத்தை மறைத்து மன்னனுக்கு வேறாகச் சொல்லி அவனைக் காத்தார். ஆதலால், தன் கண்ணால் கண்டு தெளிந்ததையும் நன்மை தருவனவற்றை ஆராய்ந்து சொல்லுக.

தலையுள் குறுக்கண்ணி யாகி விடும்

கஅஎ. ஒருவன் உணரா(து) உடன்றெழுந்த போருள்
இருவ ரிடைநட்பான் புக்கால்,— பெரிய
வெறுப்பினால் பேர்த்துச் செறுப்பின், தலையுள்
குறுக்கண்ணி யாகி விடும்.

ஒருவன் ஆராயாமல் சினந்து எழுந்த போரில் அவ்விருவருக்கும் இடையே நட்பு உண்டாக்கப் புகுந்தால், அவன் சொல்லை மேற்கொள்ளாமல், மிக்க வெறுப்பாலே அவர் மீண்டும் சினந்து போர் புரியும் மனத்தவராயின், அவர்களை எருதின் தலையிலுள்ள கைக்கெட்டாத குறிய கயிற்றைப்போல் திருத்த முடியாததாகும்.

பனைப்பதித் துண்ணூர் பழம்

கஅஅ. எனைப்பலவே யாயினும் சேய்த்தாற் பெறலின்
தினைத்துணையே யானும் அணிக்கோடல் நன்றே,
இனக்கலை தேன்கிழிக்கு மேகல்சூழ் வெற்ப !
பனைப்பதித் துண்ணூர் பழம்.

இனமாகிய ஆண் குரங்குகள் தேன் கூடுகளைச் சிதைக்கும்படியான ஓங்கிய மலைகள் சூழ்ந்த மலைநாட்டவனே! எவ்வளவு மிகுதியான பயனை நெடுங்காலத்திற்குப் பிறகு பெறுவதைக் காட்டிலும், தினையளவே யானாலும் அண்மைக் காலத்தில் ஒரு பொருளின் பயனைக் கொள்ளுதல் நன்றாகும். பனங்கொட்டையை நட்டுவைத்துப் பின் மரமாகிப் பழுத்தால் உண்போம் என்றுரைப்பார் ஒருவரும் இலர்.

இனங்கழு வேற்றினார் இல்

கஅகூ. மனங்கொண்டக் கண்ணும் மருவில செய்யார்
கனங்கொண் டுரைத்தவை காக்கவே வேண்டும்
சனங்கள் உவப்பன செய்யாவும் செய்க.
இனங்கழு வேற்றினார் இல்.

சான்றோர் தம் மனம் விரும்பினாலும் வழக்கத்தில் வாராதனவற்றைச் செய்யார். ஆன்றோர் உரைத்தனவற்றை உறுதியோடு போற்றிக் காக்க வேண்டும். அறிவுடையோர், 'செய்ய வேண்டா' என்று கூறியவைகளிலும், மக்கள்

விரும்பியவற்றைச் செய்க. செய்யாவிடில் தண்டித்தல் அல்லது அம்மக்களைக் கழுவேற்றுவார் ஒருவரும் இலர்.

போகாரே நீர்குறி தாகப் புகல்

கசய. கடுப்பத் தலைக்கீறிக் காலும் இழந்து
நடைத்தாரா என்பதூஉம் பட்டு—முடத்தோடு
பேர்பிறி தாகப் பெறுதலால் போகாரே
நீர்குறி தாகப் புகல்

தம்தலை மிகவும் கிழிந்து, கால்களும் இழந்து நடக்க வியலாது என்று சொல்லப்பட்டு, முடவர் என்ற பெயரோடு குருடர், செவிடர் என்ற வேறு பெயரும் பெறுவர். ஆதலால், ஒருவர் இறங்கிச் செல்லத்தக்க அளவாக நீர் குறைந்த போதும், அவ்வழியில் செல்வதனால் வரும் துன்பத்தை அறிந்து இறங்கிச் செல்லார்.

[தம் உயிருக்குத் துன்பந் தருஞ் செயல்களைச் செய்ய வேண்டா என்பது இப்பாடல் கருதிய பொருளாகும்]

இருப்புழிப் பெற்றால் கிடப்புழியும் பெற்று விடும்

கசக. சிறிதாய கூழ்பெற்றுச் செல்வரைச் சேர்ந்தார்
பெரிதாய கூழும் பெறுவர்—அரிதாம்
இடத்துள் ஒருவன் இருப்புழிப் பெற்றால்
கிடப்புழியும் பெற்று விடும்.

அடைவதற்கு அருமையான இடத்தினுள் ஒருவன் இருக்க இடம் பெறுவானாயின், படுப்பதற்கும் இடம் பெறுவான். ஆதலால், செல்வரைச் சேர்ந்தவர்கள் சிறிதளவு கூழாகிய உணவைப் பெறுவராயின், பின்னர் மிகுந்த உணவையும் பெறுவர்.

இன்சொல் இடர்ப்படுப்ப தில்

கசஉ. புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலும் உண்டாமோ ?
புன்சொல் இடர்ப்படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்ப தில்.

கொடுஞ் சொல்லால் வரும் பயனையும் இன் சொல்லால் வரும் பயனையும் பழுதில்லாமல் அறிந்தவர்கள், மற்றவரை வன்சொல் சொல்லி துன்பப்படுத்தி நடக்கும் நெறியுடையவராய் வாழ்தலும் உண்டோ? ஒருவனைத்தான் கூறும் கொடுஞ்சொல் துன்பம் தருவதல்லாமல் இன்சொல் துன்பம் தருவதில்லை.

தந்நீரர் ஆதல் தலை

கக௩. மெய்ந்நீர ராகி விரியப் புகுவார்க்கும்
பொய்ந்நீர ராகிப் பொருளை முடிப்பார்க்கும்
எந்நீர ராயினும் ஆக அவரவர்
தந்நீர ராதல் தலை.

மெய்ம்மையான நல்லொழுக்கம் உடையவராகி, உயர்ந்த பண்பால் நிரம்பப்பெற்றுச் செயலாற்றச் செல்வார்க்கும், வஞ்சனைத் தன்மையராகித் தம் செயலை நிறைவேற்றிக் கொள்வார்க்கும். அவர்கள் செயலை முடித்துக் கொள்ள எத்தகைய இயல்பினராயினும் ஆகுக. மற்றைய பொழுதில் அவரவர் தமக்கியல்பான தன்மையராய் நடத்தலே தலைமையான பண்பாகும்.

நெடுவேல் கெடுத்தான் குடத்துளும் நாடி விடும்

கக௪. யாவரே யானும் இழந்த பொருளுடையார்
தேவரே யாயினும் தீங்கோர்ப்பர்—பாவை
படத்தோன்று நல்லாய்! நெடுவேல் கெடுத்தான்
குடத்துளும் நாடி விடும்.

பதுமையின் தன்மை அமைந்து தோன்றும் நல்லவளே! தொலைந்த பொருளுக்கு உரியவர், எல்லா அறிவினை உடையவராயினும் தேவரே ஆயினும் தீங்கு செய்தவராக மனத்தில் கருதப்படுவர். நீண்ட வேலைத் தொலைத்தவன் குடத்துக் குள்ளேயும் தேடுவான். ஆதலால், தம்மை ஐயுற்றார் என்று கருதவேண்டா.

மயில்போலுங் கள்வருடைத்து

கக௫. துயிலும் பொழுதத்(து) உடைவூண்மேற் கொண்டு
வெயில்விரி போழ்தின் வெளிப்பட்டா ராகி
அயில்போலுங் கண்ணாய்! அடைந்தார்போல் காட்டி
மயில்போலுங் கள்வர் உடைத்து.

வேல்போன்ற கூரிய கண்களையுடையவளே! பலரும் உறங்கும் நடு இரவில் பூட்டு முதலியவற்றை உடைத்துக் களவினால் உண்பதைத் தொழிலாக் கொண்டு, ஞாயிற்றின் ஒளி பரவும் காலைநேரத்தில் துயில்நீங்கி வெளிப்பட்டவராகி, எல்லாருக்கும் நண்பரைப் போன்று அறிவித்து நிற்கும் மயிலைப் போன்ற கள்வரை இவ்வுலகம் பெற்றிருக்கிறது.

ஓடுக ஊரோடு மாறு

௧௱௬. செல்லற்க சேர்ந்தார் புலம்புறச் செல்லாது
நில்லற்க நீத்தார் நெறியொரீஇ—பல்காலும்
நாடுக தான்கண்ட நுட்பத்தைக் கேளாதே
ஓடுக ஊரோடு மாறு.

தம்மை அடைக்கலமாக அடைந்தவர் துன்புற்று அழுமாறு ஒழுகவேண்டா. துறவிகள் ஒழுகிய நெறியில் செல்லாமல் அதனை விட்டுவிலகி நிற்கவேண்டா. தான் கண்டறிந்த நுண்ணிய பொருளை பலமுறையும் ஆராய்க. உலகத்து உயர்ந்தவர் செல்லும் வழியில் 'இது நன்மை நல்குமா' என்று வினவாமல் செல்வாயாக.

21. பொருள்

வேல்குத்தின் காணியின் குத்தே வலிது

௧௱௭. தெருளா தொழுகும் திறனிலா தாரைப்
பொருளால் அறுத்தல் பொருளே—பொருள் கொடுப்பின்
பாணித்து நிற்கிற்பார் யாருளரோ? வேல்குத்தின்
காணியின் குத்தே வலிது.

தன்னைத் தெளிந்து கொள்ளாமல் வாழும் திறமையில்லாத பகைவரைப் பொருளைக் கொண்டு கொல்லுதலே செய்யத்தக்க செயலாகும். அப்பகைவரைக் கொல்லுவதற்குச் சிலர்க்குப் பொருள் கொடுத்தால், அவரைக் கொல்லாது காலம் கடந்து செய்பவர் உலகில் யார்இருப்பர்? வேலினால் குத்துவதைக் காட்டிலும் காணியினால் (பொருளால்) குத்துவதே வலிமையுடையதாகும்.

கடலுள்ளும் காண்பவே நன்கு

கசஅ. ஒல்லாத தின்றி உடையார் கருமங்கள்
நல்லவாய் நாடி நடக்குமாம்—இல்லார்க்கு
இடரா வியலும். இலங்குநீர்ச் சேர்ப்ப !
கடலுள்ளும் காண்பவே நன்கு.

விளங்குகின்ற நீரையுடைய கடல்நாடனே ! பொருள் உடையவர்கள் செய்யத் தொடங்கிய செயல்கள், இடையில் நின்று போகாமல் நன்மையாய் ஆராய்ந்து முடியும். பொருள் இல்லாதவர்களுக்குச் செயல்கள் முடிவுபெறுமல் துன்பமாய் முடியும். அப்பொருளுடையார் கடலுள்ளும் நன்மையையே காண்பவராவர்.

குளந்தொட்டுத் தேரை வழிச்சென்றார் இல்

கசகூ. அருமை யுடைய பொருளுடையார் தங்கண்
கரும முடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியும் ஊர ! குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றார் இல்.

எருமைமேல் நாரை தூங்கும் ஊரனே ! குளத்தினைத் தோண்டித் தேரை உள்ள இடத்தைத் தேடிச் செல்கின்றவர் எவரும் இலர். அதுபோல், அடைவதற்கு அருமையான பொருள் உடையவர்கள், தங்களிடம் செயலை நிறைவேற்றிக் கொள்பவர்களைத் தேடமாட்டார்.

திருவுடையார் பண்டம் இருவர் கொளல்

உ00. அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதார் இல்லை
பொருபடைக் கண்ணய் ! அதுவே திருவுடையார்
பண்டம் இருவர் கொளல்.

போரிடுகின்ற வேல் போன்ற கூரிய கண்களை யுடையவளே ! கருணைப் பண்புடையவர்களும் கருணைப் பண்பில்லாதவர்களும் பொருட்செல்வம் உடையவர்களை மதித்துப் புகழாதவர் இலர். நல்லறப் பயனைப் பெற்றவர் (புண்ணியம் உடையார்) விற்கின்றபொருளை விரும்பி இருவர் போட்டியிட்டு வாங்கும் தன்மையை ஒக்கும்.

புலிக்குப் புதலும் வலியாய் விடும்

உ०க. உடையதனைக் காப்பான் உடையான் ; அதுவே
உடையானைக் காப்பதூஉ மாகும்.—அடையின்
புதற்குப் புலியும் வலியே ; புலிக்குப்
புதலும் வலியாய் விடும்.

சென்றடைந்தால் காட்டிற்குப் புலியும் காவலாகும் ; புலிக்குக் காடும் காவலாக அமையும். அதுபோல, கையிலுள்ள செல்வப் பொருளைக் காப்பவனே அப்பொருளை உடையவன் ஆவான். அச்செல்வப் பொருளே தன்னையுடையவனையும் காப்பாற்றும் தன்மை உடையதாகும்.

துளியீண்டில வெள்ளந் தரும்

உ०உ. வருவாய் சிறிதெனினும் வைகலும் ஈண்டின்
பெருவாய்த்தாய் நிற்கும் பெரிதும்—ஒருவா(று)
ஒளியீண்டி நின்றால் உலகம் விளக்கும்.
துளியீண்டில் வெள்ளந் தரும்.

ஒருவாறு விண்மீன்கள் சேர்ந்து வெளிப்பட்டு நின்றால், உலகம் எல்லாம் இருள் நீங்க விளக்கும். மழைத் துளிகளும் ஒன்று சேர்ந்தால் வெள்ளம் வரும், அவைபோல, ஒருவர்க்கு வருமானம் சிறிதெனினும் நாள்தோறும் சிறிதாயினும் சேர்த்து வைத்தால், மிகவும் பெருஞ் செல்வமாய் அமையும்.

பழங்கன்று ஏறுஆதலும் உண்டு

உ०ங. உள்ளூ ரவரால் உணர்ந்தாம் முதலெனினும்
எள்ளாமை வேண்டும் இலங்கிழாய்!—தள்ளா(து)
அழுங்கல் முதுபதி அங்காடி மேயும்
பழங்கன்றே றுதலும் உண்டு.

விளங்குமாறு இழைக்கப்பெற்ற அணிகளை உடையவளே! ஆரவாரமுள்ள பழைய நகரின் கடைத்தெருவில், நீங்காமல் மேய்ந்து திரியும் முதுகன்றுனது, வளர்ச்சியுற்று வலிய காளையாதலும் கூடும். ஆதலால், ஒருவனுடைய பொருள் செல்வத்தின் சிறுமையை, அவனது ஊர்மக்களால் அறிந்தோம் என்று மனத்தில் கொண்டு, அவனை இகழாமை வேண்டும்.

அறுமோ நரி நக்கிற்று என்று கடல்

உ௦௪. களமர் பலரானும் கள்ளம் படினும்
வளமிக்கார் செல்வம் வருந்தா—விளைநெல்
அரிநீர் அணைதிறக்கும் ஊர! அறுமோ
நரிநக்கிற் றென்று கடல்.

விளைந்த நெல்லை அறுப்பதற்கு உழவர்கள் நீர் வடிய வடிகாலைத் திறக்கும் ஊரனே! நரி நக்கினது காரணமாகக் கடல் நீர் வற்றுதல் இல்லை. அதுபோன்று பணிமக்கள் பலரானும் களவு காணப்பட்டாலும் வளமான பொருள் வரவு உடையவரது செல்வம், குறைவுற்று வருந்துதல் இல்லை.

புலித்தலையை நாய்மோத்தல் இல்

உ௦௫. நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல்.

வாட்டமுற்று நரம்புகள்வலித்துத் தசைசுருங்கிப் படுத்துவிட்ட போதும், புலியின் தலையை நாய் அஞ்சாது சென்று மோந்து பார்த்தல் இல்லை. ஆகையால், நாட்டு மக்களால் நன்கு உணரப்பெற்ற பெருஞ்செல்வம் உடையவர், வறுமை அடைந்து தளர்ந்தபோதும் தம் கொடைப் பண்பிலிருந்து தாழ்வரோ? தாழார் என்பதாம்.

22. பொருளைப் போற்றுதல்

சேணோக்கி நந்துநீர் கொண்டதே போன்று

உ௦௬. தந்தம் பொருளும் தமர்கண் வளமையும்
முந்துற நாடிப் புறந்தரல் ஓம்புக.
அந்தண் அருவி மலைநாட! சேணோக்கி
நந்துநீர் கொண்டதே போன்று

அழகிய குளிர்ந்த அருவிகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே! நத்தையானது தான் தண்ணீர் பெறுவதற்குரிய நீண்ட காலத்தை உணர்ந்து, நீரைச் சேர்த்து வைத்துக்கொள்ளும். அதைப்போல, தங்களது செல்வத்தின் அளவையும்,

தங்கள் உறவினரிடத்துள்ள செல்வத்தின் அளவையும் முன்னதாகவே ஆராய்ந்து, பின்னர் தமக்குப் பயன்படுதற்காகப் பொருளைச் சேர்த்துப் பாதுகாக்க.

இறந்தது பேர்த்தறிவார் இல்

உ௦எ. மறந்தானும் தாமுடைய தாம்போற்றி னல்லால்
சிறந்தார் தமரென்று தேற்றார்கை வையார்.
கறங்குநீர்க் காலலைக்கும் கானலஞ் சேர்ப்ப!
இறந்தது பேர்த்தறிவார் இல்.

ஒலிக்கும் நீரையுடைய உப்பங்கழிகளில் அலைவீசுதலான அழகிய சோலைகளையுடைய நெய்தல் நிலத்தலைவனே! தாம் இழந்த பொருளை மீட்டுத்தர அறிவார் இலர். ஆதலால், தம்முடைய பொருளைத் தாமே காப்பதல்லால், தமக்குச் சிறந்தவர் என்றும் உறவினர் என்றும் எண்ணித் தெளியாதவரிடம் மறந்தும் ஒப்படைக்க வேண்டா.

நற்காப்பின் தீச்சிறையே நன்று

உ௦அ. அமையா இடத்தோர் அரும்பொருள் வைத்தால்
இமையாது காப்பினும் ஆகா—திமையோரும்
அக்காலத் தோம்பி அமிழ்துகோட் பட்டமையால்,
நற்காப்பின் தீச்சிறையே நன்று.

முற்காலத்தில் தேவர்கள் காவல் செய்தும் (கருடன் தன் அன்னை விநதையைச் சிறைமீட்பதற்கு) அமிழ்தைக் கவர்ந்து கொள்ளப் பட்டமையால், நன்கு காவல் செய்தலைக் காட்டிலும் எளிய அரணே நல்லதாம். ஆதலால், ஓர் அரிய பொருளைக் காவல் பொருந்தாத இடத்தில் வைத்தால், கண்ணிமைக்காது காவல் செய்தாலும் அப்பொருளைக் காவல் செய்ய இயலாது.

காக்கையைக் காப்பிட்ட சோறு

உ௦௯. ஊக்கி உழந்தொருவர் ஈட்டிய ஒண்பொருளை
நோக்குமின் என்றிகழ்ந்து நொவ்வியார் கைவிடுதல்
போக்கினீர் தூஉம் பொருகழித் தண்சேர்ப்ப!
காக்கையைக் காப்பிட்ட சோறு.

நீர்வடிவதற்கு வழி இல்லாத கடல், நீர்த்துளிகளை மோதுகின்ற உப்பங்கழிகளையுடைய குளிர்ந்த கடல் நாடனே! ஒருவர் முயன்று வருந்திச் சேர்த்த சிறந்த பொருளைத் தாம் காவல் செய்தலை இகழ்ந்து, "இப்பொருளைக் காத்தலை மேற்கொள்ளுங்கள்" என்று கீழ்மக்களிடம் ஒப்படைத்தலானது, காக்கையைக் காவலாக வைத்த சோறு போன்றதாகும்.

மூரியைத் தீற்றிய புல்

உ௧0. தொடிமுன்கை நல்லாய்!அத் தொக்க பொருளைக்
குடிமகன் அல்லான்கை வைத்தல் – கடிநெய்தல்
வேரி கமழும் விரிதிரைத் தண்சேர்ப்ப!
மூரியைத் தீற்றிய புல்.

தொடுக்கப் பெற்ற வளையல்கள் அணிந்த முன் கையையுடைய நல்லவளே! புதிய நெய்தல் மலரின் மணம் வீசும் விரிந்த அலைகளையுடைய குளிர்ந்த நெய்தல் நிலத் தலைவனே! தான் தேடிச் சேர்த்த அப்பொருளை நற்குடிப் பிறப்பில் பிறக்காதவனிடத்தில் ஒப்படைத்தலானது. கிழ வெருதை உண்பித்த புல்லோடு அமையும்.

வெண்ணெய்மேல் வைத்து மயில கொள்ளுமாறு

உ௧௧. முன்னை யுடையது காவா திகந்திருந்து
பின்னைய∴ தாராய்ந்து கொள்குறுதல் — இன்னியல்
மைத்தடங்கண் மாதராய்! அ∴தாதல் வெண்ணெய்மேல்
வைத்து மயில்கொள்ளு மாறு.

இனிய இயல்பினையுடைய மையெழுதப் பெற்ற அகன்ற கண்களையுடைய மாதே! தனக்கு முன்னுள் உண்டாகிய பொருளைக் காப்பாற்றுமல் வெறுத்து, விலக்கி, பின்னர் அப்பொருளைப் பற்றி ஆராய்ந்தறிந்து அடைய விரும்பும் தன்மையானது, மயிலின் தலைமேல் வெண்ணெய் வைத்து (வெண்ணெய் உருகி அதன் கண்களை மறைக்கும் போது) அதனைப் பிடித்துக் கொள்ள நினைத்தலைப் போன்றதாகும்.

கடம்பெற்றுன் பெற்றுன் குடம்

உ௧உ. கைவிட்ட ஒண்பொருள் கைவர் வில்லென்பார்
மெய்ப்பட்ட வாறே உணர்ந்தாரால்—மெய்யா
மடம்பட்ட மானேக்கின் மாமயி லன்னுய்!
கடம்பெற்றுன் பெற்றுன் குடம்.

மடப்ப முடைய மானின் பார்வையையும் அழகிய மயிலின் சாயலையும் உடையவளே! உண்மை நெறியில் உலகை அறிந்தவர் கடனாக ஒருவர் பிறருக்குச் சான்று இல்லாமல் கைவிட்ட ஒள்ளிய பொருள், மீண்டும் தன்கைக்கு வருவதில்லை என்று சொல்லுவர். உண்மையாகவே, பிறர்க்குக் கடன் கொடுத்தவன் அக்கடனைத் திரும்பப் பெற்றான் என்பது, சத்தியம் செய்வதற்குப் பாம்புக் குடத்தைப் பெற்றவனாவான்.

கொண்டார் வெகுடல் நகைமேலும் கைப்பாய் விடும்

உகந. கடங்கொண்ட ஒண்பொருளைக் கைவிட் டிருப்பார்
இடங்கொண்டு தம்மினே என்றால்—தொடங்கிப்
பகைமேற்கொண் டார்போலக் கொண்டார் வெகுடல்
நகைமேலும் கைப்பாய் விடும்.

தாம் கடனாகப் பெற்றுக் கொண்ட ஒளிமிக்க பொருளை மற்றவரிடம் கொடுத்திருப்பவர், அவரிடம் சென்று, தம் பொருளைத் தருக என்று கேட்டபோது, கடன் வாங்கிய தம்மோடு பகைமை கொண்டதைப் போன்று தொடங்கிச் சினம் கொள்வதானது, விளையாட்டாகவிருந்தாலும் துன்பந்தருவதாகும்.

23 நன்றியில் செல்வம்

தீயன ஆவதே போன்று கெடும்

உகச. அல்லது செய்வார் அரும்பொரு ளாக்கத்தை
நல்லது செய்வார் நயப்பவோ ? ஒல்லெலிநீர்
பாய்வதே போலும் துறைவ!கேள் தீயன
ஆவதே போன்று கெடும்.

ஒல்லென்று ஒலிக்கும் நீர், கரையின் மேல் ஏறிப் பாய்வதே போன்று விளங்கும் கடற்றுறைவனே ! கேட்பாயாக. தீய செயல்களால் சேர்க்கும் செல்வம், வளர்வதைப் போன்று தோற்றமளித்து அழியும். எனவே, தீய வழியில் செல்வத்தைச் சேர்த்தவர்களின் அரிய பொருள் வளர்ச்சியை, நல்ல வழியில் நடப்பவர் விரும்புவரோ ? விரும்பார்.

மாக்காய்த்துத் தன்மேல் குணில்கொள்ளு மாறு

உகரு. தொன்மையின் மாண்ட துணிவொன்றும் இல்லாதார்
நன்மையின் மாண்ட பொருள் பெறுதல்,—இன்னொலி
கன்மேல் இலங்கு மலைநாட! மாக்காய்த்துத் [நீர்
தன்மேல் குணில்கொள்ளு மாறு.

இனிய ஓசையையுடைய அருவிநீர் கற்பாறையின் மேல் விழுந்து விளங்கும் குறிஞ்சி நிலத்தலைவனே! பழைய நூல்களில் மாண்புடைய துணிவு ஒரு சிறிதும் இல்லாதவர், நன்மையால் மாண்புடைய பொருளைப் பெறுதலானது, மாமரம் நன்கு காய்க்கப் பெற்றதனால் தன்மேல் பிறர் எறியும் கவண்கல்லை ஏற்றுக் கொள்ளுதலைப் போன்றதாகும்.

மரங்குறைப்ப மண்ணா மயிர்

உகசா. பெற்றாலும் செல்வம் பிறர்க்கீயார் தாந்துவ்வார்
கற்றாரும் பற்றி இறுகுபவால்—கற்றா
வரம்பிடைப் பூமேயும் வண்புனல் ஊர!
மரங்குறைப்ப மண்ணா மயிர்,

கன்றினையுடைய பசு, வரப்பில் வளர்ந்த பூவினை மேயும் வளமான நீர்நிலையினையுடை மருத நிலத்தலைவனே! மரங்களை அறுக்கும் வாள் போன்ற கருவிகள் மயிரினை நீக்கப் பயன்படுவதில்லை அதுபோல, கற்றவர்களும் ஒரு கால், செல்வத்தைப் பெற்றாலும், அச் செல்வத்தைப் பிறர்க்கு வேண்டுவன வழங்கார். தாமும் அனுபவியார். பற்றுள்ளம் கொண்டவராய் மனத்தளர்ச்சி இல்லாமல் இறுகப் பிடிப்பர்.

நாய்பெற்ற தெங்கம் பழம்

உகஎ. வழங்கலும் துய்த்தலும் தேற்றாதான் பெற்ற
முழுங்கு முரசுடைச் செல்வம்,—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப! அதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்.

முழங்கும் அருவிகளையுடைய முதிர்ந்த மூங்கில்கள் முத்துகளைச் சிந்துகின்ற மலை நாடனே! பிறர்க்குக் கொடுத்தலையும் தான் அனுபவித்தலையும் அறியாதவர்கள் சேர்த்த பெருஞ் செல்வமானது, நாய் பெற்ற தேங்காய்க்குச் சமமாகும்.

அழகொடு கண்ணின் இழவு

உகஅ. முழுவொலி முந்நீர் முழுதுடன் ஆண்டார்
விழவூரில் கூத்தேபோல் வீழ்ந்தவிதல் கண்டும்,
இழவென் ெறாருபொருள் ஈயாதான் செல்வம்,
அழகொடு கண்ணின் இழவு.

முழவோசை போன்று ஒலிக்கும் கடலால் சூழப்பட்ட உலகம் முழுதையும் ஆண்ட மன்னர்கள், திருவிழா நடந்த ஊரில் ஆடிய கூத்துப்போல் பொலிவின்றி அழிதல் போலச் செல்வமும் கெட்டு அழிதலை அறிந்திருந்தும், பிறர்க்குக் கொடுத்தால் இழப்பு எண்றெண்ணி மற்றவர்க்குக் கொடுக் காதவனின் செல்வம், வடிவழகுடைய ஒருவன் கண்ணிழந்த தனோடு அமையும்.

குருட்டுக்கண் துஞ்சில் என்? துஞ்சாக்கால் என்?

உகக. நாவின் இரந்தார் குறையறிந்து தாமுடைய
மாவினை மாணப் பொதிகிற்பார்—தீவினை
அஞ்சிலென் அஞ்சாவிடி லென் ? குருட்டுக்கண்
துஞ்சிலென் துஞ்சாக்கா லென் ?

வாய் மொழியாலே, "தமக்கு ஒரு பொருளைத் தருக" என்று கேட்பவரின் குறையை அறிந்திருந்தும், தம்முடைய செல்வத்தை மிகவும் மறைத்து வைப்பவர், தீயசெயல்களுக்கு அஞ்சினால் என்ன நன்மை ஏற்படும்? அஞ்சாவிடில் என்ன தீமை ஏற்படும்? குருட்டுக் கண்ணன் தூங்கினால் என்ன? தூங்காவிடில் என்ன?

குடர் ஒழிய மீவேலி போக்கு பவர்

உஉ. படரும் பிறப்பிற்கொன் றீயார் பொருளைத்
தொடருந்தம் பற்றினால் வைத்திறப் பாரே,
அடரும் பொழுதின்கண் இட்டுக் குடரொழிய
மீவேலி போக்கு பவர்.

அடுத்துவரும் பிறப்பிற்கு உதவுமாறு பிறர்க்கு ஒரு பொருளையும் கொடுக்காமல், தொடர்ந்துவரும் பற்றுள்ளத் தால், பொருளைத் தாமும் பிறரும் அனுபவியாமல், பயனில் லாமல் வைத்துவிட்டு இறப்பவர், பகைவருடன் போர் புரியும்போது வயிறு கிழிந்து குடல் சரிந்து வெளியே இருக்க,

மற்ருென்றினை உள்ளே வைத்து மேலே கட்டுக் கட்டியிருப் பவரோடு ஒப்பர்.

ஆற்றக் கரும்பனை யன்ன துடைத்து

உஉக. விரும்பி அடைந்தார்க்கும் சுற்றத் தவர்க்கும்
வருந்தும் பசிகளையார் வம்பர்க் குதவல்,
இரும்பணைவில் வென்ற புருவத்தாய் ! ஆற்றக்
கரும்பனை யன்ன துடைத்து.

பெரிய மூங்கிலால் செய்த வில்லினை வென்ற புருவங் களையுடையவளே! தம்மை விரும்பி அடைந்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் அவர்களைத் துன்பப்படுத்தும் பசியினைப் போக்காது புதியவர்க்குப் பயன்படுமாறு நடத்தல், பெரிய கரிய பனை மரத்தின் இயல்பைப் போன்றதாகும்.

பழுஞ்செய்போர் பின்று விடல்

உஉஉ. வழங்கார், வலியிலார் வாய்ச்சொல்லும் பொல்லார்,
உழந்தொருவர்க் குற்ருல் உதவலும் இல்லார்,
இழந்ததில் செல்வம் பெறுதலும் இன்ஞர்,
பழுஞ்செய்போர் பின்று விடல்.

ஒருவர்க்கு ஒரு பொருளைக் கொடுக்க மாட்டா தவராய், ஒருவர்க்கு ஒரு பொருளைக் கொடுக்கும் வலிமை இல்லையாதலினலே பேசும் மொழியாலும் தீயவராய், ஒருவருக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால், அத்துன்பத்தை நீக்கி உதவுதலைச் செய்யாதவராய் ஆகிய இத்தன்மைகளை உடையவர், அழிதலில்லாத செல்வத்தைப் பெற்றிருத்த லானது, நீண்ட நாள்களாகவே உரம் முதலியவற்றைப் பெற்றுவந்த வயல், உரம் பெருத பின்னுளில் வைக்கோல் போரிடும்படி கதிர்விட்டு விளைந்ததனேடு அமையும்

வாயுறைப் புற்கழுத்தில யாதது விடல்

உஉஙு. ஒற்கப்பட் டாற்ருர் உணர உரைத்தபின்,
நற்செய்கை செய்வார்போல் காட்டி, நசையழுங்க
வற்கென்ற செய்கை யதுவால்,அவ் வாயுறைப்
புற்கழுத்தில் யாத்து விடல்.

வறுமைப்பட்டு, அதனைத் தாங்கிக் கொள்ளாதவர், தம் வறுமையை ஒருவர்க்குத் தெளிவாகக் கூறியபோது, அவர்களுக்கு நல்ல செயல்களைச் செய்வதைப் போன்று போக்குக் காட்டி, அவர்களது விருப்பம் அழியுமாறு வலிய செயல்களைச் செய்வதானது, பசுவின் கழுத்தில் அதன் வாயுணவாகிய புல்லைக் கயிறாகக் கட்டிவிடும் இயல்பினதாகும்.

இடையன் எறிந்த மரம்

உஉச. அடையப் பயின்றார்சொல் ஆற்றுவராக் கேட்டால்
உடையதொன் றில்லாமை யொட்டின்,—படைபெற்
றடைய அமர்த்தகண் பைந்தொடி ! அஃதால்
இடையன் எறிந்த மரம்.

வேலினது இயல்பைப் பெற்று முகம் முழுதும் நிறைந்த கண்ணையும் பசுமையான வளையல்களையும் தொடுக்கப் பெற்றவளே! பலநாளும் நன்கு பழகியவர், ஒரு பொருளை அடைவதற்குப் பேசிய பேச்சைக் கேட்டால், தம்மிடம் இல்லாத பொருளை இருக்கும் ஒரு பொருளாக நடித்து அவர்க்குத் தருவதாக உறுதியாகக் கூறினால், அச் செயல் இடையன் வெட்டிய மரம் போன்றதாகும்.

[இடையன் வெட்டிச் சாய்த்த மரக்கிளைகள் ஒருபுறம் வாடியும் மறுபுறம் தளிர்த்தும் இருக்கும்.]

பள்ளியுள் ஐயம் புகல்

உஉரு. மரம்போல் வலிய மனத்தாரை முன்னின்(று)
இரந்தார் பெறுவதொன் றில்லை—குரங்கூசல்
வள்ளியி னாடு மலைநாட ! அஃதன்றே
பள்ளியுள் ஐயம் புகல்.

குரங்குகள் வள்ளிக் கொடியில் ஊசலாடுகின்ற குறிஞ்சி நிலத்தவனே! மரம் போன்று உறுதியான, கல் நெஞ்சரின் முன் சென்று 'ஒரு பொருளைத் தருக' என்று கேட்டவர், பெற்ற பொருள் ஒன்றும் இல்லை. அச் செயல் அருந்தவத் துறவிகள் வாழும் பள்ளியில் பிச்சை கேட்பதோடு அமையும்.

நசை கொன்றான் செல்லுலகம் இல்

உஉசா. இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை, அஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணா னாயின்,
நசைகொன்றான் செல்லுலக மில்.

ஒருவன், தன்னால் கொடுக்க இயைந்த பொருளைத் தருவதும், தன்னிடம் இல்லாத பொருளை 'இல்லை' என்பதும் உலகத்து உயர்ந்தார் செயலாகும்; அஃது அவனுக்குக் குற்றம் அன்று. அவ்வாறில்லாமல், இவன் 'தனக்கு உதவி செய்வான்' என்று நம்பிப் பற்றுவைத்தவன் எதிரில் நிற்கும்போது, அவனுடன் பகுத்து உண்ணவில்லையானால், அவன் ஆசையை அழித்தவன் ஆகிறான்; அதனால் அவன் சென்று அடையும் மறுமை இன்பம் அவனுக்கு இல்லை.

உவவாதார்க்கு ஈத்ததை எல்லாம் இழவு

உஉஎ. தமராலும் தம்மாலும் உற்றுலொன் றாற்றி
நிகராகிச் சென்றாரு மல்லர். இவர்திரை
நீத்தநீர்த் தண்சேர்ப்ப ! செய்த துவவாதார்க்
கீத்ததை யெல்லாம் இழவு.

பரந்த அலைகள் வெள்ளம்போல் பரவிய நீரையுடைய குளிர்ந்த நெய்தல் நிலத்தலைவனே! உறவினராலாயினும் தம்மாலாயினும் ஒருவர்க்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் அவர்களுக்கு ஒன்றை உதவி, அவர் மனம் அமைதியுறுமாறு நடந்தவருமல்லர், உதவியதைக்கொண்டு மனம் மகிழாதவர்களுக்கு வழங்கிய பொருளெல்லாம் இம்மைக்கும் மறுமைக்கும் இல்லையாதலால், இழந்த பொருளேயாம்.

24. ஊழ்

குறும்பியங்கும் கோப்புக் குழிச்செய்வ தில்.

உஉஅ. எவ்வந் துணையாய்ப் பொருள்முடிக்கும் தாளாண்மை
தெய்வ முடிப்புழி என்செய்யும் ?—மொய்கொண்டு
பூப்புக்கு வண்டார்க்கும் ஊர ! குறும்பியங்கும்
கோப்புக் குழிச்செய்வ தில்.

மலர்களுள் புகுந்து வண்டுகள் ஒலிக்கும் மருத நிலத்தலைவனே ! எங்கும் தடையில்லாமல் செல்லவல்ல பேரரசன், குறுநிலமன்னனின் நாட்டில் புந்தபோது, அவனை, வலிமை கொண்டு எதிர்க்கவியலாது. ஆதலால், துன்பமே தனக்குத் துணையாகத் தான் நினைத்த செயலை நிறைவேற்றும் முயற்சியுடைமையைத் தவிர்க்க, இழவூழே அவன் பக்கல் இருந்தால் அவனால், என்னசெய்ய முடியும் ?

அறிவினை ஊழே அடும்.

௨௨௯. சுட்டிச் சொலப்படும் பேரறிவி னார்கண்ணும்
பட்ட விருத்தம் பலவானால்,—பட்ட
பொறியின் வகைய கருமம். அதனால்
அறிவினை ஊழே அடும்.

மதித்துப் பேசப்படும் பேரறிஞரிடத்தும் அமைந்த குற்றம் பாலவாகுமானால், செயல்கள் அவருக்கு முற்பிறப்பில் அமைந்த தீவினையின் பயனாயிருக்கும். ஆதலால், ஒருவனது நல்லறிவினை அவனது ஊழ்வினையே அழிக்கும்.

உறற்பால யார்க்கும் உறும்

௨௩௦. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால்,—பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட !
உறற்பால யார்க்கும் உறும்.

கற்பாறைகளின் மேல் மிகுத்து வந்து பாயும் அருவிகளையுடைய அழகிய குறிஞ்சி நிலத்தவனே ! அழகிய இடம் அகன்ற விண்ணினின்றும் மிக்க நிலவொளியை வீசும் சந்திரனும், கோள்களினால் துன்பம் அடைதலைக் கண்டிருக்கிறோம். ஆதலால், தம்மை வருத்த வேண்டிய துன்பங்கள் எத்தகையவரையும் வந்தடையும்.

உறற்பால தீண்டா விடுதல் அரிது.

௨௩௧. கழுமலத்தில் யாத்த களிறும் கருவூர்
விழுமியோன் மேற்சென் றதனால் ;—விழுமிய
வேண்டினும் வேண்டா விடினும், உறற்பால
தீண்டா விடுதல் அரிது.

கழுமலம் என்ற ஊரில் கட்டியிருந்த யானையும், கருவூரில் இருந்த மேலானவனுன கரிகாலனிடம் சென்று, தன்மேல் ஏற்றிக் கொண்டுபோய் அரசுரிமையைப் பெற்றுத் தந்ததால், விழுமிய பொருளை விரும்பினுலும் விரும்பவில்லையானுலும் அடைவதற்கு உரிமையுடைய நன்மைகள் அவனை அடையாது நீங்குதல் இல்லை.

பொறியும் தொடற்பாலார் கண்ணே தொடும்.

உ௧உ. ஆஅய் வளர்ந்த அணிநெடும் பெண்ணையை
ஏஎய் இரவெல்லாம் காத்தாலும்—வாஅய்ப்
படற்பாலார் கண்ணே படுமே பொறியும்
தொடற்பாலார் கண்ணே தொடும்.

உண்டாகி வளர்ந்த அழகிய உயர்ந்த பனைமரத்தை அடைந்து, இரவெல்லாம் பனம்பழத்திற்காகக் காவலிருந்தாலும், வாயில் படுவதற்குரியவரிடத்திலே அப்பழம் விழும். அதுபோல, செல்வத்திருமகளும் சென்று அடைவதற்குரிய வரிடத்தே சென்று அடைவாள்.

முதலில்லார்க்கு ஊதியம் இல்.

உ௧௩. முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்,
பிற்பெரிய செல்வம் பெறலாமோ ?—வைப்போ
டிகலிப் பொருள்செய்ய எண்ணியக்கால் என்னும் ?
முதலில்லார்க் கூதிய மில்.

முற்பிறப்பில் சிறந்த நல்லறங்களை இடைவிடாமல் செய்யாதவர்கள், பிற்பிறப்பில் பெருஞ்செல்வத்தை அடைய முடியுமோ ? பிறருடைய செல்வத்துடன் மாறுபட்டுச் செல்வம் சேர்க்க வேண்டும் என்று நினைத்தால் எவ்வாறு முடியும்? முதற்பொருள் இல்லாதவர்களுக்கு அதனுல் வரும் ஆதாயம் இல்லை.

செல்வம் தொகற்பால போழ்தே தொகும்''

உ௧௪. பன்னுளும் நின்ற விடத்தும் கணிவேங்கை
நன்னுளே நாடி மலர்தலால்,—மன்னர்
உவப்ப வழிபட் டொழுகினும், செல்வம்
தொகற்பால போழ்தே தொகும்.

பலநாளும் தான் இருக்கும் இடத்திருந்தும் கணிகளைப் போல நாளை அறிவிக்கும் வேங்கை மலர்கள், தான் மலர வேண்டிய நாளை அறிந்து மலர்தலால், மன்னர் மனம் மகிழு மாறு தொழுது நடந்தாலும், செல்வம் ஒருவர்க்கு வந்து சேரும் காலத்திலே வந்துசேரும்.

இல்லையே உய்வதற்கு உய்யா விடம்.

உ௩௫. குரைத்துக் கொளப்பட்டார் கோளிழுக்குப் பட்டுப்
புரைத்தெழுந்து போகினும் போவார் — அரக்கில்லுள்
பொய்யற்ற ஐவரும் போயினர். இல்லையே
உய்வதற் குய்யா விடம்.

துரியோதனன் கட்டுவித்த அரக்கு மாளிகையில் இருந்த குற்றமற்ற பாண்டவர் ஐவரும் அவன் வைத்த தீயினின்றும் தப்பிப்பிழைத்தனர். ஆகவே, வஞ்சகரால் ஆரவாரமாகப் பேசிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர், அவ்வஞ்சகரின் பிடியிலிருந்து விலகித் தப்பியெழுந்து சென்றாலும் செல்வர். ஆதலால், பிழைக்கமுடியாத இடம் ஒன்றும் இல்லை.

தீநாள் திருவுடையார்க்கு இல்

உ௩௬. இதுமன்னுந் தீதென் றிசைந்ததூஉம் ஆவார்க்(கு)
அதுமன்னும் நல்லதே யாகும்—மதுமன்னும்
வீநாறு கானல் விரிதிரைத் தண்சேர்ப்ப !
தீநாள் திருவுடையார்க் கில்.

தேனையுடைய நெய்தல் மலர்கள் மணக்கும் கடற்சோலை களையுடைய விரிந்த அலைகள் வீசும் குளிர்ந்த நெய்தல் நிலத் தலைவனே ! இச் செயல் இவர்களுக்கு மிக்க துன்பத்தினைத் தரும், என்று பிறர் சொல்லும் முறையில் வந்து அமைந்த தாகிய செயலும், செல்வம் உடையவர்களுக்கு நல்லதாகவே முடியும். ஆதலால், நல்லறம் உடையவர்களுக்குத் தீமையை நல்கும் நாள்கள் இலவாம்.

நோற்றார்க்குச் சோற்றுள்ளும் வீழும் கறி

உ௩௭. ஆற்றுந் தகைய அரசடைந்தார்க் காயினும்
வீற்று வழியல்லால் வேண்டினும் கைகூடா.
தேற்றார் சிறிய ரெனல்வேண்டா. நோற்றார்க்குச்
சோற்றுள்ளும் வீழும் கறி.

தவம் இயற்றியவர்களுக்குத் தாம் உண்ணும் உணவிலும் முயன்று வருந்தாமல் கறிவந்து விழும். ஆதலால், எல்லாச் செல்வங்களையும் வழங்கவல்ல அரசர்களைச் சார்ந்தவர் களாயினும், நல்லூழ் (நல்லறப்பயன்) உள்ளவழி அல்லா மல், அவர்கள் முயன்றாலும் செல்வம் வந்து சேர்தல் இல்லை. தெளியாதவர், 'பண்பால் சிறியவரே' என்றிகழ வேண்டுவ தில்லை.

ஆகாதார்க்கு ஆகுவது இல்

உ௩அ. **ஆகும் சமயத்தார்க்(கு) ஆள்வினையும் வேண்டாவாம்**
போகும் பொறியார் புரிவும் பயமின்றே,
ஏகல் மலைநாட! என்செய்தாங்(கு) என்பெறினும்
ஆகாதார்(கு) ஆகுவ(து) இல்.

உயர்ந்த பாறைகளையுடைய குறிஞ்சி நிலத்தவனே! எல்லா முயற்சியையும் மேற்கொண்டு எல்லாச் செல்வத்தை யும் பெற்றாலும் நல்லறப் பயனைப் (ஆகூழ்) பெறாதவர்களுக்கு நன்றாவதில்லை. ஆதலால், செல்வத்தை உண்டாக்கும் நல்லறப்பயன் வந்து கூடும் காலம் நெருங்கியவர்களுக்கு எத்தகைய முயற்சியும் வேண்டுவதில்லை. செல்வம் தம்மை விட்டு விலகும் (போகூழ்) தீவினைப் பயனையுடையவர் எத்தகைய முயற்சியை மேற்கொண்டாலும் பயனில்லை.

ஏவலாள் ஊருஞ் சுடும்

உ௩௯. **பண்டுருத்துச் செய்த பழவினை வந்தெம்மை**
இன்றுறுக் கின்ற தெனவறியார்—துன்புறுக்கும்
மேவலரை நோவதென் ? மின்னேர் மருங்குலாய் !
ஏவலாள் ஊருஞ் சுடும்.

மின்னலைப் போன்ற இடையை உடையவளே! தனக்கு ஏவல் செய்பவன் போகூழ் வந்த காலத்துத் தன் ஊரையும் தீயிட்டுக் கொளுத்துவான். ஆதலால், நாம் முற்பிறப்பில் செய்த தீவினை இப்பொழுது நம்மைத் தண்டிக்கிறது என் பதனை உணராதவர்கள் தம்மைத் துன்பப்படுத்தும் பகை வரை வெறுப்பது ஏனோ ?

இல்லை உயிருடையார் எய்தா வினை

உ௬௦. சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் பேரானைப் பெற்ற—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினான். இல்லை
உயிருடையார் எய்தா வினை.

பகைவரால் கொளுத்தப்பட்ட போதும் உயிர் பிழைத்துச் சென்ற சோழனின் மகனான கரிகாலனும், இரும்பிடர்த் தலையார் என்னும் பெயரினையுடைய தன் மாமனைத் தனக்குத் துணைவலியாகப் பெற்றுப் பிற்காலத்தில் தனக்குரிய அரசைப் பெற்றுக் குற்றமற்ற செங்கோலினைச் செலுத்தினான். ஆதலால், உயிருடையார் அடையவியலாத நல்வினைப் பயன் இல்லை.

ஊழம்பு வீழா நிலத்து

உ௬௧. நணியஞ்சத் தக்க அவைவந்தால் தங்கண்
துனியஞ்சார் செய்வ துணர்வார்—பனியஞ்சி
வேழம் பிடிதழூஉம் வேய்சூழ் மலைநாட !
ஊழம்பு வீழா நிலத்து

ஆண் யானை பனியால் உண்டாகும் குளிருக்கு அஞ்சிப் பெண் யானையைத் தழுவும் மூங்கில் சூழ்ந்த குறிஞ்சி நிலத் தலைவனே! ஊழினால் (ஊழிக் காலத்தினால்) செலுத்தப் பட்ட அம்பு இலக்குத் தவறி நிலத்தின்மேல் விழுவதில்லை. குறிக்கு இலக்கானவனைச் சென்று தைக்கும். செய்யத் தகுதி வாய்ந்த செயல்களைச் செய்யும் அறிவுடையார், மிகவும் அஞ்சத்தக்க வினைகள் வந்தாலும், அவற்றால் தமக்கு வரும் துன்பத்திற்கு அஞ்சார்.

25 அரசியல்பு

மென்கண்ணன் ஆளான் அரசு

உ௬௨. எங்கண் இனையர் எனக்கருதின் ஏதமாம்,
தங்கண்ண ராலும் தகவில கண்டக்கால்,
வன்கண்ண னாகி ஒறுக்க, ஒறுக்கல்லா
மென்கண்ணன் ஆளான் அரசு.

தமது கண்போன்றவராயினும் தகுதியில்லாத செயல்களை அவர்களிடம் காணப்பெற்றால், எமக்கு இவர் (நண்பர், பகைவர் என்ற) இத் தன்மையர் என்று எண்ணினால், அது செங்கோன்மைக்குக் குற்றமாகும். ஆதலால், தான் கொடுமை உடையவனாகிக் குற்றத்திற்கு ஏற்றவாறு தண்டிக்க முடியாத கண்ணோட்டம் உள்ளவன், அரசினை ஆளமாட்டான்.

முறைமைக்கு மூப்பிளமை இல்

உ௪௩. சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்.
முறைமைக்கு மூப்பிளமை யில்.

முன்னாளில் பசுக்கன்றின் மேல் தேரைச் செலுத்திக் கொன்ற தன் மகன் வீதிவிடங்கனை அமைச்சர்கள் மிகவும் மறைத்து, அச்செயலை வெளிப்படாமல் காக்கவே, பின்னாளில் தந்தையாகிய மனுநீதிச் சோழனும் தேரைச் செலுத்திக் கொன்றான். எனவே, வழக்கிற்கு முதுமை இளமை என்பதில்லை.

ஒருபக்கம் நீரொழுகிப் பாலொழுகு மாறு

உ௪௪. முறைதெரிந்து செல்வர்க்கும் நல்கூர்ந் தவர்க்கும்
இறைதிரியான் நேரொக்க வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா னாயின் அதுவாம் ஒருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு.

மன்னவன், அரசு முறைமை அறிந்து நடுவு நிலைமை வழுவாமல், செல்வர்க்கும் வறியவர்க்கும் நடுவாகச் செய்ய வேண்டும். அரசு முறைமை தவறி, நடுவு நிலைமையில் ஒழுக வில்லையானால், தாயின் மார்பகங்களிலிருந்து ஒரு பிள்ளைக்கு நீர் ஒழுகி, மற்றொரு பிள்ளைக்குப் பால் ஒழுகுமாறு ஆகும்.

வண்டூதா துண்டு விடல்

உ௪௫. பொருத்தம் அழியாத பூந்தண்டார் மன்னர்
அருத்தம் அடிநிழ லாரை—வருத்தாது
கொண்டாரும் போலாதே கோடல் அதுவன்றோ
வண்டூதா துண்டு விடல்.

செங்கோல் முறையை வளையாத குளிர்ந்த மலர்மாலை அணிந்த மன்னர் தம் அடி நிழலுள் வாழும் குடிமக்களைத் துன்பப்படுத்தாமல், வளமற்ற காலத்தில், வருத்திக் கொண்டவரைப் போலவும் கொள்ளாது, இறைப்பொருளைக் காலமறிந்து கொள்ளவேண்டும். அச் செயல், வண்டானது மொட்டாகிய மலரை ஊதிச் சிதைக்காமல், தேன் நிறைந்த மலர்ந்த மலரை வருத்தாமல் தேன் உண்டு விடுதலோடு அமையும்.

பால்தலைப் பாலூறல் இல்

உசசு. பாற்பட்டு வாழ்ப வெனினும் குடிகள்மேல்
மேற்பட்ட கூட்டு மிகநிற்றல் வேண்டாவாம்
கோல்தலையே யாயினும் கொண்டீக, காணுங்கால்
பால்தலைப் பாலூறல் இல்.

மன்னவனின் ஆணைக்கு உட்பட்டு வாழும் தகுதியுடையவர்களாயினும், குடிமக்களிடம் தமக்குச் சேரவேண்டிய இறைப் பொருளை மிகுதியாக நீண்டகாலம் விட்டுவைக்க வேண்டுவதில்லை. ஆராய்ந்தால், சேரக் கறக்கலாம் என்று கறவாது விட்ட அளவு பாலுக்கு மேல், அதிகமாகப் பால் சுரத்தல் இல்லை. ஆகவே, அரிந்த தாளின் தலையிலுள்ள கதிராயினும் காலமறிந்து அந்த இறைப் பொருளைக் கொள்க.

சூட்டறுத்து வாயில் இடல்

உசஎ. அடைய அடைந்தாரை அல்லவை செய்து
கொடைவேந்தன் கோல்கொடிய னாகிக் குடிகள்மேல்
கூட்டிறப்பக் கொண்டு தலையளிப்பின் அஃதன்றே
சூட்டறுத்து வாயி லிடல்.

தன்னை நெருங்கிப் பொருந்திய குடிமக்களைத் துன்பப் படுத்தி வள்ளல் தொழிலையுடைய மன்னன், கொடுங் கோலனாகிக் குடிமக்களிடம் தாம் கொள்ளும் இறையை, அளவுகடந்து வாங்கிக் கொண்டு, பின்னர் அக் குடிமக்களிடம் இரக்கம் கொண்டு நன்மை செய்யும் செயல், சேவலின் கொண்டையை அறுத்து அந்தச் சேவலுக்கு உணவாக அதனை வாயுள் ஊட்டுதலைப் போன்றதாகும்.

இல்லையே யானை தொடுவுண்ணின் மூடுங் கலம்

உ௪அ. வெண்குடைக்கீழ் வாழும் குடிகட்கு வேந்தனும்
செங்கோலன் அல்லாக்கால் செய்வதென் ? – பொங்கு
படுதிரைச் சேர்ப்ப ! மற் றில்லையே யானை
தொடுவுண்ணின் மூடுங் கலம்.

மிக்க அலைகள் பொங்கி எழும் நெய்தல் நிலத்தலைவனே! யானை உருட்டி உண்டால், அதனை மூடுங்கலம் வேறொன்றும் இல்லை. அதுபோல, தனது வெண்கொற்றக் குடையின்கீழ் வாழும் குடிமக்களுக்கு மன்னவன் கொடுங்கோலனுனல் அவர்கள் யாது செய்வர் ?

எளியாரை எள்ளாதார் இல்

உ௪௯. ஒளியாரை மீதூர்ந்(து) ஒழுகுவ தல்லால்
களியானை மன்னர்க்கோ கைகடத்தல் ஏதம்.
துளியுண் பறவைபோல் செவ்வனேர்ப் பாரும்
எளியாரை எள்ளாதார் இல்.

மழைத் துளியைப் பருகும் வானம்பாடியைப்போல், ஒன்றனையே செம்மையாக ஆராய்வாருள்ளும் எளியவரை இகழாதார் எவரும் இலர். அதுபோல, புகழொளி பொருந்திய பிற மன்னரை, மேற்பட்டுச் சென்று போரிட்டு வெல்லுவதல்லாமல், அரச முறைமை கெடுமாறு ஒழுகுதலும் மதங்கொண்ட யானைகளையுடைய மன்னர்களுக்குத் துன்பம் தருவதாகும்.

ஆயிரம் காக்கைக்கோர் கல்

உ௫௦. மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி ஒழுகின்,—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கால் என்செய்ப ?
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

குற்றமுடைய மனத்தையுடையவன் அல்லாத, பெரு நலத்தையுடைய மன்னன், எல்லாரிடத்தும் அன்புடைய உள்ளத்தவனுய் ஒழுகினுல், அழிக்கும் மனத்தையுடைய பகைவர், வீரத்திற்கு வேண்டிய முகமன் உரைத்துத் தம் படைகளைத் திரட்டினுல், அவ்வரசனை அப் படை என்ன செய்யும் ? ஆயிரம் காக்கையை ஓட்டுதற்கு ஒரு கல் போதுமல்லவா ?

தண்கோல் எடுக்குமாம் மெய்

உ௫க. அங்கோல் அவிர்தொடி ! ஆழியான் ஆயினும்
செங்கோலன் அல்லாக்கால் சேர்ந்தாரும் எள்ளுவரால்.
வெங்கோன்மை வேந்தர்கள் வேண்டும் சிறிதெனினும்
தண்கோல் எடுக்குமாம் மெய்

அழகிய கோல்போன்று திரண்டு விளங்கும் வளையலை யுடையவளே ! தன் பகை மன்னரிடத்துக் கொடுங்கோன்மை யைச் சிறிது விழைந்தாலும், தன்குடிமக்களிடம் செங் கோலன் அல்லாத போது, சக்கரப்படையை உடைய திருமா லேயாயினும் தன்னைச் சேர்ந்தவரும் சேராதவரும் இகழ்வர். தன் குடிமக்களிடம் குளிர்ந்த இரக்க உணர்வுடைய செங் கோலனே உண்மையாகத் தன் பகைவரை அழிப்பான்.

மரத்தின் கீழ் ஆகா மரம்

உ௫உ. மன்னவன் ஆணைக்கீழ் மற்றையார் மீக்கூற்றம்
என்ன வகையால் செயப்பெறுப ? —புன்னைப்
பரப்புநீர் தாவும் படுகடல் தண்சேர்ப்ப !
மரத்தின்கீழ் ஆகா மரம்.

புன்னைப் பரப்பிலே வந்து நீர் பரவுதலான பரந்த கடலை யுடைய குளிர்ந்த நெய்தல் நிலத்தலைவனே ! ஒரு பெரிய மரத்தின் கீழ் வேறு மரங்கள் ஓங்கி வளர்தல் இல்லை. ஆதலால், மன்னர் ஆணை செல்லுமிடத்துத் தம்மை உயர்த் திக் கூறும் தமதாணையை எவ்வாறு செயல்படுத்துவர் ? (தமதாணையைச் செலுத்தப் பெறுர்,.

கவுள்கொண்ட நீர்

உ௫௩. வழிப்பட் டவரை வலியராச் செய்தார்
அழிப்பினும் ஆக்கினும் ஆகும் —விழுத்தக்க
பையமர் மாலைப் பணைத்தோளாய் ! பாத்தறிவென்
மெல்லக்? கவுட்கொண்ட நீர்.

சிறப்பினையுடைய மென்மையான மாலை அணிந்த பருத்த தோளையுடையவளே! கன்னக் கதுப்புகளுள் கொண்டு அடக்கிய நீரைக் குடிக்கவும் உமிழவும்செய்யலாம். அது போல, தம்மைத்தொழுது வழிபாடு செய்யும் குடிமக்களை

வலிமை உள்ளவராகச் செய்தவர், தாமே பின்னர் அவர்களை வாழச் செய்தலும் அழிக்கச்செய்தலும் இயலும். இதற்கு மெல்ல ஆராய்ந்தறியும் அறிவு எதற்கு?

பாம்போடு உடன்உறையும் ஆறு

உ௫௪. தலைமை கருதும் தகையாரை வேந்தன்
நிலைமையால் நேர்செய் திருத்தல்—மலைமிசைக்
காம்பனுக்கு மென்றோளாய் ! அஃதன்றே ஓரறையுள்
பாம்போ டுடனுறையும் ஆறு.

மலைமேல் தோன்றிய மூங்கிலை அழிக்கும் மென்மையான தோள்களையுடையவளே !' தாம் தலைமை அடைய வேண்டும் என்று எண்ணும் இயல்புடையவரை, மன்னவன் பல மாண்புடைய நிலைமையைத் தனக்கு இணையாகச் செய்து கொடுத்து அவரோடு சேர்ந்து இருத்தலானது, பாம்பு வாழும் ஓர் அறையுள் சேர்ந்து வாழும் தன்மையோடு அமையும்.

செய்வதன் வெல்லை அரசாட்கொளின்

உ௫௫. கூற்றும் உயிர்கொள்ளும் போழ்து குறிப்பறிந்து
மாற்றம் உடையாரை ஆராயா(து)—ஆற்றவும்
முல்லை புரையும் முறுவலாய் ! செய்வதென்
வல்லை அரசாட் கொளின்.

முல்லை அரும்புபோன்ற பல்வரிசையுடையவளே ! உயிரைப் பறித்துக் கொள்ளும் பொழுது இயமனும் மறுமொழி சொல்வாரின் சொல்லின் குறிப்பை ஆராய்ந்தறிவதில்லை. அதுபோல, மன்னவன் மிகவிரைந்து குடிகளை முறையில்லாமல் துன்பப்படுத்தி, அடிமையாக்கிக் கொண்டால், நாம் செய்வதென்ன ?

குரங்கின்கைக் கொள்ளி கொடுத்து விடல்

உ௫௬. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமில் உள்ளத்த னாகி -நடக்கையின்
ஒள்ளியன் அல்லான்மேல் வைத்தல், குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

அடக்கம் இல்லாத மனத்தவனுகி ஒழுக்கத்திலும் சிறந்தவன் அல்லாதவனிடத்தில், உடைய பெருஞ் செல்வத்தால் வரும் உயர்ந்த தலைமையை ஒப்படைத்தலானது, குரங்கின் கையிலே கொள்ளிக் கட்டையைக் கொடுத்தனோடு அமையும்.

கொல்லையுள் கூழ்மரமே போன்று

உ௫எ. எல்லையொன் றின்றியே இன்னுசெய் தாரையும்
ஒல்லை வெகுளார், உலகாடும் என்பவர்,
சொல்லின் வளாஅய்த்தம் தாணிழல் கொள்பவே,
கொல்லையுள் கூழ்மரமே போன்று.

மனைப் படப்பையில், தமக்கு உணவாகுமாறு வைத்து வளர்க்கும் மரம் போன்று, உலகை ஆள்வோம் என்னும் அரசர், வரையறை இல்லாமல் தீங்கு செய்தவரிடத்தும் விரைந்து சினம்கொள்ளார்; தமது இனிய சொல்லால் வளைத்துத் தம் அடிநிழலில் தங்கச் செய்து காத்துக் கொள்வர்-

பெரியாரைச் சார்ந்து கெழீஇயிலார் இல்

உ௫அ. பொலந்தார் இராமன் துணையாகத் தான்போந்(து)
இலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
போந்திறை யாயதூஉம் பெற்றன். பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலார் இல்.

பொன்மாலையை அணிந்த இராமபிரானைத் தனக்குத் துணையாக எண்ணிச் சென்று, இலங்கை அரசனின் தம்பி வீடணன், இலங்கைக்கே மன்னனுகும் பதவியை அடைந்தான். எனவே, பெருமைக்குரியவர்களின் துணையைப் பெற்று, அத்துணையினுலே நன்மையடையாதார் எவருமிலர்

26. அமைச்சர்

நீத்தம் மலைப்பெயல் காட்டும் துணை

உ௫௯. கல்வி யகலமும் கட்டுரை வாய்பாடும்
கொல்சின வேந்தன் அவைகாட்டும்,—மல்கி
தலைப்பாய் இழிதரு தண்புனல் நீத்தம்
மலைப்பெயல் காட்டுந் துணை.

நிறைந்து மலையினிடமெல்லாம் பரந்து வந்துவிழுகின்ற குளிர்ந்த வெள்ளப் பெருக்கு, மலையில் பெய்த மழையின் அளவைத் தெரிவிக்கும். அதுபோல, பகைவரைக் கொல் லும் சினத்தையுடைய மன்னவனது கல்விப் பெருக்கையும், சொல்லாற்றலையும் அவனைச் சூழ்ந்துள்ள அரசவை தெரி விக்கும்.

செய்தானை ஒவ்வாத பாவையோ இல்.

உ௬0. செயிரறு செங்கோல் சினவேந்தன் தீமை
பயிரறு பக்கத்தார் கொள்வர்—துகிர்புரையும்
செவ்வாய் முறுவனற் சின்மொழியாய் ! செய்தானை
ஒவ்வாத பாவையோ வில்.

பவளத்தைப் போன்று சிவந்த வாயினையும் இளநகை யினையும் இனிய மெல்லிய மொழியினையும் உடையவளே ! எழுதிய ஓவியனின் கருத்துக்குப் பொருந்தாத ஓவியம் இல்லை. அதுபோல, குற்றமற்ற செங்கோலையும் சினத்தை யும் உடைய மன்னவனின் தீமையை அருவருப்பற்ற அமைச் சரும் செய்வர்.

சுரையாழ் நரம்பறுத் தற்று

உ௬க. கற்றார் பலரைத்தன் கண்ணாக இல்லாதான்
உற்றிடர்ப் பட்ட பொழுதின்கண் தேற்றம்,
மரையா துணைபயிரும் மாமலை நாட !
சுரையாழ் நரம்பறுத் தற்று.

பெண் மான்கள் தம் துணைகளை அழைக்கும் பெரிய குறிஞ்சி நிலத்தலைவனே ! அரசியல் நூல்களைக் கற்ற அமைச்சர்கள் பலரைத் தனக்குக் கண்ணைப் போன்று துணையாகப் பெறாத மன்னன், ஒருதுன்பத்தைப் பெற்று, அத் துன்பத்தினால் துன்பப்படும் பொழுது தானே துணிதல், ஒற்றை நரம்பினையுடைய சுரையாழின் அந்த ஒரு நரம்பையும் அறுத்தாற் போன்றதாகும்.

புல்லத்தைப் புல்லம் புறம்புல்லு மாறு

உ௬உ. நல்லவும் தீயவும் நாடிப் பிறருரைக்கும்
நல்ல பிறவும் உணர்வாரைக் கட்டுரையின்
வல்லிதின் நாடி வலிப்பதே புல்லத்தைப்
புல்லம் புறம்புல்லு மாறு.

இவை நல்லவை தீயவை என்பதனையும் ஆராய்ந்து, மற்றவர் கூறும் நல்லவை அல்லவையையும் ஆராய்ந்தறிய வல்லவரை விரைந்து தேர்ந்தெடுத்து, பேச்சாற்றலால் தன் வயமாக்குதலானது, எருதை, எருதால் தன்னிடம் அணைத்தலைப் போன்றதாகும்.

ஓம்புவார் இல்லெனில் சென்று படுமாம் உயிர்

உ௬௩. மனத்தினும் வாயினும் மெய்பினும் செய்கை
அனைத்தினும் ஆன்றவிந்தா ராகி—நினைத்திருந்(து)
ஒன்றும் பரியலராய் ஓம்புவார் இல்லெனின்,
சென்று படுமாம் உயிர்.

செயல்கள் எல்லாவற்றினும் மனத்தினும் வாய்மொழியினும் உடலினும் அடக்கம் உடையவர்களாகி நன்மையினையே எண்ணியிருந்து எதற்கும் வருந்தாமல் காக்கும் சான்றோர் இல்லையென்றால், எல்லா உயிரும் அழிவுறும்.

முன் இன்னா மூத்தார் வாய்ச்சொல்

உ௬௪. செயல்வேண்டா நல்லன செய்விக்கும் ; தீய
செயல்வேண்டி நிற்பின் விலக்கும் ; இகல்வேந்தன்
தன்னை நலிந்து தனக்குறுதி கூறலால்
முன்னின்னா மூத்தார்வாய்ச் சொல்.

சான்றோர் வாய்மொழி, செய்ய வியலாத நல்லனவற்றைச் செய்விக்கும் ; கொடிய செயல்களைச் செய்ய விரும்பினால் அச்செயலை விலக்கும். மாறுபாடுடைய பகை மன்னனைத் துன்பப் படுத்தி அவனுக்கு நன்மை தருவனவற்றைச் சொல்லுதலால், அவர் கூறுவன முன்னர் துன்பம் தருவனவாம். (பின்னர் இன்பம் நல்குவனவாம்)

ஒள்ளிய காட்டு ஆளர்க்கு அரிது

உ௬௫. செறிவுடைத் தார்வேந்தன் செவ்வியல பெற்றால்
அறிவுடையார் அவ்வியமும் செய்வர்—வறிதுரைத்துப்
பிள்ளை களைமருட்டும் தாயர்போல் அம்புலிமேல்
ஒள்ளியகாட் டாளர்க் கரிது.

நெருங்கிய மாலையை அணிந்த அரசன், தகுதியற்ற செயல்களைச் செய்தால், சந்திரனைக் காட்டிப்பல பொய்யுரைகளைச் சொல்லிக் குழந்தைகளை அஞ்சச் செய்யும் அன்னையரைப் போன்று அறிவுடைய அமைச்சர்கள் பொய்யுரைத்து வஞ்சித்தாயினும், அரசனை நல்ல செயல்களை ஏற்றுச் செயல்படுமாறு செய்வர். மன்னவனால் ஆளப்பட்ட அமைச்சர்களுக்கு உண்மையைக் கூறித் தெளிவித்தல் இயலாதாம்.

புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கு இல்
வளிமுன்னர் வைப்பாரம் இல்

௯௯௯. தீயன வல்ல செயினும் திறல்வேந்தன்
காய்வன சிந்தியார் கற்றறிந்தார்—பாயும்
புலிமுன்னர்ப் புல்வாய்க்குப் போக்கில். அதுவே
வளிமுன்னர் வைப்பாரம் இல்.

பாயும் புலியின் எதிரில் அகப்பட்ட மானுக்குத் தப்பிப் பிழைக்க வழியில்லை. பெருங் காற்றின் முன்னர் வைக்கோல் சுமையும் நிலைத்து நிற்றல் இல்லை அதுபோல, தீமையைத் தருவனவாகிய நல்லன அல்லாத செயல்களை, வெற்றியையுடைய மன்னவன் செய்தாலும், அற நூல்களைக் கற்றறிந்த அமைச்சர்கள் செய்ய நினையார்.

25. மன்னரைச் சேர்ந்தொழுகல்

கள்ளைக் குடித்துக் குழைவாரோ இல்

உ௯எ. கொடித்திண்டேர் மன்னரால் கூட்டுண்டு வாழ்வார்
எடுத்துமேற் கொண்டவர் ஏய வினையை
மடித்தொழிதல் என்னுண்டாம் ? மாணிழாய் ! கள்ளைக்
குடித்துக் குழைவாரோ இல்.

மாண்புடைய இழைத்த அணிகளையுடையவளே! கள்ளைக் குடித்த பின்னர், அடங்கி அமைதியாக இருப்பவர் ஒருவரும் இலர். கொடியுயர்த்திய உறுதியான தேரையுடைய பேரரசரால், பகுதிப் பணம் கொள்ளப்பட்டு வாழும் சிற்றரசர்கள், அவ்வரசர் ஒரு செயலை மேற்கொண்டு ஏவிய செயலைச் செய்யாமல் சோம்பியிருத்தலால், என்ன பயன் விளையும் ? (ஒன்றும் இல்லை. ஆதலால், ஏவிய செயலைச் செய்யாமல் சோம்பியிருத்தலால் நன்மை இல்லை.)

செய்க என்றான் உண்க என்னும் ஆறு

உ௬அ. வெற்றிவேல் வேந்தன் வியங்கொண்டால் யாமொன்
பெற்றிலேம் என்பது பேதைமையே,—மற்றதனை றும்
எவ்வம் இலராகிச் செய்க. அதுவன்றே
செய்கென்றான் உண்கென்னு மாறு.

வெற்றியையுடைய வேலைத்தாங்கிய அரசன் 'ஒன்றைச் செய்க' என்று ஏவினால்; யாம் அதனைச் செய்வதற்கு உரிய ஆற்றலைப் பெறவில்லை என்று மறுத்துக் கூறுவது அறியாமை யாகும். அரசர் ஏவிய செயலைத் துன்பப்படாமல் செய்க. அவ்வாறு செய்தால், ஒரு செயலைச் 'செய்க' என்று ஏவியவன், 'உண்க' என்று ஏவியமைக்கு ஒக்குமல்லவா ?

ஆலென்னிற் பூலென்னு மாறு

உ௬௯. எமரிது செய்க எமக்கென்று வேந்தன்
தமரைத் தலைவைத்த காலைத்—தமரவற்கு
வேலின்வா யாயினும் வீழார் மறுத்துரைப்பின்,
ஆலென்னிற் பூலென்னு மாறு.

''நீர் எம்மவராதலின் எமக்கு இச்செயலைச் செய்து தரல் வேண்டும்'' என்று மன்னவன் தம் உறவினருக்குத் தலைமைப் பேறு வழங்கிய போது, அவ்வுறவினர், அம் மன்னவனுக் காகப் போர்க் களத்தில் வேல் முனையில் இறவாமல், ''எம்மால் இயலா தென்று'' மறுத்துரைத்தலானது; ஒருவன் ஆலமரத்தை ஆலமரமென்று சொன்னால், மற்றொருவன் அதனைப் பூலாமரம் என்று சொல்லுவதனோடு அமையும்.

கடல்படா வெல்லாம் படும்

உ௭௦. விடலமை செய்து வெருண்டகன்று நில்லா
துடலரு மன்னர் உவப்ப வொழுகின்,
மடலணி பெண்ணை மலிதிரைச் சேர்ப்ப !
கடல்படா வெல்லாம் படும்.

மடல்களையுடைய பனைமரங்கள் நிறைந்த நெய்தல் நிலத்தலைவனே ! பிறரால் துன்பப்படுத்த முடியாத ஆற்றலுடைய அரசர்கள் தம்மை விட்டு விலகுதல் பொருந்தச் செய்தாரென்று அஞ்சி அவரை விட்டு விலகாமல்,

மேலும் அவர் மகிழ்வனவே செய்து நடப்பாரானுல் அவருக்குக் கடலில் உண்டாகாத வளமெல்லாம் உண்டாகும்.

பனைமுதிரின் தாய்தாள்மேல் வீழ்ந்து விடும்

உ௭௧. உவப்ப உடன்படுத்தற் கேய கருமம்
அவற்றவற் றுந்துணைய வாகிப் பயத்தால்
வினைமுதிரின் செய்தான்மே லேறும். பனைமுதிரின்
தாய்தாண்மேல் வீழ்ந்து விடும்.

பனம் பழம் முற்றினுல் தாய்ப்பனை மரத்தின் அடியில் விழும். அதுபோல, மன்னவன் தான் மகிழுமாறு செய்து முடிப்பதற்கு ஒருவனை ஏவிய செயல்கள், அந்த அந்தச் செயல்களின் அளவாய் நன்மையைத் தந்து, அந்தச் செயலைச் செய்து முடித்தவன் மேல், புகழ் முதலியன அமையும்.

கூரிது எருத்து வலியதன் கொம்பு

உ௭௨. செருக்கெழு மன்னர் திறலுடையார்ச் சேர்ந்தார்
ஒருத்தரை யஞ்சி உலைதலும் உண்டோ ?
உருத்த சுணங்கின் ஒளியிழாய் ! கூரி
தெருத்து வலியதன் கொம்பு.

தோன்றிய தேமலையும், ஒளி பொருந்திய இழைத்த அணிகலன்களையும் உடையவளே! வலிமையுள்ள எருதின் கொம்பு கூர்மையுடையதாகும். எனவே, எல்லா ஆற்றலும் உடைய, போர் மேவிய மன்னரைத் துணையாக அடைந்தவர், மற்றவருக்கு அஞ்சி மனம் தளர்தலும் உண்டோ? (இல்லையாம்.)

நெய்பெய்த கலனே நெய்பெய்து விடும்

உ௭௩. வேந்தன் மதித்துவப்பப் பட்டாரைக் கொண்டேனை
மாந்தரும் ஆங்கே மதித்துணர்வர்—ஆய்ந்த
நலமென் கதுப்பினுய் ! நாடின்நெய் பெய்த
கலனேநெய் பெய்து விடும்.

ஆராய்ந்த சிறந்த மேன்மையான கூந்தலையுடையவளே! ஆராய்ந்தால், நெய் வார்த்த கலமே (பின்னரும்) நெய் யிடுதற்கு ஏற்றதாகி வரும். அதுபோல், மன்னனுல் நன்கு மதிக்கப் பெற்று, அவனது மகிழ்ச்சிக்கு உரியவரை விரும்பி

ஏற்றுக்கொண்டு, மற்றைய மக்களும் மன்னனைப் போன்றே அவனை நன்கு மதித்து அறிவார்கள்.

வேண்டாமை வேண்டியதெல்லாம் தரும்.

உஎச. ஆண்டகை மன்னரைச் சார்ந்தார்தாம் அல்லுறினும்
ஆண்டொன்று வேண்டுதும் என்ப துரையற்க.
பூண்டாங்கு மார்ப ! பொருடக்கார் வேண்டாமை
வேண்டிய தெல்லாந் தரும்.

அணிகலன்கள் அணியப் பெற்ற மார்பையுடையவனே ஆண்தகைமையையுடைய மன்னரைச் சேர்ந்து வாழ்வார், தாம் வறுமையால் துன்பம் அடைந்தாலும், மன்னவரிடத்தில் "ஒரு பொருளை விரும்பிக் கேட்போம்," என்பதனைச் சொல்ல வேண்டா. மற்றவரால் நன்கு மதிக்கப்படுபவர் ஒரு பொருளை விரும்பிக் கேட்காமல் நடந்து கொள்ளுதலே, தாம் விரும்பிய எல்லாப் பொருளையும் தரும்.

முலையிருப்பத் தாயணல் தான்சுவைத் தற்று

உஎரு. காவலனை ஆக வழிபட்டார் மற்றவன்
ஏவல் வினைசெய் திருந்தார்க் குதவுடுத்தல்,
ஆவணைய நின்றதன் கன்று முலையிருப்பத்
தாயணல் தான்சுவைத் தற்று.

அரசர்களைத் தனக்கு நட்பினராகச் சார்ந்து வாழ்ந்தவர், மன்னனால் ஏவிய பணியினைச் செய்யும் மற்றவருக்கு (பணியாளருக்கு) உதவியைச்செய்து, அவரால் தம்செயலைமுடித்துக் கொள்ளலாம், என்று எண்ணுவது, தன்னைத் தழுவி நின்ற பசுவினை அதன் கன்று, தாயின் மடியிருக்க, அதனைச் சுவைக்காமல் தாயின் அணலைச் சுவைத்தலைப் போன்றதாகும்.

புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்.

உஎசா. சிறப்புடை மன்னரைச் செவ்வியின் நோக்கித்
திறத்தின் உரைப்பார்க்கொன் றுகாத தில்லை.
விறற்புகழ் மன்னர்க் குயிரன்ன ரேனும்
புறத்தமைச்சின் நன்றகத்துக் கூன்.

சிறப்புடைய அரசரின் வாய்ப்பான காலத்தை அறிந்து, அவரிடம் திறம்பட எடுத்துரைப் பார்க்குச் செய்து

முடித்துக் கொள்ளாத செயலேதும் இல்லை. மிக்க புகழுடைய அரசர்க்கு உயிரைப்போல்பவரே யானாலும், அரண்மனையின் வெளியில் வாழும் அமைச்சரைக் காட்டிலும் அரண்மனையின் உள்ளே வாழும் கூனனுக்கு வாய்ப்பான காலம் எளிதில் அமையும்.

கடிய கனைத்து விடல்

உஎஎ. இடுகுடைத்தேர் மன்னர் எமக்கமையு மென்று
கடிதவர்தாம் காதலிப்ப தாம்காதல் கொண்டு
முடிய எனைத்தும் உணரா முயறல்,
கடிய கனைத்து விடல்.

நிழலைத் தரும் வெண்கொற்றக்குடையினையுடைய அரசர், தமக்குத் தகுதியுடையதென்று மிகவும் விரும்பும் பொருளைத் தாமும் விரும்பிச் சிறிதும் ஆராயாமல் அடைவதற்கு முயலுதல், கொடிய புலி முதலானவற்றைத் தம்மிடம் வருமாறு அழைத்ததனோடு அமையும்.

இளைதென்று பாம்பிகழ்வார் இல்

உஎஅ. சீர்த்தகு மன்னர் சிறந்தனைத்துங் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச்—சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வா ரில்.

சிறப்பான உறவினரில்லாமல் நீங்கித் தனிமையான இடத்தில் இருந்தாலும் குட்டிப் பாம்பென்று பொருட் படுத்தாமல் இகழ்ந்திருப்பவர் இலர். அது போன்று, மேன்மை தங்கிய அரசர், சிறப்பினை எல்லாம் இழந்திருந் தாலும், அந்நிலைமையைக் கண்டு அவரிடம் மாறுபட்டு, அறிவுடையார் இகழ்ந்து பேசார்.

எருத்திடை வைககோல் தினல்

உஎகூ. செருக்குடைய மன்னர் இடைப்புக் கவருள்
ஒருத்தற் குதவாத சொல்லின் தனக்குத்
திருத்தலு மாகாது தீதாம், அதுவே
எருத்திடை வைக்கோல் தினல்.

செருக்குடைய அரசர் இருவரிடையே ஒருவன் நுழைந்து, அவர்களுள் ஒருவருக்கும் நன்மை தாராதவைகளைப் பேசினுல் அவர்கள் பகைமையைத், திருத்தவும் முடியாது. திருத்த முற்படுதல் தனக்குத் தீமையாகவும் முடியும். அப்பேச்சு, இரண்டு எருதுகளுக்கிடையே இட்ட வைக்கோலை, ஓர் எருது இடையிலே நுழைந்து தின்னுதலைப் போன்றதாகும். (அவ்வெருது வைக்கோலை மேய முடியாமல் இரண்டு எருதுகளால் துன்பம் அடையும்.)

குவளையைத் தன்னுரால் யாத்து விடல்,

உ அ௦. பன்னுள் தொழில்செய் துடைய கவர்ந்துண்டார்,
இன்னுமை செய்யாமை வேண்டி இறைவர்க்குப்
பொன்யாத்துக் கொண்டு புகுதல், குவளையைத்
தன்னுரால் யாத்து விடல்.

அரசனுக்குப் பலநாள்கள் பணிசெய்து, அவருடைய பொருள்களைக் கவர்ந்து விரும்பி உண்டவர், அவ்வரசர் பின்னர் ஒருபோதும் தனக்குத் துன்பஞ் செய்யாதிருக்க விரும்பித் தன்னிடத்துள்ள பொருளைச் சேரக் கட்டிக் கொண்டு போய்க் கொடுப்பதானது, குவளை மலரை, அதன் நாராலேயே மாலை தொடுத்தலைப் போன்றதாகும்.

குறைப்பர் தம்மேலே வீழப் பனை.

உ அக. மெய்ம்மையே நின்று மிகநோக்கப் பட்டவர்
கைம்மேலே நின்று கறுப்பன செய்தொழுகிப்
பொய்ம்மேலே் கொண்டவ் விறைவற்கொன் றூர்குறைப்
தம்மேலே வீழப் பனை. [பர்

உண்மையான நெறியிலே நின்று, மன்னனுல் மிகவும் மதிக்கப்பட்டவர் தமக்கு ஒருசெயலை நிறைவேற்றிக் கொள்ள, அரசனின் ஆணையை மீறியும் அம்மன்னன் கோபம் கொள்ளும் செயல்களைச் செய்தும், வஞ்சனையை மேற்கொண்டு அம்மன்னனைக் கொன்றவர், பனைமரம் தம்மேலே விழுமாறு வெட்டுகின்றவரோடு ஒப்பர்.

CONNEMARA PUBLIC LIBRARY
29 JUN 1977

எழுப்புபவோ துஞ்சு புலியைத் துயில் ?

உஅஉ. வெஞ்சின மன்னவன் வேண்டாத வேசெயினும்
நெஞ்சத்துட் கொள்வ சிறிதும் செயல்வேண்டா.
என்செய் தகப்பட்டக் கண்ணும் எழுப்புபவோ
துஞ்சு புலியைத் துயில் ?

எல்லா இன்னல்களையும் தமக்குச் செய்து, அகப்பட்ட போதும், தூங்குகின்ற புலியை அதன் தூக்கத்திலிருந்து எழுப்புவார்களோ? எழுப்பார். அதுபோல, கொடுஞ் சினத்தையுடைய அரசன், தன்கீழ் வாழும் மக்களுக்குத் துன்பமே செய்தாலும் அவன் மனத்துள் கறுவுகொள்ளத் தக்க செயல்களைச் சிறிதும் செய்ய வேண்டுவதில்லை.

ஏமரார் கோங்கேறினர்

உஅங. தாமேயும் தம்மைப் புறந்தர வாற்றதார்
வாமான்றேர் மன்னரைக் காய்வ தெவன்கொலோ ?
ஆமா உகளும் அணிவரை வெற்ப ! கேள்
ஏமரார் கோங்கேறி னர்.

காட்டுப் பசுக்கள் பாய்ந்து உலவும் அழகிய குறிஞ்சி நிலத் தலைவனே ! கோங்க மரத்தின் மேலேறியவர் தம்மைக் காத்துக்கொள்ளார், தம்மைத் தாமாகவும் காத்துக்கொள்ள வியலாதவர், தாவிப் பாயும் குதிரைகள் பூட்டிய தேரை யுடைய அரசரைக் கோபிப்பது என்ன பயனைக் கருதி ? (தம் அழிவை நோக்கிப்போலும்).

கூன்மேல் எழுந்த குரு

உஅச. உறாஅ வகையது செய்தாரை வேந்தன்
பொறாஅன் போலப் பொறுத்தால்—பொறாஅமை
மேன்மேலும் செய்து விடுதல் அதுவன்றே
கூன்மேல் எழுந்த குரு.

செய்யப் பொருந்தாத செயல்களைச் செய்தவரை, அரசன் வெளியில் பொறுக்காதவனைப் போலக் காட்சி அளித்து, மனத்துள் பொறுத்துக்கொண்டால், மீண்டும் அவன் பொறுத்துக்கொள்ளாத செயல்களைத் தொடர்ந்து செய்வதானது, கூனின் மேலெழுந்த கழலைக் கட்டியைப் போன்றதாகும்.

ஆடுபனைப் பொய்க்காலே போன்று

உ அ௫. பொருளல்லார் கூறிய பொய்க்குறளை வேந்தன்
தெருளுந் திறந்தெரிதல் அல்லால்,-வெருளவெழுந்(து)
ஆடுபவரோடே ஆடார் உணர்வுடையார்;
ஆடுபனைப் பொய்க்காலே போன்று.

ஒரு பொருட்டாக மதிக்கப்படாதவர் சொல்லிய பொய்யாகிய (கோளை) குறளையை, (பொய்ம்மையானவை என்று) மன்னன் தெளியும் வகைகளை ஆராய்ந்து மன்னனைத் தெளிவிக்காமல், அரசரிடமுள்ள இயற்கை யறிவுள்ளவர், குறளைக் கூறியவர் அஞ்சுமாறு, குறளைக் கூறி, ஆடுகின்ற வர்களோடு, தாமும் எழுந்து மூங்கிலால் அமைந்த பொய்க் கால் ஆடுவது போன்று ஆடார்.

28. பகைத்திறம்

அஞ்சுவார்க்கில்லை அரண்

உ அசு. வன்சார் புடையர் எனினும் வலிபெய்து
தஞ்சார் பிலாதாரைத் தேசூன்ற லாகுமோ ?
மஞ்சுசூழ் சோலை மலைநாட ! யார்க்கானும்
அஞ்சுவார்க் கில்லை அரண்.

மேகங்கள்சூழ்ந்த சோலைகளையுடைய குறிஞ்சி நிலத் தலைவனே ! வலியவரைத் துணையாகச் சார்ந்திருப்பவராயி னும் தன் வலிமை இல்லாதவரை, வலிமையுடைவராக்கிப் புகழடையும் செயல்களில் அவரை நிலைநிறுத்த முடியுமோ ? எத்தகையவர்க்காயினும் மனத்தில் அச்சம் உடையவர் களுக்கு அரண்களாற் பயனில்லை.

தனிமரம் காடு ஆதல் இல்

உ அஎ. எதிர்த்த பகையை இளைதாய போழ்தே
கதித்துக் களையின் முதிராதே, தீர்த்து
நனிநயப்பச் செய்தவர் நண்பெல்லாந் தீரத்
தனிமரம் காடாதல் இல்.

தம்மோடு பகைத்துத் தோன்றிய பகையை, அஃது அரும்பியபோதே விரைந்து செயல்பட்டுக் களைந்துவிட்டால், அப் பகைமை முதிர்வதில்லை. பகைவரின் நண்பர்களை எல்லாம் தம்மிடம் மிகவும் விருப்பம் கொள்ளச் செய்து, பிரிக்கப் பிரித்தால், தனியே ஒருமரம் காடாதல் இல்லை. அதுபோல, தனித்து விடப்பட்ட பகைவரும் அஞ்சத்தக்க பகைவராகார்.

கடித்தோடும் பாம்பின்பல் கொள்வாரோ இல்

உ அ அ. முன்னலிந் தாற்ற முரண்கொண் டெழுந்தோரைப்
பின்னலிதும் என்றிருத்தல் பேதைமையே—மின்னின்று
காம்பன்ன தோளி! கலத்திற் கடித்தோடும்
பாம்பின்பல் கொள்வாரோ இல்.

மின்னலைப்போல் ஒளி நிலைபெற்று, மூங்கிலைப் போன்ற தோள்களை யுடையவளே! கலத்தினின்றும் ஒருவரைக் கடித்துவிட்டு ஓடும் பாம்பின் பல்லைப் பிடுங்குவார் ஒருவரும் இலர். மிகவும் பகைமை கொண்டு முற்படத் தம்மைத் துன்பப்படுத்தியவரைப் பின்னால் துன்பப்படுத்துவோம் என்று எண்ணி யிருத்தலானது, அறியாமையேயாகும். (தம்மைத் துன்பப் படுத்துவதற்கு முன்பே பகைவரைத் துன்பப்படுத்தல் வேண்டும்.)

குடிகெட வந்தால் அடிகெட மன்றி விடல்

உ அ கூ. நிரம்ப நிரையத்தைக் கண்டந் நிரையம்
வரம்பில் பெரியானும் புக்கான்—இரங்கார்,
கொடியார மார்ப! குடிகெட வந்தால்,
அடிகெட மன்றி விடல்.

முத்துத் தனிவடத்தையுடைய மார்பனே! எல்லையற்ற பண்பு நலத்தால் உயர்ந்தவனை தருமனும் பொய் பேசுவதால் அடைவது நரகம் என்பதனை நன்கு அறிந்திருந்தும் ஒரு பொய் பேசி அந்த நரகத்தை அடைந்தான். ஆதலால், தான் பிறந்த குடி அழிவதற்குரிய காலம் வந்தால், அக் குடி அழியாத முறையில், பகைவர்க்காக இரக்கம் கொள்ளாமல், அப் பகைவர் அடியோடு அழியுமாறு தண்டித்து விடுக.

உவர்நிலம் உட்கொதிக்கு மாறு

உ௬௰. தமரல் லவரைத் தலையளித்தக் கண்ணும்
அமராக் குறிப்பவர்க் காகாதே தோன்றும்.
சுவர்நிலம் செய்தமையக் கூட்டியக் கண்ணும்
உவர்நிலம் உட்கொதிக்கு மாறு.

சுவராக அமையும்படி மண்ணினைப் பிசைந்து, பொருந்து மாறு கூட்டியபோதும், உவர்மண் உள்ளே கொதிப் படைந்து, உதிர்ந்து விடும். அதுபோலத் தமக்கு உறவற்ற பகைவரைத் தாம் கருணைகொண்டு காத்தாலும், அவர்க்கு நன்மை தருவனவாகத் தோன்றாது; விரும்பாத குறிப்பாகவே தோன்றும்.

ஒக்கலை வேண்டி அழல்

உ௬௧. முகம்புறத்துக் கண்டால் பொறுக்கலா தாரை
அகம்புகுதும் என்றிரக்கும் ஆசை; இருங்கடத்துத்
தக்க நெறியிடைப் பின்னும் செலப்பெறாஅர்
ஒக்கலை வேண்டி அழல்.

தம் முகத்தை வெளியில் பார்த்தாலும் மனம் பொறுக்காத பகைவரை, 'இன்று எங்கள் வீட்டிற்கு வாருங்கள்,' என்று அவரை வேண்டி அழைக்கும் விருப்ப மானது, பெரிய காட்டில் எளிதாகச் செல்லத்தகுந்த வழியில் பெற்றோரைத் தொடர்ந்து பின் செல்லாத குழந்தைகள் அவருடைய இடுப்பில் ஏறிச்செல்ல விரும்பி அழுதலோடு அமையும்.

கூற்றம் புறங்கொம்மை கொட்டினார் இல்

உ௬௨: ஆற்றப் பெரியார் பகைவேண்டிக் கொள்ளற்க
போற்றாது கொண்டரக்கன் போரில் அகப்பட்டான்
நோற்ற பெருமை யுடையாரும் கூற்றம்
புறங்கொம்மை கொட்டினார் இல்.

தவம் இயற்றிய சிறப்புடையவர்களும் கூற்றுவனின் முதுகில் கைகுவித்துக் கொட்டிப் பிழைத்தவர் இலர். ஆதலால், வலிமை சான்ற பெரியவரின் பகைமையை விரும்பி மேற்கொள்ள வேண்டா. ஏனெனில், ஓரரக்கன் ஆராயாமல் பெரியவரோடு பகைமை பாராட்டிப் போரிட்டு

இறந்து போனான். [இராவணன் இராமனோடு பகைமை பாராட்டிப் போரிடை இறந்தனன் என்பர்.]

தீநாய் எழுப்புமாம் எண்கு

உ௯௩. பெரியாரைச் சார்ந்தார்மேல் பேதைமை கந்தாச்
சிறியார் முரண்கொண் டொழுகல்,—வெறியொலி
கோணா யினம்வெரூஉம் வெற்ப! புலம்புகின்
தீநாய் எழுப்புமாம் எண்கு.

வெறியாட்டும் ஒலியைக் கேட்டு ஓநாய்கள் அஞ்சும் மலைநாட்டவனே! வலிமை பொருந்திய பெரியாரைத் துணையாகக் கொண்டவர்மேல், வலிமையற்ற சிறியவர்கள், தம்முடைய அறியாமையே பற்றுக் கோடாகப் பகைமை கொண்டு நடக்கவேண்டா. அச்செயல், தீய நாய் காட்டில் புகுந்தால், அங்கு வாழும் கரடியை எழுப்புதலோடு ஒக்கும்.

சாவாதான் முன்கை வளையுந் தொடும்

உ௯௪. இகலின் வலியாரை எள்ளி எளியார்
இகலின் எதிர்நிற்றல் ஏதம்—அகலப்போய்
என்செய்தே யாயினும் உய்ந்தீக. சாவாதான்
முன்கை வளையுந் தொடும்.

எளியவர், போர்புரிதலில் வல்லவரை இகழ்ந்து, அவருக்கு எதிரே நின்று அவருடன் போரிடுதல் துன்பமாகும். ஆதலின், எத்தகைய சூழ்ச்சியைச் செய்தேயாயினும் தூரத்தே சென்று உயிர்பிழைக்க. அவ்வாறு உயிர் பிழைத்தவன் வலிமை பெற்றபோது, பகைவரை வென்று தன் முன்கையில் அணியும் (கடகத்தையும்) வீரவளையலையும் அணியப் பெறுவான்.

நன்றொடு வந்ததொன் று அன்று

உ௯௫. வென்றடு கிற்பாரை வெப்பித் தவர்காய்வ(து)
ஒன்றொடு நின்று சிறியார் பலசெய்தல்,
குன்றொடு தேன்காலம் வெற்ப ! அதுபெரிதும்
நன்றொடு வந்ததொன் றன்று.

குன்றுகளோடு தேன் பொதிகளும் தம்முள் கலந்து நெருங்கிய மலையையுடையவனே! வென்று தம்மைக் கொல்லவல்லவரின் மனத்தைக் கொதிக்கச் செய்து, அவர் சினம் கொள்ளுவதற்குரிய செயலோடு நின்று, எளியவர் பல குற்றங்களைச் செய்தலானது, தனக்கு மிகவும் நன்மையோடு பொருந்திய செயலன்று.

பலிப்புறத் துண்பார் உணு

உ௬௬. உரைத்தவர் நாவோ பருந்தெறியா தென்று
சிலைத்தெழுந்து செம்மாப் பவரே—மலைத்தால்
இழைத்த திகவா தவரைக் கனற்றிப்
பலிப்புறத் துண்பார் உணு,

சொல்லத் தகாதனவற்றைச் சொன்னவர் நாவினைச் செத்தபிறகு பருந்தும் உட்கொள்ளா தென்று (தமக்கு அழிவில்லை யென்று) எண்ணி, எல்லாருடனும் சினந்து செருக்குற்று இருப்பவர்கள், ஒருவர் தம்மோடு பகைமை கொண்டால், அப்பகைவரைத் தாம் செய்ய நினைத்ததைத் தவறாது முடிக்க வல்லமையுடையவரைச் சினம் கொள்ளச் செய்து (பகைமையால் தாம் இறந்து போய்) பலிபீடத்தின் (நடுகல்லின்) பக்கத்தில் வைத்த உணவினை உண்பவராவர்.

பழம்பகை நட்பாதல் இல்

உ௬௭. தழங்குகுரல் வானத்துத் தண்பெயல் பெற்றால்
கிழங்குடைய வெல்லாம் முளைக்குமோ ராற்றல்
விழைந்தவரை வேர்சுற்றக் கொண்டொழுகல் வேண்
பழம்பகை நட்பாதல் இல். [டா,

முழங்கும் ஒலியையுடைய மேகத்தினிடத்திருந்து குளிர்ந்த மழையைப் பெற்றால், கிழங்கினையுடைய புல் முதலியன வெல்லாம் ஒருவகையால் முளைக்கும், பழமையான பகைவர் நட்பினராதல் இலர். ஆகையால், அப்பகைவரை விரும்பி அவர்களை அடியோடு நட்பினராகக் கொண்டு பழகுதல் வேண்டா.

அள்ளில்லத் துண்ட தனிசு

உகூஅ. வெள்ளம் பகையெனினும் வேறிடத்தார் செய்வதென் ?
கள்ளம் உடைத்தாகிச் சார்ந்த கழிநட்புப்
புள்ளொலிப் பொய்கைப் புனலூர ! அஃதன்றே
அள்ளில்லத் துண்ட தனிசு.

பறவைகளின் ஆரவாரம் நிறைந்த பொய்கைகள் சூழ்ந்த நீர்நாடனே ! தமக்கு இடையிட்ட (காடுமலை கடந்த) நாட்டிலுள்ள பகைவர் மிகப் பலராயினும் அவர்கள் வந்து செய்யும் துன்பம் யாது ? யாதுமில்லை. மனத்துள் வஞ்சனை யுடையவராகித் தம்மைச் சார்ந்த உட்பகைவரது மிக்க நட்பானது, ஒரே வீட்டிலுள்ளவரிடம் கொண்ட கடன் போன்றதாகும். [அள் இல்லத்து—ஒரே வீட்டினுள் ; தனிசு—கடன்]

மைம்மைப்பின் நன்று குருடு

உகூகூ. இம்மைப் பழியும் மறுமைக்குப் பாவமும்
தம்மைப் பரியார் தமரா—யடைந்தாரின்
செம்மைப் பகைகொண்டு சேராதார் தீயரோ ?
மைம்மைப்பின் நன்று குருடு.

இம்மையில் தோன்றும் பழியையும், மறுமையில் தோன்றும் பாவத்தையும் தம்மிடத்தினின்றும் நீக்காதவராய், உட்பகை கொண்டு நட்பினராய் வாழ்வாரை விட, நேரே பகைமை பாராட்டி நம்மிடம் சேர்ந்து பழகாதவர் தீயவரோ ? தீயவரல்லர். பார்வை ஒளிமழுங்கிய கண்ணைக் காட்டிலும் பார்வை ஒளியற்ற கண்ணே நல்லது.

அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு

௩00. பொருந்தா தவரைப் பொருதட்ட கண்ணும்
இருந்தமையா ராகி இறப்ப வெகுடல்,
விரிந்தருவி வீழ்தரும் வெற்ப ! அதுவே
அரிந்தரிகால் நீர்ப்படுக்கு மாறு.

அருவிகள் பரந்து வீழும் மலைநாடனே! பகைவரைப் போர் புரிந்து வெற்றியடைந்தும், அமைதியாய் இராமல், அவர்கள் இறக்குமாறு சினங்கொள்ளுதலானது, முன்னே

நெற்கதிரை அரிந்து விட்டதாளை, மேலும் உழுது நீரிலே அழுகப் புதைக்கும் தன்மை போன்றதாகும்.

வெண்பாட்டம் வெள்ளந் தரும்

௲௦௧. வன்பாட் டவர்பகை கொள்ளினும் மேலாயார்
புன்பாட் டவர்பகை கோடல் பயமின்றே.
கண்பாட்ட பூங்கழிக் கானலந் தண்சேர்ப்ப !
வெண்பாட்டம் வெள்ளந் தரும்,

கண்களின் தன்மையாய் உள்ள அழகிய குவளை மலர்கள் நிறைந்த சோலைகளையுடைய நெய்தல் நிலத்தலைவனே ! (பருவமழை அல்லாமலே) வேனில் காலத்து வெண்மழையும் வெள்ளத்தைத் தரும். ஆதலால், மேலானவர் வலியவரோடு பகைமை கொண்டாலும் எளியவரோடு பகைமை கொள்ளுதலால் யாதொரு பயனும் இல்லை.

29 பகையறுக்கும் திறம்

உருவு திருவூட்டு மாறு

௲௦௨, வாட்டிற லானை வளைத்தார்கள் அஞ்ஞான்று
வீட்டிய சென்றார் விளங்கொளி—காட்டப்
பொருவறு தன்மைகண் டஃதொழிந்தார். அஃதால்
உருவு திருவூட்டு மாறு.

முன்னொரு காலத்தில், 'நாந்தகம்' என்னும் வாளினையும் ஆற்றலையும் உடைய திருமாலைக் கொல்வதற்காகச் சென்று கடலுள் புகுந்து வளைத்த மது, கைடவன் என்னும் இருவர், திருமால் தன்திருமேனி விளங்குமாறு ஒளியைக் காட்டவே, அந்த இணையில்லாத வடிவின் தன்மையைக் கண்ணுற்று, தாம் மேற்கொண்ட பகைமையைத் தவிர்த்தனர். அஃது அழகிய தன் வடிவே செல்வத்தை ஊட்டும் வழியாகும்.

வலியலாந் தாக்கு வலிது

௲௦௩. வலியாரைக் கண்டக்கால் வாய்வாளா ராகி
மெலியாரை மீதூரும் மேன்மை யுடைமை,
புலிகலாங் கொள்யானைப் பூங்குன்ற நாட !
வலியலாந்தா யக்கு வலிது.

புலியொடு பகைமை கொள்ளும் யானையையுடைய அழகிய குன்றுகளையுடைய நாடனே! தம்மைக் காட்டிலும் வலியவரைக் கண்டால், நாவடக்கம் உள்ளவராகி, தம்மைக் காட்டிலும் மெலியவரைக் கண்டால் அடர்த்துச் சொல்லும் மேம்பாடுடைமை, வலிமையற்ற காலத்தில் வலிமை கொண்டதைப் போன்றதாகும்.

பன்மையின் பாடுடையது இல்

௩௦௪. ஒன்னார் அடநின்ற போழ்தின் ஒருமகன்
தன்னை எனைத்தும் வியவற்க.— துன்னினார்
நன்மை யிலராய் விடினும், நனிபலராம்
பன்மையிற் பாடுடைய தில்.

தன்னோடு பொருந்தாத பகைவர் போர் செய்யத் தொடங்கிய பொழுதில், ஒப்பற்ற ஒருவன் வீரத்தால் சிறந்தவன் ஆயினும், தன்னைத்தானே எள்ளளவும் வியந்து போற்றாதிருக்க. தன்மேல் போர் செய்ய நெருங்கியவர் வீரத்தால் உயர்ந்தவர் அல்லாதவராயினும், அவர் மிகப் பலராய் இருத்தலைக் காட்டிலும் சிறப்புடையது வேறில்லை. (எனவே, தான் ஆற்றலுடையவராயினும் பலரைத் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும்.)

போகாதே நாய்பின்ன தாகத் தகர்

௩௦௫. தன்னலி கிற்பான் தலைவரின் தானவற்குப்
பின்னலி வானைப் பெறல்வேண்டும்.—என்னதூஉம்
வாய்முன்ன தாக வலிப்பினும் போகாதே
நாய்பின்ன தாகத் தகர்.

ஆட்டினது வாய், முன்னே இருக்குமாறு கட்டியிழுத்தாலும், அதன் பின்னே நாய் தொடர்ந்துவந்தால், எவ்வளவு முயன்று இழுத்தாலும் ஆடு முன்னே செல்லாமல் நிலைத்து நிற்கும் ஆகையால், தன்னைத் துன்பப்படுத்த வல்லவன் தன் மேல் படையெடுத்து வருவானாயின், அப் பகைவனுக்குப் பின்னே நின்று துன்பப்படுத்துகின்றவனைத் தனக்குத் துணையாகக் கொள்ளவேண்டும்.

இடைநாயிற் கென்பிடு மாறு

௩௦௬. யானுமற் றிவ்விருந்த எம்முனும் ஆயக்கால்
வீரஞ் செயக்கிடந்த தில்லென்று கூடப்
படைமாறு கொள்ளப் பகைதூண்ட லஃதே
இடைநாயிற் கென்பிடு மாறு.

'யானும் இவ்விடத்திருந்த என் தமையனும் ஒன்று சேர்ந்து ஒருசெயலினைச் செய்தால், பகைவரின் வீரத்தால் விளைவது ஒன்றுமில்லை'யென்று சொல்லி, பகைவருக்குத் துணையாயவரும், தம்மோடு சேர்ந்து தமக்குப் போரில் துணையாக நின்று, பகைகொள்ளும் வகையில் பகைமையைத் தூண்டுதலானது, இடையருடைய நாய்க்குத் திருடர் எலும்பினை இடுதல் போன்றதாகும்.

சிறுகுரங்கின் கையால் துழா

௩௦௭. இயற்பகை வெல்குறுவான் ஏமாப்ப முன்னே
அயற்பகை தூண்டி விடுத்தோர்—நயத்தால்
கறுவழங்கிக் கைக்கெளிதாய்ச் செய்க. அதுவே
சிறுகுரங்கின் கையாற் றுழா.

தனக்கு இயல்பான பழம்பகையை வெல்லக் கருதுபவன், முற்படத் தனக்குக் காவலாக அமையுமாறு, தன் பகைவனுக்கு வேறொரு பகைவனை வளர்த்துவிடுக. ஒருவழியால் அவனைச் சினம் கொள்ளச் செய்து, தன்கைக்கு எளிதாகத் தன் பகைவனை நெருக்குக. அச்செயலானது, பெரிய குரங்கு, குட்டிக் குரங்கின் கையாலே வேகின்ற உணவைத் துழாவிய செயலோடு அமையும்.

ஆற்றுவான் நூற்றுவரைக் கொன்று விடும்

௩௦௮. மாற்றத்தை மாற்றம் உடைத்தலான், மற்றவர்க்கு
ஆற்றும் பகையால் அவர்க்களைய வேண்டுமே;
வேற்றுமை யார்க்குமுண் டாகலான். ஆற்றுவான்
நூற்றுவரைக் கொன்று விடும்.

மன வேறுபாடு எத்தகையவர்க்கும் உண்டு. ஆகவே, பகையைப் பகை அழித்தலால், தம்பகைவர்க்கு அவ்வாறு துன்பம் செய்யும் பகைவரால், தம் பகைவரை விலக்க

வேண்டும். அவ்வாறு செய்ய வல்லவன், பல பகைவரை அழித்து விடுவான்.

முள்ளினால் முட்களையு மாறு

௩0௯. தெள்ளி யுணரும் திறனுடையார் தம்பகைக்(கு)
உள்வாழ் பகையைப் பெறுதல் உறுதியே
கள்ளினால் கள்ளறுத்தல் காண்டும். அதுவன்றோ
முள்ளினால் முட்களையு மாறு.

தெளிவாக ஆராய்ந்தறியும் ஆற்றலுடையார், தம் பகைவருக்குள்ளே வாழும் உட்பகைவரைத் தமக்குத் துணையாகப் பெறுதல், தமக்கு நன்மைதருவதாகும். முன்னர்க் குடித்த கள்ளின் போதையைப் பின்னர்க் குடிக்கும் மற்றொரு வகைக் கள்ளினால் நீக்குதலை உலகில் காண்கிறோம். உட்பகைவரைத் துணையாகப் பெறுதலானது, முள்ளினால் முள்ளை எடுக்கும் முறைமையாகும்.

ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு

௩௧0. நலிந்தொருவர் நாளும் அடுபாக்குப் புக்கால்
மெலிந்தொருவர் வீழாமை கண்டு—மலிந்தடைதல்
பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்!
ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு.

மலர்கள் என்று தவறாகக் கருதிய வண்டுகள், பக்கத்திலே வந்து வட்டமிடும் கண்களையுடையவளே! ஒருவர், ஒருவனை நாள்தோறும் துன்பப்படுத்தி அழிக்கத் தொடங்கினால், அவன் தளர்ந்து அழியாமையைக் கண்டு, பின்னர் அவனிடம் அதிக மாகச் சென்று நட்பாக அடைதலானது, முன்னர் ஒருவனை எய்த அம்பு குறிதவறுவதால், எய்யப்பட்டவனையே பின்னர், தனக்குக் காவலாகக் கொள்வதனோடு அமையும்.

ஓடியெறியத் தீரா பகை

௩௧௧. மறையா தினிதுரைத்தல், மாண்பொரு ளீதல்,
அறையான் அகப்படுத்துக் கோடல்,—முறையால்
நடுவணாச் சென்றவரை நன்கெறிதல் அல்லால்,
ஓடியெறியத் தீரா பகை,

எண்ணியதை ஒளிக்காமல் இன்சொல் பேசுதல், மாண்புடைய மிக்க பொருளைக் கொடுத்தல், வஞ்சனையால் பகைவரின் நண்பரைத் தமக்கு நட்பினராக்கிக் கொள்ளுதல், முறையாக நடுவுநிலைமையிற் சென்று பகைவரை மிகவும் எறிதல் ஆகிய இந்நான்கு முறையால் அல்லாமல், இடையர் மரத்தை வெட்டி ஒடியெறிந்து வைப்பது போலப் பகை கொண்டால், பகை தீராது. (இடையர் மரத்தை முழுமையாக வெட்டாமல் சாய்த்தலால், அவை ஓரிடம் பசுமையாயும் மற்றோரிடம் உலர்ந்தும் காணப்படும்.)

30. படை வீரர்

யாப்பினுள் அட்டிய நீர்

௩௪௨. நூக்கி அவர்வெலினும் தாம்வெலினும் வெஞ்சமத்துள்
தாக்கி எதிர்ப்படுவர் தக்கவர். அஃதன்றிக்
காப்பின் அகத்திருந்து காய்வார் மிகவுரைத்தல்
யாப்பினுள் அட்டிய நீர்.

கொடிய போர்க்களத்துள் பகைவரோ தாமோ வென்றாலும், அடர்த்துத்தள்ளி எதிர்த்துப் போர் செய்பவரே வீரத்திற்குத் தகுதியுடையவராவர். அத்தன்மை இல்லாமல், அரணின் உள்ளே இருந்து கொண்டு மிகவும் வீரம் பேசுதலானது, (பகைப்பயிர் வளர) வயலினுள்விட்ட நீரை ஒக்கும்.

உண்ணா இரண்டேறு ஒருதுறையுள் நீர்

௩௪௩. உற்று லிறைவற் குடம்பு கொடுக்கிற்பான்
மற்றவற் கொன்னாரோ டொன்றுமோ ? — தெற்ற
முரண்கொண்டு மாறாய உண்ணுமோ ? உண்ணா
இரண்டே ருருதுறையுள் நீர்.

தெளிவாகத் தம்முள் பகைமை கொண்டு மாறுபட்ட இரண்டு எருதுகள் ஒரு நீர்த்துறையில் தண்ணீர் பருகுமோ? பருகா. அதுபோல, தன் அரசனுக்குத் துன்பம் ஏற்பட்டால், உடம்பினை அவனுக்காக அழித்துக் கொள்ள வல்லவன், அவ்வரசனுக்குப் பகையரசனோடு சேர்ந்து கொள்வானோ? சேர்ந்து கொள்ளான்.

வாங்கும் எருதாங் கெழா அமைச் சாக்கா டெழல்

௩௧௪. ஆற்ற வினைசெய்தார் நிற்பப் பலவுரைத்(து)
ஆற்றுதார் வேந்தனை நோவது சேற்றுள்
வழாஅமைக் காத்தோம்பி வாங்கும் எருதாங்(கு)
எழாஅமைச் சாக்கா டெழல்.

ஆற்றலுடன் போர்புரிந்தவர் நொந்து கொள்ளாமல் அமைதியாய் இருக்கும்போது. போர்க்களத்தில் புகுந்து திறமுடன் போர் செய்யாதவர், அரசன் " தனக்கு ஒரு சிறப்பும் செய்யவில்லையென்று " பலவாறு கூறி வருத்தப்படுதல், சேற்றில் அழுந்தாமல் காத்து நெட்டியிழுக்கக் கூடிய எருது, புடைபெயர்ந்து செல்லாமல் சாதலைப் போன்றதாகும்.

ஊர்மேற்றதாம் அமணர்க்கு ஓடு

௩௧௫. தாரேற்ற நீண்மார்பின் தம்மிறைவன் நோக்கியக்கால்
போரேற்று மென்பார் பொதுவாக்கல் வேண்டுமோ ?
யார்மேற்றுக் கொள்ளினும் கொண்டீக. காணுங்கால்
ஊர்மேற்ற தாமமணர்க் கோடு.

ஆராய்ந்தால், காட்டில் தவம் செய்யும் சமணர்களுக்கும் பிச்சையெடுத்துண்ணும் ஓட்டால் பெறும்பயன், பலர் வாழும் ஊரவரின் மேலதாகும். மாலை அணிந்த அகன்ற மார்பையுடைய அரசன், 'போருக்கு எழுக' என்ற குறிப்பால் தம் வீரரை நோக்கியபோது, போரை ஏற்றுப் போர்புரிய வேண்டியவர், அரசன் " தன்னை நோக்கிக் கூறாமல் பொதுப் படக் கூறினான் " என்று கருத வேண்டா. யாரை நோக்கிக் கூறினாலும் தம்மை நோக்கிக் கூறியதாகவே கொண்டு செயலாற்றுக.

சோரப் பொதியாத வாறு

௩௧௬. செம்மாந்து செல்லும் செறுநரை அட்டவர்
தம்மேல் புகழ்பிறர் பாராட்டத்—தம்மேற்றும்
வீரஞ்சொல் லாமையே வீழ்க. களிப்பினும்
சோரப் பொதியாத வாறு.

செருக்குற்று நிமிர்ந்து செல்லும் பகைவரை வென்று அழித்தவரைப், புகழ்ந்து மற்றவர் பாராட்டும்போது தம்

மிடத்துள்ள வீரப்பண்பைத் தாம் சொல்லாதிருக்க. அவ்வாறு சொல்லாதிருத்தல் கள்ளுண்டு களித்தவனாயினும் தம் பொருளை விழாதவாறு திணிப்பதனோடு பொருந்தும்.

நரிக்கூக் கடற்கெய்தா வாறு

௩௬௭. உரைத்தாரை மீதூரா மீக்கூற்றம், பல்லி
நெரித்த சினைபோலும் நீளிரும் புன்னைப்
பொரிப்பூ இதழுறைக்கும் பொங்குநீர்ச் சேர்ப்ப !
நரிக்கூக் கடற்கெய்தா வாறு.

பல்லியின் நெரிக்கப்பட்ட முட்டையைப் போன்று மலர்ந்த, நீண்ட பெரிய புன்னையின் பொரிநிறம் போன்ற மலர்களின் இதழ்களைப் பரப்பும் மிக்க நீரினையுடைய நெய்தல் நிலத்தலைவனே ! தம்மை அவமதித்துப் பேசியவரைச் செயலால் அடக்காமல், வாய்மொழியால் மேம்பட்டுப் பேசும் பேச்சு, நரியின் கூப்பாடு (ஊளை ஒலி) கடலின் ஓசையை அடக்க முடியாத தன்மையைப் போன்றதாகும்.

கல்லொடு கையெறியுமாறு

௩௬௮. அமர்நின்ற போழ்தின்கண் ஆற்றுவாரேனும்,
நிகரின்றி மேல்விடுதல் ஏதம்—நிகரின்றி
வில்லொடுநே ரொத்த புருவத்தாய் ! அஃதன்றே
கல்லொடு கையெறியு மாறு.

வில்லினொடு நேர் ஒப்புமையுடைய புருவத்தினையுடையவளே ! போர் அடங்கிய அமைதிக் காலத்தில், இணையில்லாமல் பகைவர்மேல் வீரம் காட்டக் கூடியவரானாலும் போர் நிகழின், தாம் பகைவர்க்கு இணையில்லாமல் பகைவர்மேல் போர் தொடுத்தல் தமக்குத் துன்பமாகும். அச்செயல், கல்லுடனே பகைத்துத் தன்கையை மோதுவது போன்றதாகும்.

திரை அவித்து ஆடார் கடல்

௩௬௯. வரைபுரை வேழத்த வன்பகையென் றஞ்சா
உரையுடை மன்னருள் புக்காங் கவையுள்
நிரையுரைத்துப் போகாதொன் றுற்றத் துணிக
திரையவித் தாடார் கடல்.

அலையை அடங்கச் செய்த பின்னர் கடலில் நீராடுவோம் என்று காத்திருப்பவர் எவரும் இலர். எனவே, புகழுடைய அரசர் நடுவே புகுந்து, அங்குள்ள அரசவையுள், 'பகைவரை வெல்வோம்' என்று முறையாக வீரம் பேசிவிட்டுப் போர்க் களத்துள் புகாமல், 'அவ்வலிய பகைவன் மலை போன்ற யானைப் படையையுடையவன், ஆதலால், இப்போது வெல்லுதல் இயலாது'. என்று அஞ்சி விலகாமல், அவையுள் கூறிய ஒன்றனைச் செய்யத் துணிவாயாக.

நாவிதன்வாள் சேப்பிலைக்குக் கூர்த்து விடல்

௩௨௦. காத்தாற்று கிற்பாரைக் கண்டால் எதிருரையார்
பார்த்தாற்ரு தாரைப் பரியாது மீதூர்தல்,
யாத்ததே சில்லார் படையாண்மை, நாவிதன்வாள்
சேப்பிலைக்குக் கூர்த்து விடல்.

போரில் தம்மைக் காத்துக் கொள்ளும் வலிமையுடைய வரைக் காணப்பெற்ருல், மாறுபட்டுப் பேசாதிருந்து, தம்மைக் காத்துக்கொள்ளும் வலிமை இல்லாத எளியவரைக் காணப்பெற்ருல், அவர்களிடம் இரக்கம் கொள்ளாது போர்புரிதல், தமக்குப் பொருந்திய புகழ் இல்லாதார் செய்யும் படையாண்மையாகும். இச்செயல் அம்பட்டன் கத்தி சேப்பிலையைக் கொய்யக் கூர்மையுடையதனேடு ஒக்கும்.

வெரூஉம்புள் இருளின் இருந்தும் வெளி

௩௨௧. இஞ்சி அடைத்துவைத் தேமாந் திருப்பினும்
அஞ்சி அகப்படுவார் ஆற்ருதார். — அஞ்சி
இருள்புக் கிருப்பினும் மெய்யே வெரூஉம்புள்
இருளி னிருந்தும் வெளி.

கோட்டான் இரவில், இருண்ட இடத்தில் இருந்தாலும் அச்சங்கொண்டு வெளியில் (வெளிச்சமுள்ள பகற்பொழுதில்) இருப்பதைப் போல, உண்மையாகவே காக்கைக்கு அஞ்சும். அதுபோல, மதிலை அடைத்து வைத்துக் காவலுடையவராய் இருந்தாலும், பகைவரை எதிர்க்கும் வலிமை இல்லாத எளியவர், வெளியில் இருந்தவரைப்போல் அஞ்சிப் பகைவர் கையில் அகப்படுவர்.

கருக்கினுல் கூறைகொள் வார்

கூஉஉ. உருத்தெழு ஞாட்பினுள் ஒன்ஞர் தொலையச்
செருக்கினுல் செய்கல்லார் செய்வாரே போலத்
தருக்கினுல் தம்மிறைவன் கூழுண் பவரே
கருக்கினுல் கூறைகொள் வார்.

வெகுண்டெழுந்த போரில் பகைவர் அழியுமாறு தம் படையாண்மையால் போர்செய்ய முடியாதவராகி, போர் செய்பவரைப் போன்று வீரம் பேசி, அவ்வீரப் பேச்சால் தம் மன்னவன் சோற்றை உண்ணும் போலி வீரரே, தம் தோற்றப் பொலிவால் புத்தாடைகளைப் பரிசு பெறுபவ ரோடு ஒப்பர்.

மகன்மறையத் தாய்வாழு மாறு

கூஉங. அமர்விலங்கி ஆற்ற அறியவும் பட்டார்
எமர்மேலை இன்னரால் யார்க்குரைத்தும் என்று
தமர்மறையால் கூழுண்டு சேறல் அதுவே
மகன்மறையத் தாய்வாழு மாறு.

"போரில் பகைவரை நீக்கி, மிகவும் எல்லாராலும் அறிந்தவர், முன்ஞளில் எம்மரபில் வந்தவர் ஆவர். அவர்கள் போரில் இத்தகைய இயல்பினர். அத்தன்மையினை எல்லாருக்கும் சொல்லுவோம்". என்று மற்றவர்க்குச் சொல்லி, தம்மரபில் பிறந்தவரின் புகழால் உணவு பெற்று வாழ்தலானது, கற்பின் பெருமையில்லாத அன்னை, தன் மகனின் உறவால் கணவனுடன் வாழ்தலைப் போன்றதாகும்.

அறிவச்சம் ஆற்றப் பெரிது

கூஉச. உறுகண் பலவும் உணராமை கந்தாத்
தறுகண்மை யாகாதாம் பேதை தறுகண்
பொறிப்பட்ட வாறல்லால் பூணுதென் றெண்ணி
அறிவச்சம் ஆற்றப் பெரிது.

தன்னைத் துன்பப்படுத்தும் துன்பங்களின் காரணங்கள் பலவற்றையும் அறியும் அறிவு இல்லாமையே பற்றுக் கோடாக, அஞ்சாமை உடையவன் என்று சொல்லப்படாத பேதை, "அஞ்சாமை என்பது, நல்லறப்பயனுல் உண்டான

வழியல்லாது தம்மைப் பொருந்தாது," எனக் கருதி, அவ் வறிவினுல் வந்த அச்ச உணர்வு மிகப் பெரியதாகும்.

பூசை எலியில் வழிப்பெரு பால

௩உரு. தன்னின் வலியானைத் தானுடையான் அல்லாதான்
என்ன குறையன் இளையரால் ? மன்னும்
புலிகற் பெருந்திறல வாயினும் பூசை
எலியில் வழிப்பெரு பால்.

புலியைப் போன்ற நிலைத்த பெரும் வலிமையைப் பூனை கள் பெற்றிருந்தாலும், எலியால் துன்பப்படாத வீட்டில் பாலைப் பெறுதல் இல்லை. அதுபோல, தன்னைக் காட்டிலும் வலிமையுடைய மன்னனைப் பகைவனுகப் பெருதமன்னவன், தன் படை வீரர்களால் எந்தக் குறையை முடிக்கப் போகிருன் ?

படையின் படைத்தகைமை நன்று

௩உசு. கொடையும் ஒழுக்கமும் கோளுள் ளுணர்வும்
உடைய ரெனப்பட் டொழுகிப் பகைவர்
உடையமேற் செல்கிற்கும் ஊற்றம் இலாதார்
படையின் படைத்தகைமை நன்று.

"ஈகைப் பண்பும் செங்கோன்மையும் படைகுடி முதலிய வற்றின் கருத்தை அறியும் உணர்வும் உடையவர்." என்று சொல்லப்பட்டு அந்நெறியில் வாழ்ந்து, பகைவர் அழியுமாறு மேல்சென்று படையைச் செலுத்துவதற்கு வலிமை இல்லாத வர், படையுடன் வலியப் போர் செய்வதைக் காட்டிலும், தம் படையைப் பொலிவுடையதாக்கிச் காத்திருத்தலே நன்று.

வாழைக்காய் உப்புறைத்தல் இல்

௩உஎ. இருகயல் உண்கண் இளையவளை வேந்தன்
தருகென் றற் றன்னையரு நேரார்—செருவறைந்து
பாழித்தோள் வட்டித்தார் காண்பாம். இனிதல்லால்
வாழைக்காய் உப்புறைத்தல் இல்.

'இரண்டு கெண்டைகள் போன்று மையுண்ட கண்களை யுடை இளம்பருவத்தவளாகிய இவளைத் தனக்கு மணம் முடித்துத் தருக !' என்று தூது விட்டால், இவர் தமையன்

மாரும் கொடுப்பதற்கு உடன்படாமல், போருக்கு முரசு கொட்டி, வலிமையுள்ள தோள்களைத் தட்டினர். நாம் இதன் விளைவைக் காண்போம்! வாழைக்காய் இனிமையாய் இருப்பதல்லாமல் உவர்த்தல் இல்லை.

31. இல் வாழ்க்கை

வித்தின்றிச் சம்பிரதம் இல்

௩௨அ. நாணின்றி ஆகாது பெண்மை நயமிகு
ஊணின்றி ஆகா துயிர்வாழ்க்கை.—பேணுங்கால்
கைத்தின்றி ஆகா கருமங்கள் காரிகையாய்!
வித்தின்றிச் சம்பிரதம் இல்.

அழகுடையவளே! ஆராயுங்கால், பெண்மைப் பண்பு, நாணம் இல்லாமல் அமைதல் இல்லை. உயிர் வாழ்க்கை சத்து மிகுந்த உணவில்லாமல் அமைதல் இல்லை. நற்செயல்கள் கைப்பொருள்கள் இல்லாமல் அமைதல் இல்லை. அவை போன்றே, விதை இல்லாமல் விளையும் விளைவும் அமைதல் இல்லை.

பெரிதகழின் பாம்புகாண்பாரும் உடைத்து

௩௨௯. உரிதனில் தம்மோ டுழந்தமை கண்டு
பிரிவின்றிப் போற்றப் படுவார்—திரிவின்றித்
தாம்பெற் றதனால் உவவார். பெரிதகழின்
பாம்புகாண் பாரும் உடைத்து.

உரிமையால் தம்முடன் பிரிதல் இல்லாமல் பழகினமையைக் கண்டு காப்பாற்றப்படுவார். மனத்தில் மாறுபாடில்லாமல், தாம் பெற்ற பொருளினால் நிறைவடைந்து மகிழார். மேலும் விரும்புவர். இவர்கள், 'புற்றை மிகவும் தோண்டினால் பாம்பைக் காண்பவரையும் இவ்வுலகம் பெற்றிருக்கிறது'. என்பதனை உணர்தல் வேண்டும்.

உடுத்தாரை உண்டி வினவுவார் இல்

௩௩௰. அகத்தா லழிவு பெரிதாயக் கண்ணும்
புறத்தாற் பொலிவுறல் வேண்டும் எனைத்தும்
படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை
உண்டி வினவுவா ரில்.

படுப்பதற்கு இடம் இல்லாதவரிடத்திலும் உடுத்த உடையால் விளங்குகின்றவரை வறியவர் எனக்கருதி. 'உணவு உட்கொண்டீர்களா ?' என்று கேட்பவர் எவரும் இலர். ஆதலால், வீட்டினுள் வறுமை அதிகம் இருந்தாலும், எந்த வகையிலேனும் வெளித்தோற்றத்தால் பொலிவுடன் விளங்குதல் வேண்டும்.

நாளும் கடலுள் துலாம்பண்ணினார்

௩௩௧. சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாளே வந்த விருந்தோம்பிச் —செல்வத்
திடரின்றி ஏமாந் திருந்தாரே, நாளும்
கடலுள் துலாம்பண்ணி னார்.

தாம் சொல்லாமலேயே தாம் எண்ணிய செயலைத் தம் முகக் குறிப்பினால் உணர்ந்து. தம் இல்லம் நோக்கி வந்த விருந்தினரை உணவு முதலியவற்றால் போற்றும் குண நலனுடைய தம் மனைவியைப் பெற்றவர், செல்வத்தினால் எத்தகைய துன்பமும் இல்லாத காவலுடையவராவர். இவர் நாள்தோறும் இறைத்துக் கொள்வதற்காகக் கடலில் ஏற்றம் இட்டவரோடு ஒப்பர்.

அணங்காகும் தான் செய்த பாவை தனக்கு

௩௩௨. எந்நெறி யானும் இறைவன்றன் மக்களைச்
செந்நெறிமேல் நிற்பச் செயல்வேண்டும் — அந்நெறி
மான்சேர்ந்த நோக்கினாய் ! ஆங்க வணங்காகும்
தான்செய்த பாவை தனக்கு.

மானின் கண்ணைப் போன்ற பார்வையினை உடையவளே! தந்தை தன் குழந்தைகளை எல்லா வகையிலும் செம்மையான வழியில் முற்பட்டு விளங்குமாறு சான்றோனாக்க வேண்டும். தன்னால் செய்யப்பட்ட பதுமையே தனக்குத் தெய்வமாகும். தன் மக்களைச் செம்மையான நெறியில் நிலைக்கச் செய்தலும் அத்தகைய இயல்பினதாகும்.

தாயர்க்கு மக்களுள் பக்கமோ வேறு

௩௩௩. ஒக்கும் வகையான் உடன்பொரும் சூதின்கண்
பக்கத் தொருவன் ஒருவன்பாற் பட்டிருக்கும்.
மிக்க சிறப்பின ராயினும் தாயர்க்கு
மக்களுள் பக்கமோ வேறு.

தம்முள் ஒத்திருக்கும் சிலருடனே போட்டியிடும் சூதாட்டத்தில், பக்கத்தில் இருந்த ஒருவன், ஒருவனிடத்தில் அன்பைச் செலுத்திப் போட்டியிடும் முறையைக் கற்பிப்பான். அதுபோல, தம் மக்கள் எல்லாரிடத்தும் ஒரே தன்மையான சிறந்த அன்புடையவராயினும், அன்னையர்க்குத் தம் மக்களுள் சிலரிடத்துக் கல்வியறிவு மேம்பாட்டால் அன்பு கொள்ளுவதில் வேறுபாடு இருக்கும்.

அறிதுயில் ஆர்க்கும் எழுப்பல் அரிது

௩௩௪. தொடித்தோள் மடவார் மருமந்தன் ஆகம்
மடுத்தவர் மார்பில் மகிழ்நன் மடுப்ப
நெறியல்ல சொல்லல்நீ பாண ! அறிதுயில்
ஆர்க்கும் எழுப்பல் அரிது.

தொடியணிந்த தோளினையுடைய பெண்களின் மார்பைத் தன் மார்புடன் அணைத்து, அப்பெண்களுடைய மார்பிலே, தலைவன் சேர, நிகழ்ந்த தொன்றை "இவ்வாறு ஒழுகுதல் முறைமை அன்று, என்று நீ கூறுதிருப்பாயாக. பாணனே!" பொய்த்துயில் கொள்வாரை எழுப்புதல் யாவர்க்கும் முடியாது. அதுபோல் நீ வாயில் (தூது) பெறுதல் இயலாது.

சால்பினைச் சாலபறுக்கு மாறு

௩௩௫. விழுமிழை நல்லார் வெருள்பிணைபோல் நோக்கம்
கெழுமிய நாணை மறைக்கும்—தொழுநையுள்
மாலையுள் மாலை மயக்குறுத்தாள். அஃதால்
சால்பினைச் சால்பறுக்கு மாறு.

சிறந்த அணிகலன்களை அணிந்த மகளிரது அஞ்சிய பெண் மான் போன்ற பார்வைகள், ஆண்களிடம் பொருந்திய நாணத்தை அழிக்கும். யமுனை ஆற்றினிடத்தில், திருமாலையும்

மயக்கத்தின்கண்விழ, நப்பின்னை தன் அழகினுல் மயங்கச் செய்தாள். அச்செயல். மிகுதியை அதனினும் மிக்க தொன்றினுல் கெடுக்கும் முறைமையை ஒக்கும்.

நீர்மிகின் இல்லை சிறை

௩௩௬. தூய்மை மனத்தவர் தோழர் மனையகத்தும்
தாமே தமியர் புகல்வேண்டா,—தீமையான்
ஊர்மிகின் இல்லை கரியோ. ஒலித்துடன்
நீர்மிகின் இல்லை சிறை.

ஒருவன் தீமை செய்தான் என்று ஊரவரே மிகுத்துக் கூறின், அதனைத் தவிர்க்கத் தக்க வேறு சான்ருேர் இலர். தண்ணீர் ஆரவாரத்துடன் மிகுந்து வெள்ளமாஞல் அதனைக் கட்டுப் படுத்தத்தக்க அணையில்லை. ஆதலால், தூய உள்ளம் உள்ளவர்தம் நண்பரின் வீட்டினுள்ளும் தனியாகத் தாமே நுழைதல் வேண்டா.

நாய்வால் திருந்துதல் என்றுமோ இல்

௩௩௭. நிறையான் மிகுகல்லா நேரிழை யாரைச்
சிறையான் அகப்படுத்தல் ஆகா—அறையோ !
வருந்த வலிதினின் யாப்பினும், நாய்வால்
திருந்துதல் என்றுமோ இல்.

வருந்துமாறு நாயின் வாலை வலிமையுடன் நேராகக் கட்டி வைத்தாலும் அது நேராகத் திருந்துதல் எந்நாளிலும் இல்லை. அதுபோல. ஐம்பொறிகளையும் கட்டுப்படுத்தும் நிறைவினுல் மாண்பில்லாத நேரிய இழைத்த அணிகலன்களை அணிந்த மகளிரைத் தீய வழிகளில் விலக்கிக் காவலால் தன்வயப்படுத்துதல் இயலாது. இயலும் என்று கூறுகின்றவர்கள் இருந்தால் அவர்களை அறைகூவி அழைக்கின்றேன்.

குருவி குறங்கறுப்பச் சோருங் குடர்

௩௩௮. நல்கூர்ந் தவர்க்கு நனிபெரிய ராயினர்
செல்விருந் தாகிச் செலவேண்டா—ஒல்வ
திறந்தவர் செய்யும் வருத்தம், குருவி
குறங்கறுப்பச் சோறுங் குடர்.

மிக்க பெருஞ் செல்வமுடையவர், வறுமையுடைய எளியவர் இல்லங்களுக்கு விருந்தினராகச் செல்லவேண்டா. சென்ருல், அவ்வெளியவர் தம்மால் முடியும் நிலையைக் கடந்து விருந்தோம்புவர். அச் செயலால் ஏற்படும் வருத்தம், குருவியின் தொடையை அறுத்தபோதே, அதன் குடலும் சோருவது போன்றதாகும்.

எருமை எறிந்தொருவர் காயக்கு லோபிக்கும் ஆறு

௩௩௯. உடுக்கை மருந்துறையுள் உண்டியோ டின்ன
கொடுத்துக் குறைதீர்த்த லாற்றி—விடுத்தின்சொல்
ஈயாமை யென்ப, எருமை எறிந்தொருவர்
காயக்கு லோபிக்கும் ஆறு.

உடையும் மருந்தும் வாழ்விடமும் உணவும் ஆகிய இன்ன பிறவும் மற்றவர்க்குக் கொடுத்து, அவர்தம் வறுமையைப் போக்கி அனுப்பி வைத்து. இன்சொல் பேசாமையானது, உண்பதற்கு எருமையைக் கொன்றவர், அதனைச் சமைப்பதற்குரிய மணப்பொருள்களாகிய காயம் வாங்குவதற்கு லோபம் (சிக்கனம்) செய்வது போன்றதாகும்.

நுகத்துப் பகலாணி போன்று

௩௪0 தத்தமக்குக் கொண்ட குறியோ தவமல்ல,
செத்துக, சாந்து படுக்க,மனன்—ஒத்துச்
சகத்தனய் நின்றெழுகும் சால்பு தவமே,
நுகத்துப் பகலாணி போன்று.

தங்கள் தங்களுக்குச் சமயத்தார் மேற்கொண்ட வேறுபட்ட குறிகளையுடைய வேடங்கள் தவமாகா. தன்னை ஒருவன் வாளால் வெட்டினுலும் மகிழுமாறு, குளிர்ந்த சந்தனச் சாந்தைப் பூசினுலும், நுகத்தடியின் நடுவில் இருக்கும் பகலாணியைப் போன்று மனம் பொருந்தி அவ்விருவரிடமும் நடுவு நிலைமையில் நின்று ஒழுகும் அமைதியே தவமாகும்.

புலைப்பொருள் தங்கா வெளி

௩௪௧. உள்ள தொருவர் ஒருவர்கை வைத்தக்கால்
கொள்ளும் பொழுதே கொடுக்கதாம்—கொள்ளார் ;
நிலைப்பொருள் என்றதனை நீட்டித்தல் வேண்டா.
புலைப்பொருள் தங்கா வெளி.

தனக்குரிமையுள்ள ஒருபொருளை ஒருவர், மற்றொருவரிடம் அடைக்கலமாக வைத்தால், அப்பொருளை அடைக்கலமாக வைத்தவர் வேண்டும் பொழுதே. நீ எடுத்துக்கொள்ளாமல், அவரிடம் கொடுத்திடுக. தமக்கே நிலையான பொருள் என்று எண்ணிக் கொடுக்காமல் காலம் தாழ்த்த வேண்டா. புலால் நாற்றமுடைய பொருளை எப்படி மறைத்தாலும் அதன் மணம் வெளிப்பட்டு விடும்.

இல்லையே ஒன்றுக் குதவாத ஒன்று

௩சஉ. நன்றே ஒருவர்த் துணையுடைமை. பாப்பிடுக்கண்
நண்டேயும் பார்ப்பான்கண் தீர்த்தலான்,—விண்டோயும்
குன்றகல் நன்னாட ! கூறுங்கால் இல்லையே
ஒன்றுக் குதவாத ஒன்று.

வானளாவிய குன்றுகளையுடைய அகன்ற நல்ல நாடனே ! ஒருவர் மற்றொருவரைத் துணையாகக் கொள்வது நல்லது. ஒரு பார்ப்பானிடத்தில், அவன் அன்னை துணையாகக் கொடுத்த நண்டும், பாம்பினால் நிகழவிருந்த துன்பத்தைப் போக்குதலினால், ஆராயுமிடத்து ஒன்றற்கும் உதவாத ஒருபொருளும் இல்லை.

கடல்நீந்திக் கன்றடியுள் ஆழ்ந்து விடல்

௩சந விடலரிய துப்புடைய வேட்கையை நீக்கிப்
படர்வரிய நன்னெறிக்கண் நின்றார்—இடருடைத்தாய்ப்
பெற்ற விடக்கு நுகர்தல், கடனீந்திக்
கற்றடியு ளாழ்ந்து விடல்.

கைவிடுதற்கு அருமையான வலிய விருப்பத்தைப் போக்கி, ஒழுகுதற்கு அருமையான நன்னெறியாகிய துறவறத்தில் நின்றவர், ஊழ்வினையால், துன்பம் நேர்ந்த போது, தாம் மேற்கொண்ட துறவு ஒழுக்கத்திற்குக் குற்றம் உண்டாகுமாறு கிடைத்த ஊன் உணவை உண்டு பிழைத்தலானது, கடலை நீந்திக் கரையேறியவர் கன்றின் குளம்படி நீரினுள் ஆமிழ்ந்து விடுதலோடு ஒக்கும்.

தயிர்சிதைத்து மற்றொன்று அடல்

கூசச. செறலிற் கொலைபுரிந்து சேணுவப்பா ராகி
அறிவின் அருள்புரிந்து சொல்லார்—பிறிதின்
உயிர்செகுத் தூன்றுய்த் தொழுகுதல் ஓம்பார்,
தயிர்சிதைத்து மற்றொன்(று) அடல்.

சினங் கொண்டவரைப் போன்று கொலையைச் செய்து, தாம் மறுமையில் இன்பம் அடைய விரும்பித் தம் அறிவாற்றலால் மற்றவர்க்கு அருளிச் சொல்லாது, மற்றொன்றின் உயிரை மறுமை இன்பத்திற்குக் கொன்று, அதன் ஊனை உண்டு, நல்லவராய் வாழ்தலைப் போற்றுது வாழும் வாழ்க்கை, இயல்பாகவே உணவாகக் கூடிய தயிரை அழித்து மற்றொரு உணவாகச் சமைத்தலைப் போன்றதாகும்.

நீர்போயும் ஒன்றிரண்டாம் வாணிகம் இல.

கூசரு. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்றும் உறுதியே சூழ்க. எறிதிரை
சென்றுலாம் சேர்ப்ப ! அதுபோல நீர்போயும்
ஒன்றிரண்டாம் வாணிகம் இல்.

வீசும் அலைகள் சென்று உலவும் கடல்நாடனே ! ஒருவர் தமக்குச் செய்த ஓர் உதவியை மறவாதவர், நாழி அளவினதாக அரிசியையேனும் தருவார்க்கு, எக்காலத்தும் நன்மையையே நினைக்க. கடல் நடுவே சென்றும் ஒருபொருள் இரட்டிப்பான ஆதாயத்தைத் தரும் வாணிகம், அதைப் போன்று வேறு இல்லை.

யாரே நமநெய்யை நக்குபவர்

கூசகூ. தமனென் றிருநாழி ஈத்தவ னல்லால்
நமனென்று காயினும் தான்காயான் மன்னே
அவ்னிவ னென்றுரைத் தெள்ளிமற் றியாரே
நம நெய்யை நக்கு பவர்.

தன்னைச் சுற்றத்தவனென்று இருநாழிஅளவாயினும் உதவியவன் சினந்தாலும், சினப்பதல்லாமல், நம் உறவினன் என்றிகழ்ந்து உதவினவனை, 'அவனிவனென்று மிகவும்' இகழ்ந்து பேசி ஒருவன் சினத்தல் கூடாது. தெய்வத்தை முழுக்காட்டிய நெய்யை நக்குவார் யார்? எவருமிலர்.

தாமிருந்த கோடு குறைத்து விடல்

௩௪எ. நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல், கிளர்மணி
நீடுகல் வெற்ப ! நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்.

விளங்கும் மணிகள் பொருந்திய நீண்ட பாறைகளையுடைய குறிஞ்சி நிலத்தலைவனே ! இவர் நம்மவரென்று கருதி நன்கு ஆராய்ந்து மிகவும் காப்பாற்றியவருக்கு, பகைவருடன் சேர்ந்து துன்பஞ்செய்ய நினைத்தலானது, தாம் ஏறியிருந்த மரக்கிளையினை நினைவில்லாமல் வெட்டிவிடுவதனோடு ஒக்கும்.

உண்டஇல் தீயிடுமாறு

௩௪அ. பண்டின்ன ரென்று தமரையும் தம்மையும்
கொண்ட வகையால் குறைதீர நோக்கியக்கால்,
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பின், அஃதாலவ்
உண்டவில் தீயிடு மாறு.

'முற்காலத்தில் இவர்கள் இத்தகைய சிறப்பினை உடையர்' என்று தம் உறவினரையும் தம்மையும் ஏற்றுக் கொண்ட முறையாலேயே தம் வறுமை தீர தம்மைச் சிலர் ஆதரித்தால், ஆதரிக்கப் பட்டவர் அவ்வாறு ஆதரித்தவரின் பகைவரோடு சேர்ந்து புறங்கூறினால், அது, தாம் உண்ட அவ்வீட்டைத் தீயிட்டுக் கொளுத்துவதனோடு ஒக்கும்.

32. உறவினர்

உமிக்குற்றுக் கைவருந்து மாறு

௩௪௯. தமக்குற்ற தேயாகத் தம்மடைந்தார்க் குற்ற
தெமக்குற்ற தென்றுணரா விட்டக்கால் என்னும் ?
இமைத்தருவி பொன்வரன்றும் ஈர்ங்குன்ற நாட !
உமிக்குற்றுக் கைவருந்து மாறு

அருவி விளங்கிப் பொன்னைக் கொழிக்கும் குளிர்ந்த குன்றுகளையுடைய நாடனே ! தம்மை அடைந்தவர்க்கு வந்த துன்பம், தம்மை அடைந்ததாகவே கருதி, 'எமக்கு வந்து பொருந்தியது' என்று ஒருவர் கருதாமல் இருந்துவிடு

வாராணுல், அவரை அடைக்கலமாக அடைந்தவர்க்கு அதனுல் என்ன பயன் விளையும் ? உமியைக் குற்றுக் கைவருந் தும் நெறியோடு அமையும்.

எல்லாம் பொய் அட்டு ஊணே வாய்

௩௫௦. சேர்ந்தா ரொருவரைச் சேர்ந்தொழுகப் பட்டவர்
தீர்ந்தாராக் கொண்டு தெளியினும்,—தேர்ந்தவர்க்குச்
சொல்லாமை காணுக்கால் செல்லும்வாய் என்னுண்டாம்
எல்லாம்பொய் அட்டுணே வாய்.

தம்மை அடைந்தார் ஒருவரை, அவரால் அடைந்து ஒழுகப்பட்டவர் முடிந்த உறவினராகவே ஏற்றுக் கொண்டு ஒழுகிஞராயினும், ஆராய்ந்து அவரைவிட்டு விலகாத வறுமையைக் கண்டு போக்கவில்லையாணுல், அவர் செல்லும் நெறி வேறு யாது ? சமைத்துண்ணும் உணவினுக்கு இன்றி யமையாதன செய்தலே உண்மை. அல்லாத பிற செயல் எல்லாம் பொய்.

மனை மரமாய மருந்து

௩௫௧. அல்லல் ஒருவர்க் கடைந்தக்கால் மற்றவர்க்கு
நல்ல கிளைகள் எனப்படுவார்—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கும் அதுவே
மனைமர மாய மருந்து.

ஒருவருக்குத் துன்பம் நேர்ந்தால், அவருக்குச் சிறந்த உறவினர் என்று சொல்லப்படுகின்றவர், நல்ல செயல் முறைமையாலே அத்துன்பத்தைத் துடைப்பாராக. அவ்வாறு துன்பந் துடைத்தலானது, வீட்டில் வளரும் மருந்து மரம் பயன்படுதலைப் போன்றதாகும்.

பெய்யுமாம் பெய்யாதெனினும் மழை

௩௫௨. மெய்யா உணரிற் பிறர்பிறர்க்குச் செய்தென் ?
மையார் இருங்கூந்தல் பைந்தொடி ! எக்காலும்
செய்யார் எனினும் தமர்செய்வர். பெய்யுமாம்
பெய்யா தெனினு மழை.

கருமை நிறைந்த நீண்ட கூந்தலையும் பசியபொன்னுலான வளையல்களையும் உடையவளே! உண்மையாக ஆராய்ந்தால்,

பிறர் பிறர்க்குச் செய்யும் செயல் என்ன இருக்கிறது? பருவகாலத்தில் மழை பொழியவில்லை என்றாலும் பின்னர் பொழியும். அதுபோல, எப்பொழுதும் 'உதவியைச் செய்யார்' என்று எண்ணும்படி இருந்தாராயினும் உறவினரே தமக்கு உற்றநேரத்தில் ஒன்றைச் செய்வர்.

துன்னினார் அல்லார் பிறர்

௩௫௩. முன்னின்னார் ஆயினும் மூடும் இடர்வந்தால்
பின்னின்னா ராகிப் பிரியார் ஒருகுடியார்.
பொன்னாச் செயினும் புகாஅர், புனலூர!
துன்னினார் அல்லார் பிறர்.

நீர்வளம் மிக்க நாடனே! ஒருகுடியில் பிறந்தவர், முன்னர் ஒருகாரணத்தால் இனியர் அல்லாதவராயினும், தம்மை ஆழ்த்தும் துன்பம் நேர்ந்தால், பின்னர் இனியவர் அல்லாதவராகிப் பிரிந்திராமல் பொருந்துவார். ஒரு குடியில் பிறவாதவர் உறவினர் அல்லர். ஆதலால், பொன்னாகப் போற்றுதல் செய்தாலும் தமக்கு ஒரு துன்பம் நேர்ந்தால் அதனை நீக்க முற்படார்.

தாய் மிதித்த ஆகாமுடம்

௩௫௪. உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பதே நன்றே—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!
தாய்மிதித்த ஆகா முடம்.

விளைபொருள்கள் மிகுதியாக விளையும் கழனியில், மலர்களை மிதித்துப் பறவைகள் தம்முள் கூடி மகிழும் குளங்கள் நிறைந்த நீர்நாடனே! தாய் மிதித்தன நொண்டியாதல் இல்லை. ஆதலால், மிகவும் மனம் வருந்துமாறு பேசினாலும், தமக்கு நன்மை தருவனவற்றைத் தம் உறவினரிடம் கேட்டு அறிதலே நன்றாம்.

துன்னூசி போம்வழி போகும் இழை

௩௫௫. தன்னை மதித்துத் தமரென்று கொண்டக்கால்
என்ன படினும் அவர்செய்வ செய்வதே
இன்னொலி வெற்ப! இடரென்னை? துன்னூசி
போம்வழி போகும் இழை.

இனிய ஓசையையுடைய குறிஞ்சி நிலத்தலைவனே! தையலூசி செல்கின்ற வழியிலேயே இழையும் செல்லும். அதுபோல ஒருவர், தன்னை மதித்து உறவினனாக ஏற்றுக் கொண்டால், எத்தகைய துன்பம் வந்தாலும் உறவினர் செய்யும் நன்மையைத் தாமும் செய்தலே தகுதியுடைய தாகும். அதனால் வரும் துன்பம் என்ன? ஒன்றும் இல்லை.

திருவொடும் இன்னாது துச்சு

௩௫௬. கருவினுட் கொண்டு கலந்தாரும் தம்முள்
ஒருவழி நீடும் உறைதலோ துன்பம்.
பொருகடல் தண்சேர்ப்ப ? பூந்தா மரைமேல்
திருவொடும் இன்னாது துச்சு

அலைகள் மோதும்படியான குளிர்ந்த கடற்கரைத் தலைவனே! கடலின் அழகிய தாமரை மலர்மேல் வாழும் திருமகளோடாயினும், நெடுநாள் உடன் வாழ்தல் துன்பம் தருவதாகும். ஆதலால், தாய் வயிற்றினுள் கருவாகத்தங்கித் தொடங்கிக் கலந்தவரும், ஓரிடத்தில் தம்முள் நெடுநாள் சேர்ந்து வாழ்தல் துன்பம் தருவதாகும்
(துச்சு—நெடுநாள் சேர்ந்து வாழ்தல்)

காதலோடு ஆடார் கவறு

௩௫௭. பாரதத் துள்ளும் பணையம்தம் தாயமா
ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ(டு)
ஏதில ராகி இடைவிண்டார். ஆதலால்
காதலோ டாடார் கவறு.

பாரதக் கதையினுள்ளும் தம் தாயப் பொருளையே பந்தயப் பொருளாக்கி, கௌரவர் நூற்றுவரும் சூது போரைச் செய்து, பாண்டவர் ஐவருக்கும் பகைவராகி வேறு பட்டு விலகினர். ஆதலால், அன்புடையவரோடும் அறிவுடையோர் சூதாடார்.

33. அறஞ்செய்தல்

சுமையொடு மேல்வைப்பா மாறு

௩௫௮. சிறந்த நுகர்ந்தொழுகும் செல்வ முடையார்
அறஞ்செய் தருளுடைய ராதல்—பிறங்கல்
அமையொடு வேய்கலாம் வெற்ப ! அதுவே
சுமையொடு மேல்வைப்பா மாறு.

மலையின் மீது மூங்கில்களோடு மூங்கில்கள் உராய்ந்து ஒலிஎழுப்பி நிற்கும் குறிஞ்சி நிலத்தலைவனே! புகழுக் குரிய செயல்களைச் செய்து சிறப்புடையவராய்த் தாம் விரும்பும் இன்பத்தை அனுபவிக்கும் பொருட்செல்வம் உடையவர், அறத்தைச் செய்து எல்லாரிடத்தும் அருளுடையவராய் விளங்குதலானது, ஒருவன் பொன்சுமையின் மேல் சுமையாக மாணிக்கச் சுமையையும் வைத்துச் செல்லுதலைப் போன்ற தாகும்.

எய்ப்பினில் வைப்பென்பது

௩௫௯. **வைத்ததனை வைபென் றுணரற்க. தாமதனைத்
துய்த்து வழங்கி இருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி அறஞ்செய்யின், அஃதன்றே
எய்ப்பினில் வைப்பென் பது.**

தான் தேடிச் சேர்த்து வைத்த பொருளைத் தமக்கு உதவும் பொருளென்று கருதவேண்டா. அதனைத் தாமும் அனுபவித்து மற்றவருக்கும் வழங்கி இருமைக்கும் அழகுண் டாகுமாறு ஆராய்ந்து அறஞ்செய்தால், அவ்வறப்பயன், தாம் தளர்ச்சியடைந்த காலத்தில் தமக்குதவும் பொருளாகும்.

பைங்கரும்பு மென்றிருந்து பாகு செயல்

௩௬௦. **மல்லற் பெருஞ்செல்வம் மாண்டவர் பெற்றக்கால்
செல்வுழியும் ஏமாப்பச் செய்வதாம்—மெல்லியல்
சென்றெசிந் தொல்கு நுசுப்பினாய்! பைங்கரும்பு
மென்றிருந்து பாகு செயல்.**

மென்மையான இயல்பினையும், தேய்ந்து துவண்ட சிறிய இடையினையும் உடையவளே! மாண்புடையவர் வளமான பெருஞ்செல்வத்தை இம்மையில் பெற்றபோது, மறுமை யிலும் தமக்குத் துணையாக அமையுமாறு அறத்தைச் செய்த லானது, பசுமையான கரும்பைச் சுவைத்ததோடு நில்லாமல் மேலும் பயன்தரும் பாகினைச் செய்தலோடு அமையும்.

வேள்வாய் கவட்டை நெறி

௩௬௧. **ஈனுலகத் தாயின் இசைபெறூஉம் அஃதிறந்
தேனுலகத் தாயின் இனிததூஉம் :—தாளொருவன்
நாள்வாயும் நல்லறஞ் செய்வாற் கிரண்டுலகும்
வேள்வாய் கவட்டை நெறி.**

நாளும் நல்லறத்தைச் செய்யும் ஒருவன், இவ்வுலகில் புகழை அடைவான். அப்புகழே அல்லாமல், மறுமையுலகமும் அவனுக்கு இனிமையுடையதாகும். ஆதலால், நாள் தோறும் நல்லறத்தைச் செய்பவனுக்கு இம்மை மறுமையுலகங்கள் கவட்டை வழியில் நடக்கும் திருமணங்கள் (வழியில் உள்ள இரண்டு திருமணத்தில் விருந்துண்டு இன்புறுதல்) போன்றதாம்.

நாய்காணின் கற்காணுவாறு

௩௬௨. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார், பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதின் அறஞ்செய்வார்க் காணுமை,
நாய்காணின் கற்காணு வாறு.

இறப்பதற்கு முன்னர், பல்வகைப்பட்ட நல்லறங்களைச் சிந்தியாமல், பின்னர் செய்யலாம் என்று கருதிக் கையில் பொருள் இருந்த போதே செய்யாதவர், தமக்கு இறுதியைத் தரும் நோய் வந்தபோது, அறம் செய்யலாம் என்று கருதிய நேரத்தில் கையில் பொருளைக் காணாதவரின்நிலை, நாயைக் கண்டபோது கல்லைக் காணாத தன்மை போன்றதாகும்.

அக்காரம் பால்செருக்கும் ஆறு

௩௬௩. தக்கமில் செய்கைப் பொருள்பெற்றால், அப்பொருள்
தொக்க வகையும் முதலும் அதுவானால்,
மிக்க வகையால் அறஞ்செய் கெனவெகுடல்,
அக்காரம் பால்செருக்கும் ஆறு.

ஒருவன் நிலையில்லாத செயல்களைச் செய்யும் பொருளைப் பெற்றால், அப்பொருள் தன்னிடம் சேர்ந்த வகையும் அதற்குரிய காரணமும் அறமே யானால். அறத்தைச் சிறந்த முறையால் செய்க' என்று சினந்து தூண்டுதலானது, சர்க்கரையையும் பாலையும் கலந்து சொரியும் முறைமைத்தாகும்.

தாயர் அலைத்துப்பால் பெய்து விடல்

௩௬௪. உலப்பி லுலகத் துறுதியை நோக்கிக்
குலைத்தடக்கி நல்லறம் கொள்ளார்க் கொளுத்தல்,
மலைத்தழு துண்ணுக் குழவியைத் தாயர்
அலைத்துப்பால் பெய்து விடல்.

அழிதல் இல்லாத உலகத்தில் நன்மையை ஆராய்ந்து நல்லறநெறியை மேற்கொள்ளாதவரை, நல்லவர் அந்நிலையினின்றும் விலக்கி, அறநெறியில் அடக்கி, அவரை நல்லறத்தை மேற்கொள்ளுமாறு செய்தல், மாறுபட்டு அழுது தாய்ப் பாலுண்ணாத குழந்தையைத் தாயர் வருத்திப்பாலை ஊட்டுதலோடு ஒக்கும்.

அறஞ்செய்ய அல்லவை நீங்கி விடும்

௩௪௫. அறஞ்செய் பவர்க்கும் அறவுழி நோக்கித்
திறந்தெரிந்து செய்தக்கால் செல்வுழி நன்றும்.
புறஞ்செய்யச் செல்வம் பெருகும், அறஞ்செய்ய
அல்லவை நீங்கி விடும்.

வேண்டிய காவலைச் செய்வதனால் செல்வம் வளரும். நல்லறங்களைச் செய்வதனால் பாவங்கள் விலகிப் போகும். ஆதலால், அறத்தைச் செய்பவர் அறத்தைச் செய்யும் இடத்தை ஆராய்ந்து வேறுபாட்டை உணர்ந்து செய்தால், தாம் செல்லும் மறுமையுலகத்தில் நன்மை உண்டாகும்.

துஞ்ச வருமே துயக்கு

௩௪௬. தோற்றம் அரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றுந் துணையும் அறஞ்செய்க.— மாற்றின்றி
அஞ்சும் பிணிமூப் பருங்கூற் றுடனியைந்து
துஞ்ச வருமே துயக்கு.

யாவராலும் அஞ்சப்படும் நோயும், முதுமையும், தடுப்பதற்கு அருமையான இயமனுடன் சேர்ந்து அறிவின் மயக்கத்தால் தடையில்லாமல் இறக்குமாறு வந்து சேரும். ஆதலால், பிறப்பதற்கு அருமையான மக்கள் பிறப்பைப் பெற்றதனால், நல்லறத்தைத்தம்மால் இயன்ற அளவு செய்க.

நட்டு அறன் ஆதலே நன்று

௩௪௭. பட்ட வகையால் பலரும் வருந்தாமல்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லறம்
முட்டுடைத் தாகி இடைதவிர்ந்து வீழ்தலின்
நட்டறு னாதலே நன்று.

உண்மை நெறியால் பலரும் வருந்துதல் இல்லாமல் தனக்கு நன்மையைத் தரும் என்று கருதிச் செய்து வந்த நல்லறத்தை, இடையூறு ஏற்படவே இடையில் நிறுத்தி நீக்குவதைவிட, வயலில் பயிரை நட்டுவைத்து அதன் பயனைக் கொள்ளாதவனாலே நன்றாகும்.

நல்லறம் செய்வது செய்யாது கேள்

௱௬௮. பலநாளும் ஆற்ற ரெனினும் அறத்தைச்
சிலநாள் சிறந்தவற்றாற் செய்க. —கலைதாங்கி
நைவது போலும் நுசுப்பினாய் ! நல்லறம்
செய்வது செய்யாது கேள்.

மேகலையைத் தாங்கி வருந்துவது போன்ற இடையினையுடையவளே ! தான் செய்த நல்லறம் தனக்குச் செய்யும் நன்மையைப் போல, தன் உறவினரும் கூட செய்யார். ஆதலால், நல்லறத்தைப் பலநாளும் தொடர்ந்து செய்ய முடியவில்லையானாலும் சில நாளாயினும் சிறந்த முறையில் செய்வீராக.

காப்பாரின் பார்ப்பார் மிகும்

௱௬௯. நோக்கி யிருந்தார் இமைக்கும் அளவின்கண்
நோக்கப் படினும் உணங்கலைப் புட்கவரும்.
போற்றிப் புறந்தந் தகப்பட்ட ஒண்பொருட்கும்
காப்பாரிற் பார்ப்பார் மிகும்.

வெய்யிலில் உலர்த்தும் பொருள்களைக் காவல் காப்பவர் கண்ணிமைக்கும் நேரத்தில், பறவைகள், காவல் காத்தவர் மிகவும் விழிப்போடிருந்தாலும் பொருள்களைக் கவர்ந்து செல்லும். அதுபோல, பாதுகாத்துக் காவல் செய்து உள்ளே வைத்திருந்த சிறப்புடைய பொருளுக்கும், காவல் காப்பவரைவிட, அதனைக் கவர்ந்து கொள்ளப் பார்ப்பவர் பலராவர்.

ஊர்ந்துருளின் குன்று வழியடுப்ப தில்

௱௭. இன்றி யமையா இருமுது மக்களைப் வோ?
பொன்றினமை கண்டும் பொருள்பொருளாக் கொள்ப
ஒன்றும் வகையான் அறஞ்செய்க. ஊர்ந்துருளின்
குன்று வழியடுப்ப தில்.

ஒருவர், தம்மை இன்றி, உயிர்வாழ இயலாத அன்புடைய தாய் தந்தையின் இறப்பைப் பொருளால் தடுக்க முடியாமை யைக் கண்ணுற்றும், பொருளை, ஒரு பொருளாக மதித்துச் சேர்த்துக் கொள்வாரோ ? எனவே, பொருந்திய வழியில் நல்லறத்தைச் செய்க. மலை நகர்ந்து உருண்டால் அதன் வழியைத் தடுக்க வல்லது ஒன்றும் இல்லை.

முயல்விட்டுக் காக்கை தினல்

௩௭௧. அற்றுக நோக்கி அறத்திற் கருளுடைமை
முற்ற அறிந்தார் முதலறிந்தார்.—தெற்ற
முதல்விட் டஃதொழிந்தோர் ஓம்பா ஒழுக்கம்,
முயல்விட்டுக் காக்கை தினல்.

அறத்திற்குக் காரணம் அருளுடைமை என்று, அதன் இயல்பை ஆராய்ந்து, அதன் ஆற்றல் முழுதும் உணர்ந்தவர், அறஞ்செய்து வாழ்பவர் ஆவர். தெளிவாக உணர்ந்த அறத் திற்குக் காரணமாகிய அருளைவிட்டு, அதனுடன் அறத்தை யும் கைவிட்ட ஏனையரது போற்றாத ஒழுக்கம் முயலைவிட்டுக் காக்கையைத் தின்பது போன்றதாகும்.

தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு

௩௭௨. இம்மைத் தவமும் அறமும் எனவிரண்டும்
தம்மை யுடையார் அவற்றைச் சலமொழுகல்,
இம்மைப் பழியேயு மன்றி, மறுமையும்
தம்மைத்தாம் ஆர்க்குங் கயிறு.

தம்மை வீடுபேற்றின்கண் செலுத்தும் தகுதியுடையவர், இப்பிறப்பில் தாம் இயற்றும் தவத்தையும் அறத்தையும் வஞ்சனையால் செய்தல், இப்பிறவியில் பழியை உண்டாக்கு வதோடல்லாமல், மறுமையில் தாமே தம்மைப் பிறப்பின் கண்ணே பிணிக்கும் கயிறாகவும் அமையும்.

34. ஈகை

அயிரை யிட்டு வராஅ அல் வாங்குபவர்

௩௭௩. சிறிய பொருள்கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே—விரிபூ
விராஅம் புனலூர ! வேண்டயிரை யிட்டு
வராஅ அல் வாங்கு பவர்.

மலர்ந்த மலர்கள் கலந்துள்ள நீர்நாடனே! ஒருவருக்குச் சிறு பொருளைக் கொடுத்துப் பெற்ற நல்லறத்தால், மறுமையில் பெரும் பேற்றைப்பெற எண்ணுபவர்கள், 'அயிரை' என்னும் சிறிய மீனைத் தூண்டிலில் வைத்து, 'வரால்' என்னும் பெரிய மீனைப்பிடிப்பவராவர்.

சுரத்திடைப் பெய்த பெயல்

௩௭௪. கரப்புடையார் வைத்த, கடையும் உதவா:
துரப்புடை மன்னர்க்கே துப்புரவ தல்லால்
நிரப்பிடும்பை மிக்கார்க் குதவலொன் றீதல்
சுரத்திடைப் பெய்த பெயல்.

வறியவர்க்குக் கொடுக்காமல் மறைத்து வைத்தவர் சேர்த்து வைத்த பொருள்கள், பகைவரை விலக்கும் அரசர்க்கே உதவுவனவாம்; இறுதிக்காலத்தில் தமக்கும் உதவாவாம். எனவே, வறுமைத் துன்பம் மிக்கவர்க்குப் பயன்படுமாறு ஒரு பொருளினைக் கொடுத்தல், பாலை நிலத்தில் பொழிந்த மழையைப் போன்றதாகும்.

அறுமோ குளநெடிது கொண்டது நீர்

௩௭௫. பல்லாண்டு மீண்டிப் பழுதாய்க் கிடந்தது
வல்லான் தெரிந்து வழங்குங்கால்—வல்லே
வளநெடிது கொண்ட தறஅ தறுமோ
குளநெடிது கொண்டது நீர்.

மிகுந்த நீரையுடைய ஆழமாகிய குளம், இறைத்தால் நீர் வற்றுதலைப்போல, பலவாண்டுகள் சேர்த்துப்பயன் படாமல் வீணாய்க் கிடந்த பொருளினைக் கொடுக்க வல்லவன், வரிசை அறிந்து கொடுக்கும்போது, அதனால் வரும் ஆதாயம் விரைவில் நீங்காது நெடுங்காலம் நிற்பதாகும்

கடிஞையில் கல்லிடுவா ரில்

௩௭௬. நினைத்த திதுவென்றந் நீர்மையை நோக்கி
மனத்த தறிந்தீவார் மாண்டார்.—புனத்த
குடிஞை யிரட்டும் குளிர்வரை நாட!
கடிஞையில் கல்லிடுவார் இல்.

தினைப்புனத்தில் பறவைகள் ஒலிக்கும் குளிர்ந்த குறிஞ்சி நிலத்தலைவனே! பிச்சைப் பாத்திரத்தில் கல்லை இடுவார் இலர். ஆதலால், இவன் கருதி வந்தது, 'இப்பொருளுக்கு என்று' அவனது இயல்பினை ஆராய்ந்து, மனத்தில் கருதி வந்த பொருளை அவனது முகத்தால் அறிந்து கொடுப்பவர், ஈகையால் பெருமையுடையவராவர்.

வாடியக் கண்ணும் பெருங்குதிரை யாப்புள்வேருகி விடும்

௩எஎ. கூஉய்க் கொடுப்பதொன் றில்லெனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்ருரே துன்பந் துடைக்கிற்பார்.
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே ருகி விடும்.

பெருமைக்குரிய குதிரை, மிகத்தான் வாடியபோதும், சேணமிட்டுக் கட்டவே, வாடாத குதிரை போன்று வேறு பட்டு, வேலைசெய்ய வல்லதாகும். அதுபோல, மற்றவரை அழைத்துக் கொடுப்பதற்குத் தன்னிடம் பொருள் இல்லை என்ருலும், தம்மை அடைந்தவர்களுக்குப் பொருளைக் கொடுத்துப் பழகியவர், மற்றவர் துயரத்தைப் போக்க வல்லவராவர்.

கொடுத் தேழையாயினுர் இல்

௩எஅ. அடுத்தொன் றிரந்தார்க்கொன் றீந்தாரைக் கொண்டார்
படுத்தேழை யாமென்று போகினும் போக.
அடுத்தேறல் ஐம்பாலாய் ! யாவர்க்கே யாயினும்
கொடுத்தேழை யாயினுர் இல்.

இருள் செறிந்தாற்போன்று கரியநிறத்தோடு ஐந்து பகுதிகளாக ஒப்பனை செய்யப்பட்ட கூந்தலையுடையவளே! தம்மை நெருங்கி ஒரு பொருளைக் கேட்டவருக்கு ஒரு பொருளைக் கொடுத்தவரை, பொருளைப் பெற்றவர், கொடுத்தவரை இழிவுபடுத்தி, 'இவன் ஏழையாம்' என்று சொல்லிச் சென்ருலும் செல்லட்டும். எத்தகைய வராஞுலும் மற்றவருக்குக் கொடுத்து ஏழையானவர் ஒருவருமிலர்.

இறைத்தோறும் ஊறுங் கிணறு

௩௭௯. இரப்பவர்க் கீயக் குறைபடுமென் றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ ?—பரப்பிற்
றுறைத்தோணி நின்றுலாம் தூங்குநீர்ச் சேர்ப்ப !
இறைத்தோறும் ஊறுங் கிணறு.

கடல் துறையில் தோணிகள் நின்று உலாவும் நிறைந்த நீரையுடைய நெய்தல் நிலத்தலைவனே ! கேட்பவருக்குப் பொருளைக் கொடுத்தால் செல்வம் குறையும் என்று கருதி, மற்றவருக்குக் கொடுக்காமல் செல்வத்தை மறைப்பவர், இறைக்க இறைக்கச் சுரக்கின்ற கிணற்றைக் காணாதவரோ ?

நீர் வரையவாம் நீர்மலர்

௩௮௦. இரவலர் தம்வரிசை யென்பார் மடவார்:
கரவலராய்க் கைவண்மை பூண்ட—புரவலர்
சீர்வரைய வாகுமாம், செய்கை சிறந்தெனைத்தும்
நீர்வரைய வாநீர மலர்.

'கொடையின் அளவு வந்து கேட்ட வறியவரின் அளவினதாகும்' என்று கூறுவர், அறிவு நிரம்பாதவர். அஃது அவ்வாறன்று. நீர்வாழ் மலர்களின் தண்டின் நீளம், நீரின் அளவினதாகும். அதுபோல, வறியவர்களுக்குச் சிறப்புடன் கொடுக்கும் கொடைகள் யாவும், கைப்பொருளை மறைக்காதவராய் வள்ளல் தன்மையை மேற்கொண்ட மன்னர்களின் சீர்மையின் அளவினதாகும்.

கொடுபபவர் தாமறிவார் தஞ்சீ ரளவு

௩௮௧. தொடுத்த பெரும்புலவன் சொற்குறை தீர
அடுத்தர என்றற்கு வழியரோ என்றன்,
தொடுத்தின்ன ரென்னலோ வேண்டா. கொடுப்பவர்
தாமறிவார் தஞ்சீ ரளவு.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவனது புகழைச் செய்யுளில் பாடிய, பாலைக்கௌதமன் என்னும் பெரும் புலவன், 'யானும் என் மனைவியும் வீடுபேற்

றைப்பெற வேள்வி இயற்றி. வீடுபேற்றைத்தா' என்றான். அவன் சொன்ன குறையைத் தீர்ப்பதற்குப் பத்து வேள்விகள் இயற்றிக் கொடுத்து, 'நீ விழைந்த வீடுபேற்றில் நீடுவாழ்க' என்றான். அவ்வாறே அவனும் அவன் கிழத்தியும் வீடுபேற டைந்தனர். ஆதலால், ஒன்றனை வேண்டுவோர், புனைந்து 'இவர் இவ்வியல்பினர்' என்று புகழ்ந்துரைத்தல் வேண்டா. இயல்பாகக் கொடுக்கும் பண்பினர், தம் நிலையின் அளவினை அறிந்து தாமே கொடுப்பர்.

ஒன்றுரு முன்றிலோ இல்

௩அ௨. மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுள்
பொன்றிறந்து கொண்டு புகர்வாக நல்கினாள்,
ஒன்றுரு முன்றிலோ இல்.

மழையென்பதில்லாமல் வறண்டிருந்த காலத்திலும் பாரியின் இளமகளிர், தம்மிடம் இரந்து வந்த பாணனுக்கு, நீர் உலையுள் பொன்னைக் கொண்டு வந்து திறந்து சோறாகவே வழங்கினர். ஆதலால், சென்று இரந்தால் ஒரு பொருளும் இல்லாத வீடே இல்லை. (புகர்வு—சோறு)

பெண்பெற்றான் அஞ்சான் இழவு

௩அ௩. ஏற்றார்கட் கெல்லாம் இசைநிற்பத் தாமுடைய
மாற்றார் கொடுத்திருப்ப வள்ளன்மை—மாற்றாரை
மண்ணகற்றிக் கொள்கிற்கும் ஆற்றலார்க் கென்னரி
பெண்பெற்றான் அஞ்சான் இழவு. தாம்

தம் புகழ் நிலைக்குமாறு, இரந்தவர்களுக்கெல்லாம் தம்மிடத்துள்ள பொருளை இல்லையென்று மறுக்காமல் வழங்கிவருதலே வள்ளல் தன்மையாகும். பகைவரை வென்று, அவர்தம் நாட்டை அவர்களிடத்திலிருந்து நீக்கித் தமதாக்கிக் கொள்ளும் வலிமையுடையவர்களுக்கு, எப்பொருளும் அரிதாவதில்லை; எளிதாகும், அரிய அழகுள்ள பெண்ணை மனைவியாகப் பெறவிழைபவன், பொருள் இழப்பிற்கு அஞ்சமாட்டான்.

கூலிக்குச் செய்துண்ணும் ஆறு

௩அ௪. பயனேக்கா தூற்றவும் பாத்தறிவொன் றின்றி
இசைநோக்கி ஈகின்ற ரீகை,—வயமாப்போல்
ஆலித்துப் பாயும் அலைகடற் றண்சேர்ப்ப !
கூலிக்குச் செய்துண்ணும் ஆறு.

வெற்றியையுடை குதிரையைப் போல் ஒலித்துப் பாயும் அலைகளையுடைய குளிர்ந்த நெய்தல் நிலத்தலைவனே! பிறர்க்கு ஒன்றைக் கொடுப்பதனல் மறுமையில் கிடைக்கும் பயனை ஆராயாமல், மிக்க பகுத்தறிவும் இல்லாமல் புகழையே கருதிக் கொடுப்பவர்தம் கொடையானது, கூலிக்குத் தொழில் செய்து உண்ணும் நெறியோடு பொருந்தும்.

இரந்தூட்குப் பன்மையோ தீது

௩அ௫. மருஅ தவனும், பலரொன் றிரந்தால்,
பெருஅன் பேதுறுதல் எண்ணிப்,—பொருஅன்
கரந்துள்ள தூஉம் மறைக்கும். அதனல்
இரந்தூட்குப் பன்மையோ தீது.

இல்லையென்று மறுக்காத பண்புடையவனும் பலர் ஒன்று சேர்ந்து ஒருபொருளை இரந்தால், எல்லாருக்கும் தன்னல் கொடுக்க இயலாமையால், அதனைப் பெருதவனின் கலக்கத்தைக் கருதி மனம் பொறுத்துக் கொள்ளாமல், தன்னிடத்துள்ள பொருளை மறைப்பான். ஆதலால், இரந்துண்ணுதற்குப் பலருடன் செல்லுதல் தீதாகும்.

உயவு நெய்யுள் குளிக்கும் ஆறு

௩அ௬. தோற்றம் பெரிய நசையினர் அந்நசை
ஆற்ற தவரை அடைந்தொழுகல்,—ஆற்றுள்
கயல்புரை உண்கண் கனங்குழாய் ! அஃதால்
உயவுநெய் யுட்குளிக்கும் ஆறு.

ஆற்றினுள் துள்ளிஎழும் கயல்மீனைப் போன்ற மையுண்ட கண்களையும் பொன்னலான காதணிகளையும் உடையவளே ! தோற்றத்தால் மிகுந்த ஆசையை உடையவர், அவ்வாசையைத் தீர்க்காதவரை அடைந்து வாழ்தலானது, வண்டிச் சக்கரம் உருளுவதற்கு இடும் உயவு நெய்யில் குளிப்பதனோடு ஒக்கும்.

மிக்கவை மேவிற் பரிகாரம் இல்

ந அஎ. காப்பிகந் தோடிக் கழிபெருஞ் செல்வத்தைக்
கோப்பெரியான் கொள்ளக் கொடுத்திரா தென்செய்வர் ?
நீத்த பெரியார்க்கே யாயினும் மிக்கவை
மேவிற் பரிகாரம் இல்.

தன் காவலைக் கடந்து செங்கோல் நெறியிலே சென்று குடிமக்களின் மிகப்பெரும் செல்வத்தை அரசன் கைக் கொண்டால், குடிமக்கள் கொடுக்காமல் வேறு என்ன செய்வர் ? எல்லாம் துறந்த துறவிகளாயினும் தம்மால் தானமாகக் கொடுக்கப்பட்ட மிக்க பொருளைத் தாமே விரும்பி அனுபவித்தால் அதனைத் தடுப்பதற்குரிய வழியில்லை.

35 வீட்டுநெறி

தம்மை உடைமை தலை

ந அஅ. எண்ணக் குறைபடாச் செல்வமும் இற்பிறப்பும்
மன்ன ருடைய உடைமையும் — மன்னரால்
இன்ன ரெனல்வேண்டா. இம்மைக்கும் உம்மைக்கும்
தம்மை யுடைமை தலை.

எண்ணுதற்கு அரிய செல்வத்தாலும் நற்குடிப் பிறப்பாலும் அரசரைத் தன்வயத்தவராக்கிக் கொண்ட உரிமையாலும் அரசரே தம்மை இத்தன்மையரென்று சுட்டிப் புகழ்தலைவிரும்பவேண்டா. இம்மைக்கும் மறுமைக் கும் நன்மை தரும் தம் இறைவனை உடைமையாகப் பெறுதலே சிறந்ததாகும்.

கொல்லிமேல் கோட்டுவைத் தார்

ந அகூ. அடங்கி அகப்பட ஐந்தினைக் காத்துத்
தொடங்கிய மூன்றினால் மாண்டீண் — டுடம்பொழியச்
செல்லும்வாய்க்கேமம் சிறுகாலைச் செய்தாரே
கொல்லிமேல் கோட்டுவைத் தார்.

தாம் அடக்கமுடையவராகித் தம் ஐம்புலன்களையும் பாதுகாத்துத் தாம் மேற்கொண்ட ஒழுக்கத்தில், மனம் மொழி மெய்களால் மாண்புடையவராகி, இவ்வுலகத்தில்

உடல் நீங்க, தாம் செல்லும் மறுமைக்கு நன்மை தருவனவற்றை இளம்பருவத்தில் செய்தவரே, கொல்லி மலைமேல் நெற்கூடு அமைத்தவராவர்.

துறவா உடம்பினான் என்ன பயன்

௩௯௦. நட்டாரை யாக்கிப் பகைதணித்து வையெயிற்றுப்
பட்டார் துடியிடை யார்ப்படர்ந் — தொட்டித்
தொடங்கினா ரில்லத்த தன்பின் துறவா
உடம்பினான் என்ன பயன் ?

நண்பர்களைச் செல்வர்களாக்கிப் பகைவரை அழித்துக் கூரிய பற்களையும் பட்டுடை விளங்கும் உடுக்கைபோன்ற இடையினையும் உடைய மகளிர்மேல் காதல் கொண்டு, இல்லறவாழ்வில் பொருந்தி வாழத் தொடங்கியவர்கள், இல்லறத்திற்குப் பின்னர் துறவறவாழ்வை மேற்கொள்ளாத உடம்பால், என்ன நன்மையைப் பெறுவார்கள் ?

இருதலையும் காக்கழித் தார்

௩௯௧. இல்வாழ்க்கை யானும் இலதானும் மேற்கொள்ளார்
நல்வாழ்க்கை போக நடுவுநின் — றெல்லாம்
ஒருதலையாச் சென்று துணியா தவரே
இருதலையும் காக்கழித் தார்.

இல்லற வாழ்வையோ துறவறவாழ்வையோ கடைப் பிடிக்காதவர், தம் வாழ்நாள் வீணாக, இவ்விருவகை வாழ்க்கைக்கும் இடையே நின்று, எல்லாவற்றையும் உறுதியாகத் தெளிந்து ஒரு வாழ்வையேனும் துணிந்து மேற்கொள்ளாதவர், காவடியின் இரண்டு முனைகளிலும் உள்ள பொருள்களைப் போக்கி வெறும் தண்டினைத் தாங்கினவராவர்.

கூற்றங் குதித்துய்ந் தறிவாரோ இல்

௩௯௨. வளமையும் தேசும் வலிமையும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம் — உளவாய்
மதித்தஞ்சி மாறுமஃ தின்மையால் கூற்றம்
குதித்துய்ந் தறிவாரோ இல்.

செல்வச் செழிப்பும், புகழ்ஒளியும், ஆற்றலும், அழகும், இளமையும் நற்குடிப் பிறப்பும் ஆகியவை எல்லாம் ஒருவனுக்கு இருப்பதாக மதித்து, அஞ்சி விலகும் இயல்பு இயமனிடத்து இல்லை. ஆதலால் இயமனைக் கடந்து பிழைத்துச் சென்றமையை அறிந்தவர், ஒருவரும் இலர்.

தன்னுசை அம்பாயுள் புக்குவிடும்

௩௯௩. கொண்டொழுகு மூன்றற் குதவாப் பசித்தோற்றம்
பண்டொழுகி வந்த வளமைத்தங்—குண்டது
கும்பியிலுந் திச்சென் றெறிதலால் தன்னுசை
அம்பாயுள் புக்கு விடும்.

தான் மேற்கொண்டு ஒழுகுகின்ற விருந்து புரத்தல், தெய்வத்திற்குச் சிறப்புச் செய்தல், இரந்தார்க்கு ஈதல் என்ற மூன்றனுக்கும் உதவாது, ஆசையால் உள்ளத்துள் தோன்றிய வேட்கை, முற்பிறப்பில் தான் செய்த நல்வினையால் பெற்ற செல்வத்தை, ஆசை சென்ற வழியிலே சென்று செலவழித்த லாவது, தன்னை நரகத்தில் தள்ளி எறிதலால், அவ் ஆசையானது அம்பாய்த் தன் உள்ளத்துள் புகுந்து அழித்து விடும்.

முள்ளித்தேன் உண்ணுமவர்.

௩௯௪. செல்வத் துணையுந்தம் வாழ்நாட் டுணையுந்தாம்
தெள்ளி உணரார், சிறிதினல் செம்மாந்து,
பள்ளிப்பால் வாழார், பதிமகிழ்ந்து வாழ்வாரே
முள்ளித்தேன் உண்ணு மவர்.

செல்வநிலையாமையையும் தம் வாழ்க்கை நிலையாமையையும் தாம் தெளிவாக ஆராய்ந்து அறியாமல், செல்வம் சிறிதளவு பெற்றமையால் மகிழ்ந்து, அருந்தவத்தவர் வாழும் தவப்பள்ளிகளில் வாழாமல், இல்லறத்தில் மகிழ்ந்து வாழ்கின்றவரே, முள்ளி மலரில் உள்ள தேனை உண்டு இன்பம் அடைபவர்க்கு ஒப்பாவர்.

பல்கட்டப் பெண்டிர் மகார்

௩௯௫. வன்னெஞ்சி னர்பின் வழிநினைந்து செல்குவை
என்னெஞ்சே! இன்றிழிவை யாயினய்,—சென்னெஞ்
இல்சுட்டி நீயும் இனிதுரைத்துச் சாவாதே. சே!
பல்கட்டப் பெண்டிர் மகார்.

எனக்கு நன்மையை நினைக்கும் மனமே! இரக்கமற்ற கொடிய மனமுடையார் பின்னே, செல்லும் வழியை நினைத்துச் சென்றால், இப்பொழுதே அழிந்தாய். நீயும் இல்லற வாழ்வை நன்கு மதித்து, மற்றவர்க்கு இன்சொல் மொழிந்து சாகாமல், நெஞ்சமே! இல்லறத்தில் இருந்து துறந்து செல்க. அப்பெண்டிரும் பிள்ளைகளும் பல தளைகளாவர் என்பதனை உணர்க.

யானைபோய் வால்போகா வாறு

௩௬௬. **சிறந்ததம் சுற்றமும் செய்பொருளும் நீக்கித்**
துறந்தார் தொடர்ப்பா டெவன்கொல் ?—கறங்கருவி
ஏனல்வாய் வீழும் மலைநாட ! அஃதன்றோ
யானைபோய் வால்போகா வாறு.

முழங்கும் அருவிகள் தினைப்புனத்துள் வீழ்ந்து ஓடும் குறிஞ்சி நிலத்தவனே ! தம் சிறப்புடைய உறவினரையும் தாம் சேர்த்த செல்வத்தையும் விலக்கி இல்லறத்தைத் துறந்தவர், உடம்பின்மேல் பற்றுடைய வராய் வாழ்தல் யாதுபயன் கருதியோ ? அச்செயல், ஒரு வாயிலில் யானையின் பெரியஉடல் நுழைந்து, அதன்வால் நுழையாமல் தகைப்புண்டு நிற்பதைப் போன்றதல்லவா ? அப்பற்றுள்ளம் !

குழிப்பூழி ஆற்ரு குழிக்கு

௩௬௭. **எனைப்பல் பிறப்பினும் ஈண்டித்தாம் கொண்ட**
வினைப்பயன் மெய்யுறுதல் அஞ்சி—எனைத்தும்
கழிப்புழி ஆற்றமை காண்டும். அதுவே
குழிப்பூழி ஆற்ரு குழிக்கு.

எவ்வளவு என எண்ணலாகாப் பல்வகைப் பிறப்புகளிலும் அடைந்து, தாம் தேடிக்கொண்ட தீவினைகளின் விளைவுகள், உண்மையாகத் தம்மேல் சேர்வதற்கு அஞ்சி, தாம் அனுபவித்துக் கழிக்கும்போது எவ்வளவு நல்வினைப் பயனும் போதாமையைக் காண்கிறேம். அவ்வாறு போதாமை ஒருகுழியில் தோண்டிய புழுதி அக்குழியை நிரப்பப் போதாமை போன்றதாகும்.

நீரற நீர்ச்சார் வறும்

௩௯௮. திரியும் இடிஞ்சிலும் நெய்யும்சார் வாக
எரியும் சுடரே ரனைத்தாய்த்—தெரியுங்கால்
சார்வற ஓடிப் பிறப்பறுக்கும்; அஃதேபோல்
நீரற நீர்ச்சார் வறும்.

தங்கிய நீர் வற்றவே, அந்நீரைச் சார்ந்து வாழுகின்ற உயிரினங்கள் அழியும். திரியும் அகலும் நெய்யும் துணையாக இருத்தலால் விளக்கு அழகாக எரியும். அம் மூன்றும் நீங்கவே விளக்கு அவியும். அவ்வாறே ஆராய்ந்தால், பிறப்புக்குக் காரணமானவை எல்லாம் நீங்கவே, அந்நீக்க மானது விரைந்து பிறப்பை நீக்கும்.

பயின்றது வானகம் ஆகிவிடும்

௩௯௯. ஓதநீர் வேலி உலகத்தார் அந்நெறி
காதலர் என்ப தறிந்தலால்,—யாதொன்றும்
கானக நாட ! பயிலார்; பயின்றது
வானக மாகி விடும்.

முல்லை நிலத்தலைவனே ! தாம் பழகிய செய்கை தீயதா யினும், வான்வீட்டைப்போன்று இன்பம் தந்து பின்னர் நீங்குதல் முடியாததாகிவிடும். ஆதலின், குளிர்ந்த கடல்நீரை எல்லையாக உடைய உலகத்தில் வாழ்பவர் அனைவரும் தாம் பழகி வாழ்கின்ற அந்நெறியை விரும்புவர் என்பதனை அறிந்தல்லாமல் வேறுவழியில் பழகார்.

பிரம்பூரி என்றும் பதக்கேழ் வரும்

௪00. பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்
நிரம்பிய கர்ட்சி நினைந்தறிந்து கொள்க.
வரம்பில் பெருமை தருமே. பிரம்பூரி
என்றும் பதக்கேழ் வரும்.

பல்வேறு வகைப்பட்ட விரிந்தசமயத்தாருடைய ஒழுக்கத்தின் மேல், பல நெறிகளிலும் செல்லாதவராகி, அச்சமயக் கொள்கைகளுள் நன்மை நிரம்பியகொள்கையை ஆராய்ந்தறிந்து தமக்குக் கொள்கையாக மேற்கொள்க. அவ்வாறு மேற்கொண்டால், பிரம்பூரி என்னும் நெல், என்றும் பதக்கு ஏழுபதக்காக விளைவதைப் போன்று எல்லையில்லாத பெருமையைக் கொடுக்கும்.

CONNEMARA PUBLIC LIBRARY
29 JUN 1977

பழமொழி நானூறு

செய்யுள் முதற்குறிப்பு அகரநிரல்

அகத்தால்	௩௩௦
அகந்தூய்மை	௧௭௬
அகலம் உடைய	௨௨
அங்கண்	௨௩௦
அங்கோல்	௨௫௧
அடங்கி	௩௮௯
அடர்ந்து வறியராய்	௮௩
அடுத்தொன்று	௩௭௮
அடையப்பயின்	௨௨௪
அடைய அடைந்தா	௨௪௭
அமர்நின்ற	௩௧௮
அமர்விலங்கி	௩௨௩
அமையாவிட	௨௦௮
அரிதவித்து	௧
அருமையுடை	௧௯௯
அருவிலை மாண	௩௪
அருளுடையா	௨௧௦
அல்லதுசெய்	௨௧௪
அல்லல்ஒரு	௩௫௧
அல்லவை	௧௦௨
அல்லவையுள்	௨௪
அறஞ்செய்பவர்	௩௬௫
அறிவன்று அழகன்று	௬௧
அறிவினுல் மாட்சி	௨௭
அற்ருக	௩௭௧
அன்பறிந்தபின்	௧௮௦
அன்பின்நெகி	௧௬௭
ஆஅம் எனக்கு	௧௮௪
ஆஅய் வளர்	௨௩௨
ஆகும் சமய	௨௩௮
ஆணம் உடைய	௩௦
ஆணியாக்கொண்ட	௧௬௬
ஆண்டகை	௨௭௪
ஆண்டீண்டு	௮௫
ஆமாலோ என்று	௬௨
ஆயிரவராயினும்	௨௮
ஆய்ந்தறிவினர்	௫௮
ஆவிற்கரும்பனி	௪௩
ஆருச்சினத்தன்	௫௩
ஆற்றப்பெரியார்	௨௯௨
ஆற்றவினை	௩௧௪
ஆற்றவும் கற்ருர்	௫
ஆற்ருரிவரென்	௧௬
ஆற்றுந்தகைய	௨௩௭
ஆற்றும் இளமை	௨
இகலின் வலியாரை	௨௯௪
இசைவகொடு	௨௨௬
இஞ்சி அடைத்து	௩௨௧
இடுகுடைத்தேர்	௨௭௭
இடையீடுடையார்	௧௩௯
இணரோங்கி	௭௩
இதுமன்னும்	௨௩௬
இம்மைத்தவமும்	௩௭௨
இம்மைப்பழியும்	௨௯௯
இயற்பகை	௩௦௭
இரப்பவர்க்கீய	௩௭௯
இரவலர்தம்	௩௮௦
இருகயல்உண்	௩௨௭
இல்வாழ்க்கை	௩௯௧
இறப்பச் சிறியவர்	௫௨
இறப்ப எமக்கீது	௮௮
இனியாருமில்லாதார்	௧௫௪
இனியாரை உற்ற	௧௨௮
இன்றியமையா	௩௭௦
ஈட்டிய ஒண்பொருள்	௮௨
ஈனுலகத்தாயின்	௩௬௧

உடுக்கை ஙஙகூ
உடைப்பெரும் உருசு
உடையதனை உக
உணற்கு இனிய சு
உரிஞ்சி நடப்பாரை சஉ
உரிமைதனில் தம்மோா ஙஉகூ
உருத்தெழு ஞாட்பி ஙஉஉ
உரைசான்றசான்றோர் கஉரு
உரைத்தவர் நாவோ உகூசு
உரைத்தாரை மீதூரா ஙகஎ
உரை முடிவு எ
உலப்பிலுலகத்து ஙசுச
உவப்ப உடன் உஎக
உழந்ததூஉம் க௦க
உழையிருந்து கஎஎ
உளைய உரைத்து ஙருச
உள்ளது ஒருவர் ஙசக
உள்ளூரவரால் உ௦ங
உறுஅவகை உஅச
உறுகண் ஙஉச
உறுமக்களாக கஉஉ
உற்றதற்கெல்லாம் ருச
உற்றுவிறைவர் ஙகங
உற்றன் உறுஅன் கஎங
ஊக்கி உழந்தொருவர் உ௦கூ
ஊழாயினுரை க௦ரு
எங்கணொன்றில்லை கருஎ
எங்கண் இனையர் உசஉ
எண்ணக்குறை ஙஅஅ
எதிர்த்தபகை உஅச
எந்நெறியானும் ஙஙஉ
எமக்குத்துணை கரு௦
எமரிதுசெய்க உசுகூ
எய்தா நகை ருரு
எய்ப்புழிவைப்பாம் கஙஎ
எல்லாத் திறத்தும் சுங
எல்லையொன்று உருஎ
எவ்வந்துணை உஉஅ
எனக்குத்தகவன்றால் எஎ
எனைப்பலவே கஅஅ
எனைப்பல் ஙகூஎ
ஏற்றார்கட்கு ஙஅங
ஒக்கும்வகையான் ஙஙங
ஒட்டியகாதல் கஉரு
ஒருவர் உரைப்ப ககூ
ஒருவன் உணராது கஅஎ
ஒல்லாதவின்று ககூஅ
ஒளியாரை உசகூ
ஒற்கப்பட்டா உருங
ஒற்கந்தாம் உற்ற எசு
ஒன்றால் சிறிதால் கருங
ஒன்னார் அடநின்ற ங௦ச
ஓதநீர்வேலி ஙகூகூ
ஓரும் ஒருவர் கசஎ
ஓர்த்த கருத்தும் கூரு
கூடாங்கொண்ட உகங
கடுப்பத்தலை ககூ௦
கட்டுடைத்தாக கஎச
கண்டறிவார் கசக
கண்ணில் கயவர் கக௦
கண்ணுள் மணி கஙசு
கரப்புடையார் ஙஎச
கருந்தொழிலராய கூஅ
கருவினுட்கொண்டு ஙருசு
கல்லாதவரிடை கசு
கல்லாதான் ...கற்றார் கங
கல்லாதான் ......காட்ட கச
கல்லாதும் உக
கல்வியகலமும் உருகூ
கல்வியானுய கரு
கழுமலத்தில் உஙக
களமர் பல உ௦ச
கள்ளியகிலும் ஙசு
கறுத்தாற்றி சு௦
கற்றதொன்......கருமத்தை கருக
கற்றதொன்... குடி எச

கற்றறிந்தார்	௧௦
கற்றார் பலரை	௨௯௧
கற்றாற்று வாரை	௧௭
கற்றானும்	௧௨
கன்றிமுதிர்ந்த	௮௧
காடுறை வாழ்க்கை	௯௭
காட்டிக் கருமங்	௧௭௧
காத்தாற்று	௩௨௦
காப்கான் மட	௧௪௮
காப்பிகந்தோடி	௩௮௭
காவலனை	௨௭௫
கழாரமார்ப	௫௧
கூரைத்துக்கொள	௨௩௫
குலத்துச் சிறியார்	௧௧௨
கூஉய்க்கொடு	௩௭௭
கூரறிவினர்	௧௦௩
கூற்றுமுயிர்	௨௫௫
கெடுவல் எனப்பட்ட	௪௦
கேட்பாரை	௧௮
கையார	௫௭
கைவிட்ட	௨௧௨
கொடித்திண்	௨௬௭
கொடையும்	௩௨௬
கொண்டொழுகு	௩௯௩
கொழித்துக் கொள	௬௨௧
கோவாத சொல்	௧௧௭
சாலமறைத்து	௨௪௩
சிறப்புடை	௨௭௬
சிறந்ததம்	௩௯௬
சிறந்தநுகர்	௩௫௮
சிறிதாய கூழ்	௧௯௧
சிறிய பொருள்	௩௭௩
சிறியவர்	௯௦
சீர்த்தகு	௨௭௮
சூடப்பட்டு	௨௪௦
சுட்டிச்சொல	௨௨௯
சுற்றத்தார்	௧௭௮
செந்நீரார்	௧௬௩
செம்மாந்து	௩௧௬
செயல்வேண்டா	௨௬௪
செயிரறுசெங்	௨௬௦
செய்தகருமம்	௬௬
செய்த கொடுமை	௧௧௯
செருக்குடைய	௨௭௯
செருக்கெழு	௨௭௨
செல்லற்க சேர்	௧௯௬
செல்வத் துணை	௩௯௪
செறலிற்கொலை	௩௪௪
செறிவுடை	௨௬௫
சேர்ந்தார்	௩௫௦
சொல்லாமை	௩௩௧
சொல்லெதிர்ந்து	௧௧௩
சொற்றொறும்	௩
தூக்கமில்	௩௬௩
தக்காரோ	௯௨
தங்குற்றம்	௩௯
தத்தமக்கு	௩௪௦
தத்தம்பொருள்	௨௦௬
தந்தீமையில்லா	௧௩௩
தந்தொழிலாற்றும்	௯௩
தந்நடைநோக்கார்	௩௭
தமக்குற்ற	௩௪௯
தமரல்லவரை	௨௯௦
தமராலும்	௨௨௭
தமரேயும்	௬௮
தமனென்றிரு	௩௪௬
தம்மான்முடிவு	௧௬௦
தருக்கியொழுகி	௧௨௧
தலைக்கொண்ட	௧௫௯
தலைமைகருதும்	௨௫௪
தழங்குகுரல்	௨௯௭
தற்றூக்கி தந்துணை	௧௫௫
தன்னலிகிற்பான்	௩௦௫
தன்னின்வலி	௩௨௫
தன்னைமதித்து	௩௫௫

தூக்குற்ற போழ்தில் ௧௧௬
தாநட்டொழுகு ௧௨௯
தாமகத்தால் ௧௪௦
தாமாற்றகில் ௧௬௪
தாமேயும் ௨௮௩
தாயானும் ௬௮
தாரேற்ற ௩௧௫
திரியுமிடிஞ்சிலு ௩௯௮
திருந்தாய் நீ ௧௧௧
தீப்பால் வினை ௭௮
தீர்ந்தேமென ௧௩௦
தீயனவல்ல ௨௬௬
துயிலும் பொழு ௧௯௫
துன்னிய இருவர் ௨௦
தூய்மை மனத்த ௩௩௬
தெரியாதவர் தம் ௫௬
தெரியாதார் சொல்லும் ௧௧௮
தெரிவுடையாரோடு ௩௧
தெருளாதொழுகு ௧௯௭
தெள்ளியுணரும் ௩௦௯
தெற்றப்பகைவர் ௮௭
தெற்றப்பரிந்து ௧௩௪
தெற்றஅறிவு ௧௭௨
தெற்றவொருவரை ௯௬
தேர்ந்துகண் ௧௨௪
தொடித்தோள் ௩௩௪
தொடிமுன்கை ௨௧௦
தொடுத்த பெரும் ௩௮௧
தொன்மையின் ௨௧௫
தோற்றத்தால் ௪௮
தோற்றம் அரிதாய ௩௬௬
தோற்றம் பெரிய ௩௮௬
நட்டலையிலராகி ௨௬
நட்டாரையாக்கி ௩௯௦
நண்பொன்றி ௧௩௨
நயவரநட் ௧௮௧
நலிந்தொருவ ௩௧௦
நல்கூர்ந்தவர் ௩௩௮
நல்லவும் ௨௬௨
நல்லவை கண்டக்கால் ௨௫
நல்லார் நலத்தை ௯
நற்கறிவில்லா ௨௯
நற்பாலகற்றுரும் ௧௮௫
நனியஞ்ச ௨௪௧
நன்கொன்றறி ௩௪௫
நன்றேயொருவர் ௩௪௨
நாடறியப்பட்ட ௨௦௫
நாடிநமரென்று ௩௪௭
நாட்டிக்கொள ௧௭௫
நாணுர் பரியார் ௧௧௪
நாணின்றி ௩௨௮
நாவின் இர ௨௧௯
நிரந்துவழி ௧௦௪
நிரம்பநிரைய ௨௮௯
நிரைதொடி ௮௦
நிலத்தின் மிகை ௧௫௮
நிலையிய பண் ௧௬௬
நிறையான் ௩௩௭
நினைத்ததிது ௩௭௬
நீர்த்தகவில் ௫௦
நீர்த்தன்றெருருவர் ௩௮
நீருர்ந்தும் ௭௦
நூக்கியவர் ௩௧௨
நெடியது காண் ௪௭
நெடுங்காலம் ௬௫
நெறியாலுணராது ௧௦௮
நோக்கியறிகல்லா ௧௪௬
நோக்கியிருந்தார் ௩௬௯
நோவவுரைத்தாரை ௫௯
படரும்பிறப்பில் ௨௨௦
பட்டவகையால் ௩௬௭
பண்டின்னர் ௩௪௮
பண்டுருத்து ௨௩௯
பயனேக்கா ௩௮௪
பரந்ததிறலாரை ௩௩

பரந்தவர்	௪௦௦
பரியப்படுபவர்	௮௯
பலநாளும்	௨௩௪
பல்கிளையுள்	௬௯
பல்லாண்டு	௩௭௫
பல்லாரவை	௭௬
பன்னும் நின்ற	௨௩௪
பன்னுள்தொழில்	௨௮௦
பாப்புக்கொடி	௧௩௮
பாரதத்துள்	௩௫௭
பாற்பட்டு	௨௪௬
பிண்டியின்	பாயிரம்
புரையக் கலந்தவர்	௧௬௫
புரையின்றி	௧௨௬
புலமிக்கவரை	௮
புன்சொல்லும்	௧௯௨
பூத்தாலும்	௯௪
பூந்தண் புனற்	௧௮௬
பூவுட்கும் கண்ணாய்	௪௪
பெரிய குடி	௮௯
பெரிய நட்டார்	௧௪௨
பெரியாரை	௨௯௩
பெரியார்க்கு	௧ ; ௬
பெருமலைநாட	௧௮௨
பெற்றாலும் செல்	௨௧௬
பேதுறவு	௧௦௭
பேருலையுள்	௧௪௩
பொருத்தம் அழி	௨௪௫
பொருந்தாதவரை	௩௦௦
பொருந்தாப்பழி	௪௧
பொருளல்லார்	௨௮௫
பொலந்தார்	௨௫௮
பொல்லாத சொல்லி	௧௧௫
பொற்பவும்	௩௨
மடங்கிப் பசி	௭௯
மடியை வியங்	௧௬௮
மரம்போல்	௨௨௫
மல்லற் பெரும்	௩௬௦
மறந்தாலும்	௨௦௭
மறுஅ தவனும்	௩௮௫
மறுமனத்தன்	௨௫௦
மறுமையொன்று	௧௦௯
மறையாதினிது	௩௧௧
மனங்கொண்ட	௧௮௯
மனத்தினும்	௨௬௩
மன்னவன்	௨௫௨
மாடம் அழிந்த	௭௨
மாணைப்பகைவரை	௧௦௦
மாய்வதன்	௩௬௨
மாரியொன்று	௩௮௨
மாற்றத்தை	௩௦௮
மானமும் நாணும்	௨௩
மிக்கபழி	௯௯
மிக்குடையர்	௪௯
மிக்குப் பெருகி	௯௧
முகம்புறத்து	௨௯௧
முடிந்ததற்கு	௧௬௨
முட்டின்று	௧௩௫
முதுமக்கள்	௧௨௦
முயலவோ	௧௪௯
முல்லைக்கு	௭௫
முழவொலி	௭௧௮
முழுதுடன் முன்	௧௬௧
முறைதெரிந்து	௨௪௪
முற்பெரிய	௨௩௩
முன்னவிந்து	௨௮௮
முன்னின்றார்	௩௫௩
முன்னும் ஒருகால்	௬௪
முன்னையுடையது	௨௧௧
மெய்ந்நீரர்	௧௯௩
மெய்ம்மையே	௨௮௧
மெய்யா	௩௫௨
மொய்கொண்டு	௩௨
யாந்தீய	௧௪௪
யாவரே யானும்	௧௯௪
யானுமற்று	௩ ௬

வருவாய் ௨௦௨
வரைபுரை ௩௧௯
வலியாரை ௩௦௩
வழங்கலும் ௨௧௭
வழங்கார் ௨௨௨
வழிப்பட்டவ ௨௫௩
வளமையும் ௩௯௨
வன்சார்பு ௨௮௬
வன்பாட்டவர் ௩௦௧
வன்னெஞ்சினார் ௩௯௫
வாட்டிறலானை ௩௦௨
விடலறிய ௩௪௩
விடலமை ௨௭௦
விட்டுக் கருமம் ௧௭௦
விதிப்பட்ட ௧௧
விரும்பி அடை ௨௨௧
விலங்கேயும் ௧௨௭
விழுத்தொடையர் ௩௫
விழுமிழை ௩௩௫
விளக்குவிலை ௪
விளிந்தாரே ௧௮௩
வினைப்பயன் ௪௫
வீங்குதோள் ௧௫௬
வெஞ்சின ௨௮௨
வெண்குடை ௨௪௮
வெள்ளமாண் ௧௭௯
வெள்ளம்பகை ௨௯௮
வெள்ளம் வருங்காலை ௧௪௫
வெற்றிவேல் ௨௪௫
வென்றடு ௨௯௫
வேந்தன் மதித்து ௨௭௩
வேளாண்மை செய்து ௧௫௨
வைத்ததனை ௩௬௯

29 JUN 1977

29 JUN 1977

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	18	ஓக்கமே	ஒக்கமே
2	30	கல்லாதவகளுவே	கல்லாதவனுகவே
11	9	உருவாக்கியது	கரைத்தாற்
26	18	நூராயிரவர்க்கு	நூருயிரவர்க்கு
29	21	வில்லேவிட்டு	வில்லேக்கண்ட வுடன்
35	14	மூர்க்கர்களுக்கு	மூர்க்கனுக்கு
51	1	கண்டறிந்	கண்டறியா
52	1	கூறியவாம்	கூரியவாம்
52	5	கூறியவாம்	கூரியவாம்
64	28	வாரும்தரம்	வாரும்தாம்
78	10	எண்றெண்ணி	என்றெண்ணி
82	3	புந்தபோது	புகுந்தபோது
90	19	நிலத்தலேனே	நிலத்தலேவனே
91	16	செய்வதன்வெல்லே	செய்வதென் வல்லே
127	25	நெண்டியாதல்	நொண்டியாதல்